50வது ஆண்டை நோக்கி.......

# மல்லிகை

ஆசிரியர் : டொமினிக் ஜீவா



'எங்கட' தயாபரன் -
என்று சொன்னாலே போதுமே!

நவம்பர் 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை - 40/=

# திருமண சேவை

## 15 வருடத் திருமணசேவை நிறைவினை முன்னிட்டு வேல் அமுதன் பாரிய சேவைக் கட்டணக் குறைப்பு!



விபரம்:

விவரங்களுக்குத் தனிமனித நிறுவநர், 'சுயதெரிவுமுறை முன்னோடி', மூத்த, புகழ் பூத்த, சர்வதேச, சகலருக்கு மான திருமண ஆலோசகர் / ஆற்றுப்படுத்துநர் குரும்ப சிட்டியூர் , மாவியமு வேல் அமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி மாலையிலோ, சனி, ஞாயிறு நண்பகலி லேயோ தயங்காது தொடர்பு கொள்ளலாம்!

தொலைபேசி:
2360488/ 2360694/4873929

சந்திப்பு:
முன்னேற்பாட்டு ஒழுங்குமுறை

முகவரி:
8-3-3 மெற்றோ மாடிமனை (வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு எதிராக, நிலப் பக்கம், 33ஆம் ஒழுங்கை வழி) 55ம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06

**துரித– சுலப மணமக்கள் தெரிவுக்குச் சாலச் சிறந்த முறை சுயதெரிவுமுறையே!**
**ரம்மிய–மகோன்னத மணவாழ்வுக்குக் குரும்பசிட்டியூர் மாயெமு வேல் அமுதனே!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகை

'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
ஆதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈன நிலை கண்டு துள்ளுவர்'

உலகப் பாராளுமன்ற வரலாற்றிலேயே, இலங்கை நாடாளுமன்றத்தில் மாத்திரம் தான் ஓர் இலக்கியச் சஞ்சிகை விதந்து பாராட்டப் பெற்ற பெறுமதி மிக்க சம்பவம் இடம் பெற்றுள்ளது. அங்கு பாராட்டப்பட்ட சஞ்சிகை மல்லிகை. இதனை நாடாளுமன்றப் பதிவேடான ஹன்ஸார்ட் (04. 7. 2001) பதிவு செய்ததுடன் எதிர்காலச் சந்ததியினருக்காக ஆவணப்படுத்தியுமுள்ளது. அத்துடன் உலக வரலாற்றில் முதன் முதலில் சலூனுக்குள் இருந்து வெளிவந்த இலக்கியச் சஞ்சிகையும் மல்லிகையே தான்!

**50 – ஆவது ஆண்டை நோக்கி...**

**நவம்பர்**

**378**

*'Mallikai' Progressive Monthly Magazine*

மல்லிகை அர்ப்பணிப்பு உணர்வுடன் வெளிவரும் தொடர் சிற்றேடு மாத்திரமல்ல- அது ஓர் ஆரோக்கியமான இலக்கிய இயக்கமுமாகும்.
மல்லிகையில் வெளியாகும் எழுத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பானவர்கள்!



201/4, Sri Kathiresan St,
Colombo - 13.
Tel : 2320721
mallikaiJeeva@yahoo.com


## சிற்றேடுகளின் வரலாற்றுச் சாதனைகளில் ஒன்று- மல்லிகை ஆண்டு மலர்கள்!

மல்லிகையின் 46வது ஆண்டுமலர் தயாராகின்றது.

சென்ற ஆண்டு தயாராகி வெளிவந்த மல்லிகையின் 45-வது ஆண்டு மலரின் உள்ளடக்கங்களைப் பற்றி இலக்கிய உலகமே வியந்து பாராட்டி மகிழ்ந்தது, மெய்யாகவே எம்மையெல்லாம் மெய் சிலிரக்க வைத்த இலக்கியப் பெரும் நிகழ்வாகும்.

இன்றும் கூட, ஐரோப்பிய நாடுகளில் இருந்தெல்லாம் அந்த மலரைக் கேட்டுப் பலரும் எம்முடன் தொடர்பு கொண்டு வருகின்றனர், தரமான தமிழ் இலக்கிய ரஸிகர்கள்.

ஆனால், அவர்களினு இந்த இலக்கியக் கோரிக்கையை எம்மால் நிறைவேற்ற முடியாமல் இருப்பதையிட்டு மெய்யாகவே வருந்துகின்றோம்.

இது எமக்கொரு புதிய பாடத்தைக் கற்றுத் தந்துள்ளது.

மல்லிகையின் ஆண்டு மலர்களின் பெறுமதி அந்த அந்த ஆண்டுக் கணக்கைப் பொறுத்ததல்ல.

மலர்கள் மாதங்களைக் கடந்தும், ஆண்டுகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமலும் எந்தக் காலத்திலும் அதற்கொரு இலக்கிய அந்தஸ்து- மவுசு- இருந்து வரவே செய்துள்ளது என்ற அநுபவப் பாடம்தான் அது!

இதுவரை காலமும் இந்த மண்ணிலும் சரி, இலக்கியச் சிற்றேடொன்று இத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுக் காலங்களாகத் தொடர்ந்து வெளி வந்து கொண்டிருப்பதுடன், ஆண்டு மலர் களையும் தவறாமல் ஆண்டுக்காண்டு வெளியிட்டு வருகின்ற ஆரோக்கியமான சங்கதிதான் முக்கியமானது.

இத்தனைக்கும் சொல்லில் அடங்காத எத்தனையோ சோக நிகழ்வுகளை- சம்பவ ங்களை- நேரடியாகக் கண்டு, அநுபவித்து அதையெல்லாம் நெஞ்சுறுதியுடன் ஏற்றுக் கடந்து நிமிர்ந்து நிற்கப் பழகிக் கொண்டு தான் வந்திருக்கின்றது.

- இந்த இடைக் கால முப்பது ஆண்டு உள்நாட்டு யுத்தக் கெடுபிடிகளுக்கு மத்தி யிலும், யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி வந்து கொண்டிருந்த மல்லிகை என்ற இச்சிற்றேடு, கொடுத்து வந்துள்ள பாரிய விலை சிற்றிலக்கிய ஏடுகளின் வரலாற்றி லேயே வேறெந்த ஏடுகளுமே கொடுத்திருக் காத விலையாகும்.

இந்த நிலைத்திருப்புக்கும் அயராத உழைப்பிற்கும் அடிப்படைக் காரணங்க ளாக- அத்திவாரங்களாக- அமைந்திருந் தது- அதனது அடிப்படையான இலக்கிய நேர்மையாகும். இந்த மண்ணில் பரந்து பட்டு வாழும் தமிழ்ப் படைப்பாளிகளின் படை ப்பு நலன்கள் மீது கொண்டுள்ள வற் றாத பாசமாகும். நெஞ்சார்ந்த நேசிப்புமாகும்.

எனவே, மல்லிகையின் நேர்மையான இலக்கியப் பங்குப் பணியை மனதார நேசி க்கும் படைப்பாளிகள் நேர, காலத்துடன் தத்தமது ஆக்கங்களை எமக்கனுப்பி உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளு கின்றோம்.

அவதூறு சொல்பவர்களைக் காலம் ஒதுக்கித் தள்ளிவிடும். தூரவிலகி நின்று குத்தல் கதைகள் பேசி, மல்லிகையின் இலக்கிய நேர்மையைக் கொச்சைப்படுத் தியவர்களை எதிர்காலம் தனது கவனத்தி ற்கே எடுத்துக் கொள்ளாது- அப்படியே வரலாற்றிலிருந்தும் ஒதுக்கித் தள்ளிவிடும்.

இன்றுவரைக்கும் இதுதான் நடந்து வந்துள்ளது!

இடையிடையே இப்படியான இலக்கிய மனநோயாளிகள் எம்மீது நமது நேர்மை யான உழைப்பைக் கொச்சைப்படுத்தும் விதமாக எரி சொற்களை- பொய் அவதூறு களை- அள்ளியள்ளிச் சொரிந்து கொள் வதை நாம் ஓரளவுக்கு வரவேற்கவும் தான் செய்கின்றோம்.

காரணம், இவர்களினது இந்தக் காழ்ப் புணர்ச்சிக் கவனிப்பு இல்லாமல் போய் விட் டால், நாம் இயல்பாகவே சோம்பிப் போய் செயலற்று விடுவோமா? என்ற நியாயமான மனப் பயமும் நம்மிடையே உண்டு.

எனவே, இலக்கிய உலகில் நம்மை நாமே வளப்படுத்திக் கொள்ள இந்தப் பொச் சரிப்புக் கவனிப்பு எமக்கு அவசியம் தேவைதானோ என நாம் அடிக்கடி நினை த்துப் பார்ப்பதுமுண்டு.

மல்லிகையின் ஆண்டு மலர்களின் உள்ளடக்கங்கள், வெறும் எழுத்துக் கூட் டங்களல்ல!- அல்லது சம்பிரதாயமான வெற் றோசைக் கூச்சல்களுமல்ல.

மல்லிகையின் ஆண்டு மலர்களின் உள் ளடக்கமாக வெளிவரும் கருத்துக்க்கள், கற் பனைகள், எதிர்காலச் சந்ததியினரின் ஆழ மான நேசிப்புக்கும் மரியாதைக்கும் உரி யவையாகத் திகழும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலி!-மகத்தான மனுக்குலச் சாதனை!

**'மனித சாதனையின் உச்சம்!'** என்று கூடச் சொல்லலாம். தொடர்ந்து பத்திரிகைச் செய்தியைப் படித்து வருபவர்களுக்குக் கடந்த பல நாட்களாகச் சிலி நாட்டுச் சுரங்கத்தில் ஏற்பட்ட திடீர் விபத்தின் மூலம் முற்றாக மூடுப்பட்டு உலகிலிருந்தே துண்டிக்கப்பட்டிருந்த சுரங்கத் தொழிலாளர் 33 பேர்களைப் பற்றிய செய்தியே ஒவ்வொருவரினதும் மனசைக் குடைந்து கொண்டேயிருந்த சர்வதேசச் சோகமாகும்.

மனுக்குலம் முழுவதுமே, திகைத்துப் போய்விட்ட சர்வதேசத் துக்க நிகழ்ச்சி இது!

கிட்டத்தட்ட 68 நாட்கள் உலகத் தொடர்புகள் அனைத்தும் முற்றாகத் துண்டிக்கப்பட்ட நிலையில், முற்றாக மூடுண்ட சூழ் நிலையில் மன நம்பிக்கையைச் சிறிதும் இழந்து விடாது, வெளியேயும் உள்ளேயும் மூடுண்ட மக்களுக்காக சதா இயங்கிக் கொண்டிருந்தவர்களை முழு மனுக்குலமுமே இன்று மெய்யாகவே பாராட்டி மகிழ்கின்றது.

இந்தத் திடீர், நெருக்கடி நிலைக்கு ஆட்படுத்தப்பட்ட துயர நிகழ்விலிருந்து சிலி நாடு மாத்திரமல்ல, உலகப் பொதுசனங்களுமே விடுபட்டு, நிம்மதியடையச் சிலி நாட்டு ஜனாதிபதி எடுத்துக் கொண்ட முன் முயற்சிக்காக அந்த நாட்டு ஜனாதிபதியையும், தொழில்நுட்வியலாளர்களையும் பொறுமையாக இருந்து இந்த சர்வதேச நெருக்கடியில் இருந்து விடுபட ஒத்துழைத்த சகல சிலிநாட்டுப் பிரஜைகள் அனைவரையும் நெஞ்சாரப் பாராட்டுகின்றோம். கௌரவிக்கின்றோம்.

ஆயிரம் தான் சர்வதேசக் கசப்புக்கள் இருந்த போதிலும் கூட, நாட்டுக்கு நாடு யுத்த நிலைமைகள் தோன்றிய போதிலும் கூட, சர்வதேச நெருக்கடிகள் தோன்றிய போதிலும் கூட, மனுக்குலம் உயிர்ப்புடன் இருப்பதை இத்தகைய சம்பவங்களில் சர்வதேச சமூகம் காட்டும் ஒருமைப்பாடும் அக்கறையும் தான் மனுக்குலத்தை இன்றும் கூட ஆரோக்கியமாக வைத்திருக்கின்றது என்பதுதான் உண்மை!

- வரலாறு காணாத உள்நாட்டுக் குழப்பம் காரணமாக அல்லோலகல்லோப் பட்டு வாழ்வின் சொல்லொணா நெருக்கடிகளுக்குள்ளான வட பகுதி மக்களினது சார்பாக எங்களது மனமார்ந்த வாழ்த்துக்களை தப்பி வந்த இவர்களுக்கு உரித்தாக்குகின்றோம்.

நமது நெஞ்சைக் குளிர்வித்த செய்தி என்னவென்றால், இந்தப் பூமி பந்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் சகல தேசத்து மக்களும் ஒன்றிணைந்து, இந்தச் சுரங்க விபத்திற்குள் ஆட்பட்டிருக்கும் மக்களை எந்த விதமான இடையூறுகளுமின்றி வெளிவர வேண்டும் என்ற ஏகோபித்த வேண்டுதல், முடிவில் மாபெரும் உலக சாதனையை நிறைவேற்றி வைத்தது என்பதுதான்.

- மூடுண்ட மக்கள் விடுதலை பெற்று விட்டனர்.

மனுக்குலம் இதிலிருந்து பாடத்தைக் கற்றுக் கொண்டாலே, போதும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப் படம்

# தனித்துவமிக்க தயாபரன்

—கே. எஸ். சிவகுமாரன்

சில வருடங்களுக்கு முன் நண்பர் தயாபரனை முதற் தடவையாகக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சந்தித்தேன். அவரை முன்பின் நான் சந்தித்ததில்லை என்று நினைக்கிறேன். வெளிநாட்டுப் பயணமொன்றின் பின் தாயகம் திரும்பிய போது, சுங்கத் திணைக்களப் பரிசோதகராக எனது பொதிகளை செக் பண்ணவிருந்தார். சட்ட விரோதமான பொருள்கள் பாக்கில் இல்லை என்று அவரிடம் கூறியதும் அவர் அழகாகப் புன்முறுவல் செய்து, "பரவாயில்லை! எங்கே போட்டு வாறியள்?" என்றார்.

"Film Festival புதுதில்லியில் நடைபெற்றது. அதற்குப் போய்விட்டு வாறேன்" என்றேன். அவர் என்னுடன் பேசிய தோரணையைப் பார்த்தால், அவர் ஏற்கனவே என்னை அறிந்து வைத்திருந்தார் என ஊர்ஜிதப்படுத்திக் கொண்டேன்.

அவருடைய கவர்ச்சி முகம், புன்சிரிப்பு, பேசும் முறை, சிலேடையின்றி நேர்மையாகவே தமது கருத்துக்களைத் துணிந்து கூறல் போன்றவை எல்லாம் என்னை வசீகரித்தன.

சிலவேளைகளில் சிலரை எமக்கு உடனடியாகவே பிடித்து விடுகிறது. அவர் என்னை விட வயதில் பன்மடங்கு குறைந்தவராயினும், அவருடன் நட்புக் கொள்ள விழைந்தேன்.

'பரன்' என்ற பெயரில் எழுதி வந்தவர் தயாபரனே என்பது பின்னர் தெரியவந்தது. அவருடைய பள்ளிக்கூட விஷமத் தனங்களைப் படித்ததும், அவருடைய இளமைக் கால அநுபவங்களூடாக அவர் எவ்வளவு தூரம் இப்பொழுது வளர்ந்து விட்டார் என்பதையறிய முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாபரனின் குடும்பப் பின்னணியும், அவர் ஆளுமைக்கு அரண் செய்துள் ளது என நம்பலாம். அவருடைய பெற்றோர், அவருடைய துணைவியார் (வசந்தி), அவருடைய மாமனார் (மறை ந்த, மதிப்புக்குரிய ராசையா மாஸ்டர்), அவருடைய சகோதரி (மனோன்மணி), அவருடைய மைத்துனர் (பேராசிரியர் சண் முகதாஸ்)- இவர்களின் செல் வாக்கு ஓரளவு இவரிடம் பரிமளித்தா லும், தன் னியல்பான ஆளுமை காலக் கிரமத்தில் இவரிடம் உருவாகிற்று எனக் கூறலாம்.

தயாபரனின் இலக்கியப் பங்களிப்பு கள் பற்றி விரிவாக நான் அதிகம் சொல் வதற்கில்லையாயினும், இவருடைய எழுத்து நடை பற்றி விசேஷமாகச் சொல்ல வேண்டும்.

தேர்ந்தெடுத்த சொற்களை உரிய இடத்தில் பயன்படுத்துவது நல்ல எழுத்து நடைக்கு அத்தியாவசியமா னது என்பர். (Right word at the Right place என்பர்) இந்தப் பண்பை 'பர'னின் எழுத் திலும் பேச்சிலும் நாம் பரக்கக் காண லாம்.

அதிகம் புழக்கத்திலுள்ள சொற்க ளைத் தான் அவர் பயன்படுத்துவத னால் இலகுவான எளிய நடை அவரு க்கு வாய்த்திருக்கிறது.

கனதியான விஷயங்களையும் எளி தில் எவரும் புரிந்து கொள்ளும் விதத் தில் தெளிவாகவும், வாசகருடன் உரை யாடுவது போன்றும் அவர் எழுதுகிறார்.

எல்லோராலும் நகைச்சுவையாக எழுத முடியாது. ஆனால், தயாபரனின் எழுத்தில் உயர்ந்த பண்பிலமைந்த நகைச்சுவை குடி கொண்டிருக்கும். புதுமைப் பித்தன், மு. வரதராசன், ஏர்ன ஸ்ட் ஹெமிங்வே, மார்க் டுவெயின், ஆர்னல்ட் கெட்டில், ரெஜி சிறிவர்த்தன, மோர்வின் டி சில்வா போன்றோரின் எழுத்து நடை எனக்கு அதிகம் பிடிக் கும். இவர்களுடைய எழுத்துகள் பெரும்பாலும் சிறிய சிறிய வசனங்க ளைக் கொண்டவை. தர்க்கரீதியான ஆற்றொழுக்கு நடை அவர்களுடை யது. அவ்விதமான நடைபோன்றே தயாபரனின் எழுத்து நடையும் அமை கிறது என்று கூற முடியும்.

தயாபரன் அவருடைய துணைவி யார் போன்றே நிறைய வாசிப்பவர் என நினைக்கிறேன். ஆங்கில மொழியிலும் சிங்கள மொழியிலும் சரளமாக அவர் உரையாடுவார். இதுவும் அவருக்கு ஒரு வரப்பிரசாதம் என நினைக்கி றேன்.

சுங்கத் திணைக்களத்தில் தற்ச மயம் உயரதிகாரியாகப் பணிபுரியும் தயாபரன் தமது தனியாற்றலினால் (Individual Talent) மேலும் உயர்ச்சி பெற முதியவனாகிய நான் வாழ்த்தி மகிழ்கி றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுங்கதை

# சீதனம்

—வேல் அமுதன்

செல்லம்மாவுக்குத் தனியார் வைத்தியசாலையில் Bypass Surgery இன்று காலை.

செல்லம்மாவின் கணவன் செல்வரத்தினம், தன் மனைவிக்கு நேர்ந்த இடரை நினைத்து ஆட்டம் கண்டுவிட்டார். அரச ஊழியனாக வேலை பார்க்கும் சாமானியனான அவருக்கு, ஒன்றா இரண்டா பிரச்சினை....? அடேயப்பா! ஒரேயடியாக ஒரு நூறு பிரச்சினைகள் ஒன்று சேர்ந்து உதைத்தால் அவரால் அதனை எப்படித் தாங்கமுடியும்?

அவர் அறுவைச் சிகிச்சைக்கு உடனடியாக மூன்று இலட்சம் முற்பணம் கட்ட வேண்டிய வந்தமை ஒரு பிரச்சினை. செல்லம்மாவின் Blood Group ரத்தத்தோடு சேரக் கூடிய ரத்தம் வழங்கக் கூடிய திடகாத்திரரைக் கண்டு பிடிக்கப் பட்டபாடு இன்னொரு பிரச்சினை. Wheel Chair இல் செல்லம்மா Theatre க்கு அழைத்துச் சென்றபோது, "வாறன்" என்பதற்குப் பதிலாக "போறன்" என வாய்தடுமாறி சொல்லியிருந்தமை இன்னொரு பிரச்சினை.

இப்படிச் சொல்லில் அடங்கா எத்தனையோ பிரச்சினைகள் இருந்தபோதும், இனி அவ் வைத்தியசாலையிலிருந்து, விடுபட்டு வீடு போகும் வேளை மீதி வைத்தியக் கட்டணமாக சுமார் நாலு இலட்சத்தை எப்படிக் கட்டுவது? அதனை ஆரிடம் புரட்டுவது? என்பன போன்ற கேள்விக் கணைகள் அவரைப் படாதபாடு படுத்துகின்றன....!

இப்போது மாலை ஐந்து மணி.

தகவல் தெரிந்து, சுகம் விசாரிக்க பிரவாகித்த ஜனவெள்ளம் (உற்றார், உறவினர்) செல்லம்மாவின் படுக்கை அறையை நிரப்பி வழிந்தோடியது. அத்தோடு அவர்களின் கேள்விகள் செல்வரத்தினத்தின் மண்டையைப் போட்டுக் குடைந்தன.

பற்றாக்குறைக்கு ஊர் சோதிடர் சோதிநாதன் எப்படியோ செய்தி அறிந்து விழுந்தடித்து ஓடி வந்தார். "ராசி பலன் பாத்தனீங்களா? இப்ப விருச்சிக ராசிக்கு நல்லா இருக்காதே!"- சோதிடர் சோதிநாதனின் காலப் பலனிது.

செல்வரத்தினத்தின் மனம் நொருங்கிப் போக, ஆத்திரமடைந்த அவர், "முதலிலிலை நீர் வெளியே போம்!" என இரைந்தார்.

இந்நேரம் இன்னொரு உருவம் அவ்வறையுள் நுழைந்தது. அது வேறு ஆருமல்ல! சிகிச்சை முன்னேற்றத்தை அவதானிக்க நியமிக்கப்பட்ட நேர்ஸ்.

"மாத்தையா!"- நேர்ஸ் கூப்பிட்டாள்.

"என்ன? சொல்லுங்கோ"- செல்வரத்தினம் மிக ஏக்கத்தோடு வினாவினார்.

"நோனாவுக்கு அறிவு வந்திட்டுது!"- நேர்ஸ்சின் நம்பிக்கை ஊட்டிய வார்த்தைகள் தான் இவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடலைப் பருவத்தாய்...

—த. கலாமணி

'ஆலமரமே, நீ
ஏன் வளர்ந்தாய்?'
என்கின்றாய்
(என்) விழுதுகளைப் பார்த்து
உன்னுள்
பொருமுகிறாய்.
சுதந்திரமாய் நீ சிந்திக்க
முட்டுக்கட்டை
நான் என்பாய்
சிறு பிள்ளைத் தனமாயும்
என்மேல்
பழி சொல்வாய்.
'அயலானையும் நேசி!' என்ற
போதனையை
மறந்து விட்டாய்
'போதிக்க, நான் என்ன
பொடியனா?' எனப்
புலம்புகிறாய்.
புயலும் நெருக்கிடையும்
நிறைந்தது தான்
விடலை.
அப்பருவம் கடந்தும் நீ
ஆத்திரம் ஏன்
கொள்கின்றாய்?

இடக்குப் பேச்சுப் பேசி
எவரையும்
எள்ளாதே!
மூத்தோரைக் கனம் பண்ணு
மூப்ப
அறிவிடைத்து.
ஞானம் வித்தை எல்லாம்
முயற்சியின்றி
வருவதல்ல.
குருவே தெய்வம் என்று
போற்றி
உபாசனை செய்.
'சென்ரிமென்ற்' இனி வேண்டாம்.
சுயமாய்ச்
சிந்தனை செய்.
புதிய ஆத்திசூடி
புதிதாகக்
கற்றுக் கொள்.
'ரோதனம் தவிர்'
'தூற்றுதல் ஒழி'
'நேர் படப் பேசு'
'சொல்வது தெரிந்து சொல்'
'ரஸத்திலே தேர்ச்சி கொள்'
'ஞேயம் காத்தல் செய்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதி?

# – செ.கணேசலிங்கன் நாவல்

**–செல்லக்கண்ணு**

பிறந்து வளர்ந்த மண்ணான ஈழத்தை விட்டகன்ற எழுத்தாளரின் இன்றைய நிலையைத் 'தீவிரவாதி?' என்ற நாவல் தெட்டத் தெளிவாக்குகின்றது. அந்நிய நாடுகளுக்கான ஈழத்தவர் புலப்பெயர்வு பெருக்கெடுத்துத் தசாப்தங்கள் மூன்றுக்கும் அதிகமாகிவிட்டது. இம் மண்ணில் பூத்த மலர்கள் 'இடம்பெயர்ந்தோர்', 'புலம் பெயர்ந்தோர்', 'புகலிடவாசிகள்' என்ற அடையாளங்களோடு அந்நிய நாடுகளிலும் மணம் பரப்ப எத்தனித்தன. இது இலக்கியவாதிகளுக்கும் சாரும். சாத்தியமாகவும் இருந்தது. ஆனால், காலப் போக்கில் அந்த மலர்கள் வாடத் தொடங்கியதை இலக்கிய நோக் கர்கள் நன்கறிவர். நீரை விட்டகன்ற மீன் குஞ்சின் நிலையே அவர்களுக்கு இன்று ஏற்பட்டிருப்பதை- அவர்களது சொந்த மண்ணின் அபிமான வாசகர்கள் மனங் கொள்கின்றனர். சொந்த மண்ணின் வாழ்வு நிலைகள் அவர்களுக்கு அந்நியமாகிவிட்டது. எனவே, இந்தப் புகலிட வாசிகள் எந்த மண்ணிற்குப் பிடுங்கி எறியப்பட்டனரோ- அம்மண்ணின் வாழ்வைத் தம்மால் யதார்த்தமாகச் சித்திரிக்க முடியுமென்ற நிலையில் புகலிட வாழ்வின் யதார்த்தங்களைத் தம் படைப்புகளில் சித்திரித்து வருவதை இன்று கண்ணாரக் காண முடிகின்றது. இதே நிலையிலேயே 'தீவிரவாதி?' நாவலின் படைப்பாளியான செ. கணேசலிங்கனும் இன்று படைப்பூழியம் செய்வதை இந்நாவலைக் கருத்தூன்றி வாசித்த பின்னர் கிரகிக்க முடிந்தது.




செ.கணேசலிங்கன் ஈழத்தின் மூத்த தீவிர மார்க்சிய இலக்கியவாதிகளிலொருவர். நாற்பதுக்கும் மேற்பட்ட நாவல்களைத் தமிழ் வாசகர்களுக்குத் தந்தவர். சிறுகதைத் தொகுப்புகள் 06ஐயும், கட்டுரைத் தொகுப்புகள் 17ஐயும் வெளியிட்டுள்ளார். 'குமரன்' என்ற மார்க்சிய, முற்போக்குச் சஞ்சிகையையும் சிலகாலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் உழைப்பில் தயாரித்து வெளியிட்டவர். 'நீண்ட பயணம்', 'செவ்வானம்', 'சடங்கு' போன்ற வசகரது பேரபிமானத்தைப் பெற்ற நாவல்கள் செ.க. படைத்தவை. 'நீண்ட பயணம்' பஞ்சமர் இலக்கியத்தின் பிதாமகர் கே.டானியலுக்கு முன்னர், இவரே பஞ்சமரின் போர்க் குணத்தை இலக்கியமாக்கியவரென்ற சாதனையை இவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. அடித்தட்டுத் தொழிலாளா, விவசாய வர்க்கத்தின் அவலங்கள், ஏக்கங்கள் என்பன ஏற்கனவே இவர் படைத்த நாவல்களின் அடிநாதமாக அமைந்ததை இவரது விசிறிகள் நன்கறிவர். சொந்த மண்ணான ஈழத்தின்- பெரும்பாலும் வட புலத்தின் பிரச்சினைகளை மார்க்சிய அணுகுமுறையில் படைத்துப் பாராட்டுகளோடு கண்டனங்களையும் சந்தித்தவர். இன்று தமிழகத்தில் வாழ்கிறார். அங்கும் செ.க.வின் பேனா/ முதலாளித்துவ, பிற்போக்குச் சமூக அமைப்பை நோக்கி- இவரது இளமைக் கால, நெடுநாள் இலக்கியத் தோழர் எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ)யைப் போல்- இன்றும் குறி வைத்துக் கொண்டே இருக்கின்றது.

செ.கணேசலிங்கன் அண்மையில் வெளியிட்ட நாவலே 'தீவிரவாதி?' புலம் பெயர்ந்த ஏனைய படைப்பாளிகளைப் போல், சமகாலத்தில் தான் வாழும் தமிழக மண்ணின் வாழ்வையே இந்நாவலில் சித்திரித்துள்ளார். தனியார் வர்த்தகத் துறை ஊழியர்களது தொழில்சார் பிரச்சினைகள், தொழிற்சங்க அணுகு முறைகள், பெண்ணியம், தமிழ் சினிமா, கலை என்பனவே நாவலின் பேசு பொருளாக்கப்பட்டுள்ளன. செ.கணேசலிங்கனின் படைப்பாற்றலின் முதிர்ச்சி எழுத்து நடையில் தரிசனமிடுகிறது. 'சுப்பர் சோனிக்' வானூர்தியாகக் கதை நகர்கிறது. வாசகரை மார்க்சிய வாடை வருடுகிறது. கதை தமிழகத்தை மையங் கொண்டிருந்தாலும் அம் மண்ணின் பேச்சு வழக்கு முக்கியப்படுத்தப்படவில்லை! சகல தரத்து, பிரதேச வாசகருக்குமான பொதுப் பேச்சு வழக்குத் தான் இடம் பெற்றுள்ளது. எனவே நாவலுக்கு இந் நடைமுறை வலுவானதொரு ஜனரஞ்சகத்தை உபரிக்கின்றது.

நாவலின் நாயகன் குணசேகரன். மார்க்சியத்தில் நனைந்து தோய்ந்தவன். உயர் கல்விமான். சட்டத்தரணி. திருமண பந்தத்தில் சங்கமிக்க ஒப்பாதவனை பெற்றோர்கள் நிர்ப்பந்தித்துக் குடும்பஸ்தனாக்குகின்றனர். தந்தையுமாகிறான். நடைமுறை வாழ்வுக்கு எதிரான கொள்கைப் போக்கால் அவனால் நிரந்தர வாழ்விடத்தில் வாழ முடியாதேற்பட வேறூர் செல்கிறான். கல்விப் புலமை கணிக்கப்பட்டு அவன் அவலப்படும் அடித்தட்டுத் தொழிலாளருக்காக உழைக்க வேண்டியேற்படுகிறது. தமிழ்ச் சினிமாவில் தடம் பதித்த இளமைக் கால நண்பனைச் சந்திக்கும் வாய்ப்புத் தேறுகிறது. அவன் மூலமாக உதவிகளும் கசிகின்றன. இவனது கொள்கைகளின் ஈர்ப்பால் பட்டதாரி நந்தினி சிநேகமாகிறாள். அவளுள் கிடந்த மார்க்சிய, பெண்ணிய விதைகளுக்கு இவன் பாசனமிட்டுச் செடியாக்குகிறான். இந்நட்பு படுக்கை அறைவரை நீடிக்கிறது. திருமண பந்தத்திலல்லாது! இப்படியாக நாவலின் கதை மார்க்சியத்தைத் தொட்டுத் தமிழ் சினிமாவுக்குள் மூக்கை நுழைத்துப் பெண்ணியத்துள் பள்ளி கொள்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தினியின் வருகை நாவலைப் பெண்ணியத்துக்குள் நகர்த்துகிறது. அந்த விடயத்தில் மார்க்சியத்தின் முகம் எத்த கையதென்பது வாசகருக்குத் தேறுகிறது. 'சமையல் பெண்களுக்கு விரக்தியான வேலை. அது களையப்பட வேண்டும்' என்ற பொதுவுடைமைவாதி லெனின் (பக்: 63) கருத்து நூலில் உண்டு. அத்தோடு 'பெண்ணினம் ஆண்கள் போலச் சுதந்திரம் பெறுவதற்குப் பாலியலில் ஆணுக்குக் கிடைக்கும் சுதந்திரம் அனைத்தும் பெண் களுக்கும் கிட்ட வேண்டும். அப்போதே ஆண், பெண் சமத்துவமாக, சுதந்திரமாக வாழ முடியும்' (பக்: 109) என்ற இலங்கைய ரான குமாரி ஜெயவர்த்தனாவின் கருத்தும் நூலில் கிடைக்கின்றது. பெண்பால் என்ற விடயத்தில் நாவல் அவர்களது பாலியல் உணர்வு குறித்தே பேசுகிறது. அந்த வகையில் இன்றைய தமிழ்ப் பெண்ணுக்கு உடல் உறவுப் பிரச்சினை மட்டுந்தான் உண்டா? என்ற கேள்வியையும் எழுப்புகி ன்றது.

ஆண்களிருவரோடு ஏற்கனவே சல்லா பித்தவள் நந்தினி. அவளுக்கு அது குண சேகரனிடமும் கிடைக்கின்றது. 'தாங்ஸ்' கூறி நன்றி பகருவதற்குப் பதிலாக அதை முத்தத்தின் மூலம் வெளிப்படுத்துவதை எதிர்பார்க்கிறாள். இதன் மூலம் ஸ்பரிஸ இன்பம் கிடைக்கும்! எனவே நந்தினிக்கு நாவலில் சிற்றின்ப சுகத்தை நாவலாசிரியர் அதிகமாக ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இதே வேளை குடும்பப் பெண் முத்தம் மாவின் பாலியல் 'டிக்ரி'யைச் சிந்திக்க வேண்டியுள்ளது! மீட்டப்பட் வீணை, மக னொருவனோடு வாழ்கிறாள். தானில்லா மல் போனால் மறுமணம் புரிந்து கொள்ள நாவலின் நாயகன் அனுமதி கொடுக்கி றான். எனவே இந்த முத்தம்மாவும் இன்னொரு நந்தினியா? கட்டுடைப்புக்கு இடமுண்டு! 'வாழாக் குமர் இருக்கும். வாழ்ந்த குமர் இருக்காது!' என கிராமிய அறிவுறுத்தலொன்றுண்டு. உலகப் புகழ் பெற்ற நாடகாசிரியரான பேர்னாட் ஷோ ஒரு பாட்டியிடம் கேட்டாராம் "பாட்டி இப்ப வும் உங்களுக்குக் காம இச்சை உண்டா" என, அதற்கு "அது கட்டையில போகும் போது தான் இல்லாமலாகும்" எனப் பாட்டி சொன்னாராம். எனவே அந்த மீட்டப்பட்ட முத்தம்மாவை நடைபாதை விபச்சாரியாக் குவதா? பெண்ணியத்தினதும் மார்க்சியத்தி னதும் நோக்கம்! இதுதான் இன்றைய தமிழக வாழ்வின் விழுமியமா? கார்ல் மார்க்ஸ் சொன்ன மார்க்சியம் இதுவா? சில மேல்நாட்டு இலக்கியவாதிகளின் ஈர்ப்பில் இந்நாவலாசிரியர் விழுந்துவிட்டாரா?

நடிகவேள் எம்.ஆர்.ராதா சொல்லா ததா? தமிழ்ச் சினிமாவின் சீத்துவக் கேடும் சொல்லப்படுகிறது. தான் சினிமாவில் நடிக்க எத்தனித்தது, சினிமா நடிகையரை எவரும் விரும்பமாட்டார்கள் அதனால் தனது திருமணத்தைத் தடுக்கலாம் என்ற காரணத்தால் என்ற காரணத்தால் எனச் சொல்லப்படுகிறது. அது தமிழ்ச் சினிமா வின் பாலியல் உச்சத்தை அறிய வைக் கின்றது. அத்தோடு, சினிமாக்காரர்கள் விரும்பும் போது நடிகைகள் ஹோட்டலுக் குப் போக வேண்டுமாம். எதுக்கெனத் தமிழ் வாசகருக்கு வெளிச்சம் போட்டுக் காட்டவா வேண்டும்! மற்றுமொன்று, நடிப்பதுக்குக் கிடைக்கும் சம்பாத்தியத்தை விடப் பணக்காரக் காமாந்தக்காரரோடு நடிகைகள் சிறிது நேரத்தைக் கழிப்பதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் அவர்கள் நடிப்புக்குக் கிடைப்பதுக் கும் மேலாகச் சம்பாதிக்கலாமெனக் கூட்டிக் குடுக்கும் சமூக விரோதி நாவலில் தகவல் தருகிறான். தமிழ்ச் சினிமாவுக்குள் காணப்படும் இத்தகைய விபசாரத்தை துணிகரமாக நாவலில் வெளிக் கொணர்ந் ததன் மூலம் நாவலாசிரியர் செ.கணேசலி ங்கன் சமுதாயத்தை விமர்சிக்கும் தனது எழுத்துப் பணியை இனங்காட்டி அக்கால த்து லட்சுமி காந்தன், சபாபதி ஆகியோரை ஞாபகப்படுத்துகிறார். இதற்காக அவரைப் பாராட்டலாம்.

முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத் தைக் கட்டுவது பற்றிய மிகச் சிக்கலான விடயத்தை நாவல் அடுத்துப் பேசுகிறது. "சோவியத் யூனியனை நம்பினோம்; ஏமாற்றம். அடுத்துச் சீனாவை எதிர்பார்த் தோம்; ஏமாற்றம்" என ஒப்பிக்கும் நாவல் அதன் சாத்தியம் இனி இந்தியாவில் தான் ஏற்படும் என எதிர்வு தருகிறது. லெனின், மாசேதுங் போன்ற தீவிர சோசலிச வாதத் தலைவர்கள் 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்ற பொதுவுடைமைத் தத்துவ மேதை கார்ல் மார்க்ஸின் வேண்டுதலைப் பரம்பல் செய்து தம் நாடுகளில் தமக்குப் பிடித்தமான ஆட்சி அதிகாரத்தை நிறுவியதை வரலாறு புகட்டும். ஆனால் அந்த நாடுகளும் இன்று நம்பினோருக்கும், பாடுபட்டோருக்கும் ஏமாற்றத்தைத் தந்து முதலாளித்துவப் பாதையில் பவனிவருகின்றன. இது எப்படி ஏற்பட்டது? வேலியே பயிரை மேய்ந்ததா? அதிகாரக் கதிரைகள் கைவசப்பட்டால் மூளைச் சலவை மிகச் சாத்தியமென்பதை எண்பிக்கவில்லையா? நூலாசிரியர் பரிந்துரைப்பது போல் இன்றைய நிலை யில் இந்தியாவில் சோசலிச அரச மைப்பு தேவையெனில்- அது சாத்தியப் பட்டாலும்; சோசலிச இந்தியாவும் ஏன் முன்னோடி களான சீனாவையும் ரஷ்யாவையும் பின்பற்றி, விட்டகன்ற பாதைக்கு திரும்ப வும் போகக் கூடாது? அப்போ இரத்தம் சிந்திய பாட்டாளிகளின் நிலை என்ன? இத்தகைய சிந்தனை நிச்சயமாக இன் றைய மனிதனுக்குப் பிறப்பதைத் தவிர்க்க ஏலாது! இன்றைய உலகு அன்றைய சீன, ரஷ்ய காலத்திலில்லை.

அத்தோடு நாவலின் நாயகன் குணசேகரன் கிடைத்ததைப் பெற்று, கிடைக்காததுக்காகப் போராடுவோம் என உழைக்கும் வர்க்கத்துக்கு அறை கூவல் விடுக்கிறான். இது போராட்டமே அவர்க ளது வாழ்வாகிவிட்டதைப் புகட்டவில் லையா? உரத்துச் சிந்திப்போர் இத்தகைய தீர்வையே அடைவர். வாழ்வைப் புரட்டிப் போடத் தான் வேண்டும். மாற்றத்தான் வேண்டும். இவைகளை வென்றெடுக்க மனிதநேயந்தான் ஏந்த வேண்டிய ஆயுதம். அதுவே தான் கடந்த காலத்தில் மானுடம் கற்றபாடம். இக்குரல் கார்ல் மார்க்சின் கல்லறைக்கும் ஒலிக்கட்டும்! அந்த மாமனிதன் அதைத்தான் மானுடத்திடம் எதிர்பார்த்தான். அதிகாரக் கதிரையை அல்ல! தொழிலாளி தொடர்ந்து ஏமாற்றப் பட்டால் மானுடம் சீரழியும்!

'தீவிரவாதி?' நாவலை வாசிப்போம்! சிந்திப்போம்! ஏழை பரதேசிகளின் வாழ்நிலையை மேம்படுத்த எழுந்த கார்ல் மார்க்ஸ் புகட்டிய மார்க்சியத்தைக் காப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நெஞ்சில் நிலைத்த*

# இலக்கிய நினைவுகள் 07

*மு.பஷீர்*

முன்னர் அநேகமான இலக்கியக் கூட்டங்கள், கொழும்பு, மெயின் வீதி, முஸ்லிம் வாலிபர் சங்க மண்டப பழைய மாடியில் நடைபெறும். கூட்டம் முடிந்தது பஸ் நிலையம் செல்வதற்கு இலகுவாகவிருக்கும். ஆனால், ஒரு சங்கடம். மாடிப் படிகள் ஏறிச் செல்வதற்குக் கஷ்டமாக இருக்கும். அங்கு ஒரே இருள் கவிந்து இருக்கும். போதிய வெளிச்சம் இராது. (இப்போது எப்படியோ நானறியேன்) இலக்கிய அமர்விற்கு ஒரு பதினைந்து பேருக்கு மேல் வரமாட்டார்கள்.

இலக்கியக் கூட்டத்திற்கு பல்கலை வேந்தன் சில்லையூர் செல்வராசன், தம்பதியர் சகிதமாக வந்திருந்தனர். கூட்டம் ஆரம்பிக்கவில்லை. சில்லையூர் என்னைக் கண்டதும் கட்டிப் பிடித்துத் தழுவி, இடக் கன்னத்தில் முத்தமிட்டார். கண்கள் கோவைப் பழமாகச் சிவந்திருந்தது. அவர் சற்று அதிகமாகவே தீர்த்தம் அருந்தியிருந்தார் என்பதைப் புரிந்து கொண்டேன்.

அவர் மனைவி கமலினி, அதிருப்தியோடு சில்லையூரை முறைத்தார். பொது இடங்களில் இப்படி அதீதமாக நடந்து கொள்ள வேண்டாம் என்ற அர்த்தத்தைக் கமலினியின் அதிருப்தியான பார்வை புலப்படுத்தியது.

சில்லையூர் சமாளித்து 'இவன் என்னுடைய குஞ்சு பஷீர்!' என்றார்.

சில்லையூர், எஸ்.பொ. போன்றோர் சிறிய போதையிலும் கூட, இலக்கிய உரையாற்றுவதை நான அவதானித்திருக்கிறேன். 'மது புத்திஜீவிகளை ஒன்றும் செய்து விடாது' என்று முன்பொரு முறை ஜெயகாந்தன் கூறியது ஞாபகம்.

அந்நிலையிலும், இந்த இருவரும் அட்சரப் பிசகில்லாமல் கேட்பவர் ஈர்க்கும் வண்ணம் அழகாக உரையாற்றுவர். எஸ்.பொ. நகைச்சுவை, சில்லையூர் கருத்தாழம். சில்லையூரின் இனிய குரல்வளம், சங்கீதப் பரீட்சயம், பார்வையாளரைப் பெரிதும் வசீகரிக்கும்.

அவரது அன்னையைப் பற்றிய பாடல் மேடையில் ஒலிக்கும் போது சபைக்கு மெய் சிலிர்க்கும். அவரது மரணச் செய்தி அறிந்து, நானும் கவிஞர் ஷம்ஸும் கொழும்பு வீட்டிற்குச் சென்றோம். சோகமே உருவாக நின்று கமலினி எங்களை வரவேற்றார். அங்கு, வ.ச.ஐ. ஜெயபாலனுடன் நீண்ட நேரம் இலக்கியம் கதைத்தோம். பல்துறை ஆளுமை மிக்க சில்லையூரின் நினைவுகள், காலத்தால் மறக்க இயலாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நெஞ்சில் நிலைத்த*

# இலக்கிய நினைவுகள் 08

அறுபதுகளின் பிற்பகுதியில் மறைந்த எழுத்தாள நண்பர், நீர்கொழும்பூர் முத்து லிங்கமும், நானும் இணைந்து கொண்டு, நாடகம், இலக்கியமெனச் சுறுசுறுப்பாக இயங்கி வந்தோம். இருவருமே தீவிர ஜெய காந்தன் அபிமானிகள். விழுந்து விழுந்து அவரைப் படித்தோம். ஆனந்த விகடனில் வெளிவந்த முத்திரைக் கதை, அக்னிப் பிரவேசம் எம் மனதில் பெரும் தாக்கத் தினை ஏற்படுத்தியது.

நாங்கள் போட்டி போட்டுக் கொண்டு தீவிரமாக எழுதவாரம்பித்தோம். மறைந்த வீரகேசரி ஞாயிறு இதழாசிரியர், **பொன் இராஜகோபால்** அவர்கள் எமது படைப்பு களுக்கு முக்கியத்துவம் தந்து பிரசுரித்தார்.

நீர்கொழும்பூர் முத்துலிங்கம், எழுத்தில் மட்டுமல்ல, சகல கலைகளிலும் அசாத்திய ஆளுமை மிக்கவர். அவரிடம் வித்வச் செரு க்கு இருந்தது என்று கூற முடியாவிட்டா லும், எளிதில் எல்லோரோடும் ஒத்துப் போகாத முரண்பட்ட கலைஞராகத் திகழ்ந் தார் என்பது உண்மை. நமக்குள் நாற்ப தாண்டு கால நெருங்கிய இலக்கிய நட்புத் தொடர்ந்தது.

நீர்கொழும்பு மண்ணிற்குப் பெருமை சேர்த்த ஆற்றல் மிக்க மூத்த கலை இலக் கியவாதியிவர். இவரது கைபட்டு மிளிராத கலைகளில்லை. நினைத்த உடனே, ஒரு நாவலையோ, சிறுகதையோ, நாடகத் தையோ, கவிதையினையோ எழுதி முடிக் கும் பிறவிக் கலைஞன்.

அவரது ஆளுமையின் அளவிற்கு கலை இலக்கிய ஊலகில், அவர் பேசப்பட்டது குறைவு. அவரது பல நாவல்கள் தமிழ் தேசிய நாளேடுகளில் பிரசுரமாகியுள்ளன. மல்லிகை இதழ்களில் காத்திரமான கதை கள் சிருஷ்டித்தார். பல தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். **ஒரு ஜனனத்தின் அஸ் தமனம்** என்ற கதைத் தொகுதி, காலத் தால் அழியாத கலைத்துவமிக்க அறு வடை. அந்நூல் பரவலாகப் பலரது கைக் கும் கிடைக்காமல் போனது பெருத்த இலக்கிய நஷ்டமாகும்.

நாங்கள் நண்பர்களை இணைத்துக் கொண்டு நீர்கொழும்பில், தமிழ் எழுத்தா ளர் மன்றம் நிறுவினோம். அண்ணி, என்ற இலக்கிய மாத இதழை, சாந்தி மயில்வா கனம் அவர்களோடு சேர்ந்து நடத்தி வந் தோம். அவ்விதழ் குறுகிய காலத்திலேயே நின்று போனாலும் அதன் காத்திரம் குறி த்து, இலக்கிய உலகில் பரவலாகப் பேசப் பட்டது.

முத்துலிங்கம், நாடகம்- சினிமா, விளையாட்டு, என்று தேசியத் தளங்களில் இயங்கி வந்ததால் காலப் போக்கில் எழுத்தாளர் சங்கம் சுறுசுறுப்பை இழந்தது.

இக்காலப் பிரிவில் தான் மல்லிகை இதழ்களோடு டொமினிக் ஜீவா நீர்கொழும் வரலானார். முத்துலிங்கத்தின் இல்லத்தி வைத்துத் தான் ஜீவாவுடனான எனது நெருக்கம் நீடித்தது. அவரது தொடர் வருகை எமக்கெல்லாம் இலக்கிய உந்து தல் தந்தது. நாங்கள மணிக்கணக்கில் உட்கார்ந்து கொண்டு இலக்கிய உறவாடு வோம். முத்துலிங்கம் நிறையப் படைப்பு களை அசுர வேகத்தில் எழுதிக் குவித்து வீட்டு மேசையில் அடுக்கி வைத்திருப்பார். இந்தப் படைப்புகளை வாசித்துப் பாரும்! என என் கையில் தருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய தினம்

—திக்குவல்லை கமால்

நான் மல்லிகைக் காரியாலயத்துக்கு சென்ற போது, அங்கு மல்லிகை ஆசிரியரும் மேமன்கவியும் கதைத்துக் கொண்டிருந்தனர். மூன்றாவது ஆளாக நானும் சேர்ந்து கொண்டேன். கதை தொடர்ந்தது.

சற்று நேரத்தில் தொலைபேசி ஒலித்தது.

"அ.மாக்ஸ் பூபாலசிங்கத்துக்கு வந்திருக்காராம். சரி போவம்" என்றார்.

மூவரும் வெளிக்கிட்டு பூபாலசிங்கம் புத்தகசாலையை அடைந்தோம்.

அதன் அதிபர் ஸ்ரீதரசிங் எங்களை அறிமுகம் செய்து வைத்தார். நாங்கள் இருவரும் முதற்தடவையாக அறிமுகமாகிக் கைகுலுக்கிக் கொண்டோம். எங்கள் எழுத்துக்களை மல்லிகையில் நிறையளவே படித்திருப்பதாக எடுத்த எடுப்பிலேயே சொன்னார்.

'மீள் பார்வை' பத்திரிகை நிறுவனம் அவரை இங்கு வரவழைத்திருந்தது. சிராஜ் மஷ்ஹுர் மற்றும் சில நண்பர்கள் அவரோடு காணப்பட்டனர்.

விரிவாகக் கதைப்பதற்கு அது சந்தர்ப்பமாக இல்லாததால், அவரது நிகழ்ச்சி நிரலைக் கேட்டுத் தெரிந்து கொண்டோம்.

"சரி.... நாங்க ஸ்ரீதர் பிச்சையப்பா வீட்டுக்கு ஒருக்கால் போவம்"- டொமினிக் ஜீவா அழைத்தார்.

ஆம் அந்த இளம் கலைஞன் காலம் சென்று அன்று எட்டாம் நாள்.

அவர் ஒரு பன்முகக் கலைஞன். ஓர் ஓவியன் என்ற வகையில் என்னால் அவரை மறக்க முடியவில்லை.

மல்லிகைப் பந்தல் வெளியீடாக வந்த எனது **'விடை பிழைத்த கணக்கு'** சிறுகதைத் தொகுதிக்கு அவர் அட்டைப்படம் வரைய வேண்டுமென்று விரும்பினேன். அதை மனப்பூர்வமாக ஏற்று வரைந்து தந்தார்.

அதற்கு முன்பும் நான் பல நூல்கள் வெளியிட்டிருந்தேன். அந்த அநுபவத்தில் அட்டைப்படம் வரைபவருக்கு ஆயிரம் ரூபா கொடுப்பது வழக்கம். எனவே, அதனையே இங்கும் பிரதியீடு செய்ய முனைந்தேன்.

"அதெல்லாம் வேண்டாம். உங்க புத்தகத்துக்கு அட்டைப்படம் வரையும் சந்தர்ப்பத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தந்தீங்களே. இந்தக் கண்ணி யத்துக்கு தலை வணங்கிறன்'' என்றாரே பார்க்கலாம்.

கவிஞன், பாடகன், ஓவியன், நடிகன் என்ற பல பாத்திரங்களை வகித்த ஸ்ரீதரின் வாழ்வில் துன்பம் தொடர்கதையாயிற்று.

அன்றும் இப்படியொரு நாளில் மல் லிகை அலுவலகம் சென்றிருந்தேன்.

''ஸ்ரீதருக்கு சுகமில்ல, போய் பாரும்'' என்று அழைத்துச் சென்று வீட்டையும் காட்டி விட்டார், ஜீவா அண்ணன்.

நான் படியேறி மேலே சென்றேன். சுரு ண்டு கிடந்த ஸ்ரீதர் டக்கென்று என்னை அடையாளம் கண்டு கொண்டார். சிர மத்தோடு மெல்ல எழுந்தமர்ந்தார். சிறு நீரகம் தொடர்பான ஏதோ வருத்தம் போல் தெரிந்தது. ''இப்போ பரவாயில்ல'' என்று வேறு சொன்னார். தன்னைப் பார்க்க வந்த கலை இலக்கியவாதிகளை நினைவூட்டி, நினைவூட்டிச் சொன்னார்.

சற்று குனிந்து பழைய டயறியொன்றை எடுத்து ''இதில் ஏதாவது எழுதித் தாரு ங்கள்'' என்று நீட்டினார்.

எதை எழுதுவது? அவரது மனப் புண்களுக்கு ஒத்தடமாக சில வார்த்தை கள் எழுதிக் கொடுத்தேன். பார்த்துச் சிரித்தார். அதில் இன்னும் பல எழுத்தா ளர்களின் குறிப்புக்களும் காணப்பட்டன.

உண்மையில் அந்த வருத்தத்திலிரு ந்து அவர் பூரணமாகச் சுகம் பெற்றார். பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தார். ஐ- தொலைக்காட்சி **'புன்னகை'** நிகழ்ச்சியில் தோன்றினார். வெளியே நடமா டினார்.

இருந்தும் எதிர்பாராத வேளையில் அவர் போய்ச் சேர்ந்துவிட்டார். ஈடு செய்ய முடியாத இழப்புத்தான். என்ன செய்வது?

அன்று மாலையில் நூல் வெளியீட்டு விழாவொன்றில் கலந்து கொள்வது எனது கொழும்பு வருகையின் பிரதான நோக்கம்.

எழுபதுகளில் முகிழ்ந்த குறிப்பிடத் தக்க கிழக்கிலங்கைக் கவிஞர்களில் பால்முனை பாறூக்கும் ஒருவர். புதிய பற வையாக அன்று சிறகடித்தவர். எந்தத் தளம்பலுமில்லாமல் தனது ஆளுமையை இன்றுவரை நிலை நாட்டி வருபவர். **'பதம்'** அவரது படைப்பாற்றலுக்கு நல்ல அத் தாட்சி.

அன்று மாலை நான்கு மணிக்கெல் லாம் மருதானை வைஎம்எம்மே மண்டபம் எழுத்தாளர்களால் நிரம்பியது. கிழக்கு மாகாணப் படைப்பாளிகள், ஆர்வலர்கள் அதிகம் அதிகமாக வந்து சேர்ந்திருந்தனர்.

மருதூர் ஏ. மஜீத், அன்புடீன் போன்ற வர்கள் முன்னின்று ஏற்பாடுகளைக் கவனித்தனர். பெரிய ஆரவாரமின்றி **'சந்தனப் பொய்கை'** அறிமுக விழா சிறப்பாக நடந்தேறியது.

இறுதியாக ஒரு ஏழெட்டுப் பேர் அங்கே எஞ்சினோம். சுடச்சுடப் பிளேன்ரீயோடு, இலக்கியத்தில் பலதும் பத்தும் கதைக்கும் அரங்கமாக அது மாறியது.

அன்றைய நாள் என்னைப் பொறுத்த மட்டில் ஒரு முழுமையான இலக்கிய நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துவிட்டு அப்படியான நாட்கள் உதயமாவதுமுண்டு.

*வாழும் நினைவுகள்: 50*

# படைப்பாளிகள் சங்கமம்

**தெ**னகம சிரிவர்தன தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அவர் எனது நெடுநாள் நண்பர்.

''சற்று அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எழுத்தாளர்கள் என்ற முறையில் நாங்கள் இணைந்து செயற்பட வேண்டும். முதற்கட்டச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை செய்து வருகிறோம். நீங்கள் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.''

''நல்ல விஷயம். முதலில் எழுத்தாளரிடையே புரிந்துணர்வும் ஒற்றுமையும் வரவேண்டும். இது எனது நீண்ட நாள் கனவு. பூரணமாக ஒத்துழைக்கிறேன்'' என்றேன்.

அடுத்த நாள் கமல் பெரேரா தொடர்பு கொண்டார். அவர் பற்றி முன்பே அறிந்திருந்தேன். ஆனால், தொடர்பிருக்கவில்லை.

''25-30 பேர் அளவில் முதற்கட்டமாக சந்திக்க ஏற்பாடு செய்துள்ளோம். தேசிய நூலாக்க சபையில் சந்திப்போம்''- என்றார்.

இவ்வாறு இன்னும் சில எழுத்தாளர்களோடும் தொடர்பு கொண்டிருந்தனர். இதன்படி குறிப்பிட்ட தினத்தில் டொமினிக் ஜீவா, தெளிவத்தை ஜோஸப், ப. ஆப்டீன் ஆகியோரோடு சென்றபோது, அங்கு அன்னலட்சுமி ராஜதுரை, பத்மா சோமகாந்தன், ஜின்னா செரிப்புத்தீன், சோ.ராமேஸ்வரன் போன்றவர்களும் காணப்பட்டனர்.

சிரிசுமன கொடகே அதற்கு அனுசரணை வழங்கினார்.

டெனிஸன் பெரேரா, உபாலி லீலாரத்ன, கெத்லீன் ஜயவர்தன, பியதாஸ வெலிகன்னகே, நொயல் வெலிகலகே, தேவி கால்லகே போன்ற படைப்பாளிகளும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர்.

சிங்கள- தமிழ்- முஸ்லிம் எழுத்தாளர்கள் ஒரே குடையின் கீழ் செயற்பட வேண்டுமென்பதே பொதுப்படையாக வெளிப்பட்ட குரலாகும். இங்கு பதின்மூன்று பேர்கொண்ட செயற்குழுவொன்று மாத்திரமே உருவாக்கப்பட்டது. இணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஸ்திரத் தன்மை ஏற்படும்வரை சிலகாலம் இப்படியே செல்வது நல்லதென்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். அந்த அடித்தளத்தோடு சிங்கள- தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் இயங்க ஆரம்பித்தது.

நிர்வாகக் குழுவினர் சந்திக்கவும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் சகல வசதிகளையும் கொடகே புத்தக மாளிகை செய்து தந்துள்ளது.

அண்மையில் எழுத்தாளர் சங்கத்தினர் மேதகு ஜனாதிபதியைச் சந்தித்து, எழுத்தாளர்கள் எதிர்நோக்கும் பொதுத் தேவைகள் பற்றிக் கலந்துரையாடி மகஜர் சமர்ப்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தத்தில் இக்குறுகிய காலத்துக் கிடையில் இவ்வமைப்பினூடாக தமிழ்த் தரப்பினர் அடைந்த நன்மையே அதிக மெனலாம்.

வருடாந்தம் நடைபெறும் கொடகே சாகித்திய விழாவின் போது தமிழ்ப் புத்தகங்களுக்கும் விருது வழங்கப்பட வேண்டுமென்றும், தமிழ் இலக்கியத்துக் காக மகத்தான சேவையாற்றிய ஒருவரு க்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டமை ஏற்றுக் கொள்ளபட்டு நடைமுறைக்கு வந்தமை யாவரும் அறிந்ததே.

தமிழ் நூல்கள் பல சிங்களத்திற்கும் சிங்கள நூல்கள் பல தமிழுக்கும் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டுள்ளமையும், அது தொடர்ச்சியான செயற்றிட்டமாக கொடகே வெளியீட்டு நிறுவனத்தால் முன்னெடுக்கப்படுவதும் இன்னொரு முக்கிய பெறுபேறாகும்.

இன்று பல சிங்கள் நிறுவனங்களும் எழுத்தாளர் அமைப்புக்களும் தமது நடவடிக்கைகளில் தமிழ் தரப்பினரை இணைத்துக் கொள்வதற்கான முயற்சி யில் இறங்கியுள்ளனர். இலக்கியம் என்று வரும் போது தமிழையும் உள்ளடக்கியே இலக்கியம் பற்றிப் பேசவேண்டிய நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சில நாட்களுக்கு முன்பு லயனல் தினபூர்ண என்பவர் என்னை வீடு தேடி வந்தார். ஹொரண பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெறும் இலக்கியக் கருத்தர ங்கில், இலங்கையின் சமகாலக் கவிதை பற்றிப் பேசவேண்டியுள்ளதாகவும், தமிழ்க் கவிதையை விட்டுவிட்டுப் பேசினால் அது பூரணமாகாதென்றும் அது பற்றித் தனக்குத் தகவல் தருமாறும் கேட்டுக் கொண்டார்.

இப்படியெல்லாம் சிந்திக்கின்ற நிலை இப்பொழுது ஏற்பட்டுவருவது நல்ல அறிகுறியாகவே எனக்குப்படுகிறது.

தேசிய ஐக்கியத்துக்கும் படைப்பாளர் சங்கமத்துக்கும் அப்பால் செயற்பட்டவர் களல்ல, நாங்கள். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், தேசிய ஒருமைப்பாட்டு மகாநாட்டையே நடாத்தியது. தேசிய ஐக் கியத்தையும் எழுத்தாளர் உறவு பற்றியும் அன்று முதலே பேசி வந்தது. யாழ்ப்பா ணத்துக்கு சிங்கள எழுத்தாளர்களை அழைத்துக் கௌரவித்தது.

இப்பொழுது அதன் தேவையைக் காலம் வலியுறுத்தியுள்ளது. உணர்வுபூர் வமாக சிந்திக்க ஆரம்பித்துவிட்டனர். இணைந்து செயற்களத்தில் இறங்கியுள் ளனர், சிங்கள எழுத்தாளர்கள்.

இன்னொரு வகையில் பார்த்தால் இருதரப்பிலும் முற்போக்கு அணியைச் சேர்ந்த படைப்பாளிகளே தீவிரமாக இய ங்கி வருகின்றனர். முற்போக்கு எழுத்தா ளர் சங்கத்தின் முக்கிய நோக்கமொன்று செயல்வடிவம் பெற்றிருப்பது போலவும், அதில் நானும் பங்காளியாக செயற்படுவது போலவுமே உணர்கிறேன்.

(முற்றும்)

dickwellekamal@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் கதை

-இப்நு அஸூமத்

தமிழரசி தற்கொலை செய்து கொண்டாள்
எனக் கேள்விப்பட்டேன்.

செட்டிக்குளம்
கதிர்காமர் முகாமில் இருந்தபோது,
கண்டிருந்தேன் அவளை.

எலும்பை மூடி
கொஞ்சம் சதையும், தோலுமாக
அங்குமிங்குமாக
ஓடோடிக் கொண்டிருந்தாள்.

முட்கம்பி வேலிக்குள்
ஒரு முள்ளைப் போல்?
அவளிருப்பதாகத் தோன்றியது.

அடிக்கடி முகாம் சென்றதால்
அந்த முகம்
பரிச்சயமாகிவிட்டது.

அவளது இருப்பிடத்திற்கு பக்கத்தில்
குடியிருந்த குடும்பம்
ஏராளமான பிள்ளைக் குட்டிகளுடன்
தாராள குடும்பமாய் இருந்தது.

இவள் அடிக்கடி
அந்தக் குடும்பத்திற்கு
உதவி வந்தாள் என்பதை
முகாமில் சொல்லிக் கொள்வார்கள்.

பின்நாளில்
அந்தக் குடும்பத்து பையனுடன் அவளுக்கு
காதல் என்றும்
கதைத்துக் கொண்டார்கள்.

பின்பொருநாள்
முகாம் சென்ற போது
அவர்கள் இருவரும்
இடம்பெயர்ந்திருந்த
பிள்ளையார் முன்
கும்பிடுவதையும் கண்டேன்.

முகாம் மக்கள்
சொந்த இடங்களுக்கு
அனுப்பி வைக்கப்பட்ட போது
அவளது குடும்பத்தாரும்
அவனது குடும்பத்தாரும்
விடுக்கப்பட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில்-

சொந்த வீடுகளுக்கு

வந்து சேர்ந்தனர் எனவும் கேள்விப்பட்டேன்.

இந்த நிலையில்தான்

அவள்

தற்கொலை செய்து கொண்டாள்

எனவும் தகவல் கிடைத்தது.

முகாமில் இருந்த போது

அவனது குடும்பத்துடன்

ஒட்டி உறவாடி,

உதவி புரிந்த அவளை

அவனது குடும்பம் இப்போது

'கீழ்' சாதி எனக் கூறி

ஒதுக்கி வைத்துவிட்டதாம்.

முகாமில் ஒன்றாக,

ஒரே தட்டில் சாப்பிட்டு.....

ஒரே விரிப்பில் படுத்து....

ஒன்றாகவே சாமி கும்பிட்டு....

ஒன்றாகவே......

அவள்

இன்னமும்

முகாமிலேயே இருந்திருக்கலாம்

போலத் தோன்றுகின்றது!

## வாழ்த்தி மகிழ்கின்றோம்



வளர்ந்து வரும் துடிப்புள்ள இளம் இலக்கிய வாதியும் இலக்கியப் பேச்சாளருமான செல்வன் **ஸ்ரீபிரசாந்தன்** அவர்களுக்கும் செல்வி **சிவதரி** அவர்களுக்கும் சமீபத்தில் வெகு விமரிசையாகத் திருமணம் நிடைபெற்றது.

திருமண வரவேற்பு கொழும்பில் வெகு கோலாகலமாக இடம் பெற்றது. பல முக்கிய பிரமுகர்கள் நேரில் வந்திருந்து மணமக்களை வாழ்த்தி மகிழ்ந்தனர்.

மல்லிகையும் நெஞ்சு நிரம்பிய மகிழ்ச்சியுடன் மணமக்களை வாழ்த்துகின்றது.

- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முறிப்புக் குளம்

—கா. தவபாலன்

பல நாட்களாக அடை மழை பெய்த பின்னர் அன்று மழை வெளித்து வெயில் பிரகாசமாக எறித்துக் கொண்டிருந்தது. சின்னையா தான் வாங்கி வந்த சாராயப் போத்தலையும் மிச்சக் காசையும் "ஐயா! இந்தாருங்கோ'' என்று செல்லத்துரையிடம் நீட்ட, செல்லத்துரை சாராயப் போத்தலை வாங்கிக் கொண்டு "மிச்சக் காசை நீயே வைச்சுக் கொள்ளு, சின்னையா'' என்று கூறி விட்டார்.

இருவருமாகச் சாராயம் குடித்துக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. ஏதோ அவசர வேலை இருப்பதாகக் கூறிச் சின்னையா ஒரு பன்னிரண்டு மணி போல விடைபெற்றுச் சென்றுவிட்டான்.

செல்லத்துரை மிச்சச் சாராயத்தைக் கொண்டு போய் வீட்டுக்குள் பத்திரமாக வைத்துவிட்டு "என்னப்பா, சமையல் முடிஞ்சுதா?" என்று மனைவியைக் கேட்டார்.

"ஒரு பத்து நிமிஷம் பொறுங்கோவன்...." என்றாள் மனைவி.

வேலிக்குள்ளால் மாடு நுழைந்து வந்து கிணற்றடி வாழையைக் கடித்து முறிப்பதைக் கண்டு கோபமடைந்தவராக ஒரு தடியை எடுத்துக் கொண்டு மாட்டை நோக்கி ஓடினார், செல்லத்துரை. காலில் தடியொன்று தடுக்கிவிடவே மணற் தரையில் விழுந்து போனார். அதற்குள் மாடு தப்பி ஓடிவிட்டது. கம்பும் கயிறும் எடுத்து வேலியைச் சீராக்கிக் கட்டிவிட்டுக் கிணற்றடிக்குப் போய்க் குளிர்ந்த நீரை அள்ளி அள்ளிக் குளித்தார். வெறி கொஞ்சம் குறைவது போல இருந்தது.

குளித்துவிட்டு வரச் சுடுசோறும், கோழி இறைச்சிக் கறியும், மீன் பொரியலும், சொதியும் தயாராக இருந்தன. சாராயம் குடித்த வாய்க்கு சாப்பாடு அந்த மாதிரி ருசியாக இருந்தது. மளமளவென்று சாப்பிட்டுவிட்டுச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். நித்திரை கண்ணைச் சுழற்றிக் கொண்டு வந்தது.

"நான் கொஞ்ச நேரம் நித்திரை கொள்ளப் போறன். ஒரு நாலு மணிபோலை எழுப்பிவிடும். முறிப்பு வயலுக்கு ஒருக்கால் போகவேணும்'' என்று மனைவியிடம் சொல்லிவிட்டுப் படுத்தவர், அயந்து தூங்கிவிட்டார்.

செல்லத்துரை மாமூலை எனும் கிராமத்தில் செல்வமும், செல்வாக்கும் மிக்கவராக வாழ்ந்து வந்தார். வன்னியில் வாழ்ந்த ஏனைய நில உரிமையாளர்களைப் போலவே, இவருக்கும் ஏராளமான நிலபுலன்கள் சொந்தமாக இருந்தன. ஆனால், அவற்றில் வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் ஏழைத் தொழிலாளர்களுக்கு ஒழுங்காகக் கூலி கொடுக்க மாட்டார். எல்லைகளை மாற்றிப் போட்டு அடுத்தவர் காணிகளைக் கைப்பற்றிக் கொள்வார். வயல்களில் திரியும் மற்றவர்களுக்குரிய பசுக் கன்றுகளைப் பிடித்துத் தனது பெயரில் குறிசுட்டுத் தனதாக்கிக் கொள் வார். பசுப் பாலில் நீரைக் கலந்து விற்பனை செய்வார். கன்று ஈனாத பசுக்களையும், காளை மாடுகளையும் இறைச்சிக்காகக் கொழும்புக்கு அனுப்பி விடுவார். கள்ளுச் சாராயம் நன்றாகக் குடிப்பார். பெண் ணாசை பிடித்து அலைவார். இவ்வாறு எல் லாக் கெட்ட குணங்களையும் தன்னக த்தே கொண்டவர்தான், செல்லத்துரை என்ற இந்த மனிதர்.

இவர் வாக்காளர்களுக்குச் சாராயம், வேட்டி, சேலை, பணம் போன்றவற்றை லஞ்சமாக வழங்கியும், தனக்கே வாக்க ளிக்க வேண்டும் என்று ஏழை மக்களைப் பயமுறுத்தியும் முள்ளியவளைக் கிராமச பைத் தேர்தலில் இலகுவாக வென்று விட்டார். கிராமசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட ஏனையோரை விலை க்கு வாங்கிச் சேர்மன் பதவியையும் தன தாக்கிக் கொண்டார். அந்தக் காலம் உள் ளூராட்சிச் சபைகள் ஓரளவு அதிகாரங்களு டனும் நிதிகளுடனும் கொடி கட்டிப் பறந்த காலம். சேர்மன் தனக்குப் பதிலாகப் பினா மிகளை வைத்து ஒப்பந்த வேலைகள் செய் வதை வழக்கமாக்கிக் கொண்டார். வீதிகள் அமைத்தது, பொதுக் கிணறு கட்டியது என்றெல்லாம் கணக்குக் காட்டிக் காசுக ளைச் சுருட்டிக் கொள்வார். எந்த ஒரு ஒப் பந்த வேலையையும் உருப்படியாகச் செய்து முடிக்க மாட்டார். இவருடைய சண்டித்தனத்துக் பயந்து யாரும் இவரை எதிர்த்துக் கேள்வி கேட்பதில்லை.

சரியாக நாலு மணிக்கு மனைவி ''இஞ் சேருங்கோ! வயலுக்குப் போக வேணு மெண்டு சொன்னியள். எழும்புங்கோ'' என்று சேர்மனை நித்திரையால் எழுப்பி விட்டாள்.

''தேத்தண்ணி போடப்பா'' என்று மனைவியிடம் கூறிவிட்டுச் சேர்மன் கிணற் றடிக்குச் சென்று கால்முகம் கழுவி விட்டு வந்தார். மனைவி சுடச்சுடத் தேனீர் கொடு க்கவே, அதை அருந்திவிட்டுச் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். வேட்டைத் துவக்கைத் தோளில் வைத்து அதனை ஒரு கையால் பிடித்துக் கொண்டார். போகும் வழியில் தனக்கு உதவியாகச் சின்னையாவையும் அழைத்துக் கொண்டு போனார். மாமூலைக் கிராமத்திலிருந்து சுமார் இரண்டரை மைல் தூரத்தில் முறிப்பு வயல் அமைந்துள்ளது. இருவருமாக வய லைச் சென்றடைந்து, அதனைச் சுற்றிப் பார்வையிட்டனர். வயல்களில் நீர் நிறைந் திருந்தது. இயற்கைப் பசளையான மாட்டெ ருவின் பிரயோகம் காரணமாக நன்றாக வளர்ந்திருந்த நெற் பயிர்கள் காற்றில் அழ காக அசைந்தாடிக் கொண்டிருந்தன. பயிர் களின் செழுமையைப் பார்த்துச் சந்தோஷ மடைந்த சேர்மன், “குளப்பக்கமாகப் போய் வருவோமா?'' என்று சின்னையாவைக் கேட்க, அவனும் சரியென்று தலையாட்டி னான். இருவருமாகச் சைக்கிளைத் தள்ளி யபடி உயரமான முறிப்புக் குளக்கட்டில் ஏறினார்கள். மாரிகாலமாதலால் குளம் நீரால் நிரம்பியிருந்தது. காற்று இலேசாக வீசிக் கொண்டிருந்தது. சிறு சிறு அலை கள் வந்து குளக்கட்டில் மோதிக் கொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தன. கலிங்கியால் நீர் வழிந்து ஓடிக் கொண்டிருந்தமையானது நீர் வீழ்ச்சி போல அழகான காட்சியாக இருந்தது.

குளத்தின் நடுவே நின்ற பட்டமரங்க ளில் கொக்குகள் அமர்ந்திருந்து உல்லாச மாகக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தன. சில கொக்குகள் மரப் பொந்துகளிலிருந்த தத்தம் குஞ்சுகளுக்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்தன.

''சின்னையா! இண்டைக்கு இந்தக் கொக்குகள் என்ரை துப்பாக்கிச் சன்னங்க ளுக்குத் தப்பவே முடியாது.'' என்று கூறி யவாறு துப்பாக்கியின் வாய்க்குள் தோட் டாவைத் திணித்தார், சேர்மன். தமக்கு நேரப் போகும் அவலத்தை அறியாத கொக் குகள் தம் மொழியில் எதை எதையோ பேசிக் கொண்டிருந்தன.

பட்ட மரங்களில் வெண் கொக்குகள் அமர்ந்திருப்பதும் சிறகு விரித்து அங்கும் இங்கும் பறந்து திரிவதும் அழகான காட் சியாக இருந்தது. நடக்கப் போகும் பயங்க ரத்தைக் காண விரும்பாமலோ என்னவோ பகலவனும் மெல்ல மேற்குத் திசையில் மறைந்து கொண்டிருந்தான். செவ்வானத் தின் நிறம் குளத்திற் பிரதிபலிக்கக் குளத் தண்ணீர் கண் கொள்ளாக் காட்சியாக ஜொலித்துக் கொண்டிருந்தது. பல்வேறு பறவையினங்கள் உல்லாசமாகப் பாடிய படி வானத்திற் பறந்து கொண்டிருந்தன. நீர்க் காகங்கள் குளத்தில் நீந்தி மகிழ்ச் சியாக இருந்தன.

சின்னையா மெதுவாகப் பின்னாற் திரும்பிப் பார்த்தான். கண்ணுக்கெட்டிய தூரம் வரை வயல்வெளிகள் பச்சைப் பசேலென்று அழகாகக் காட்சியளிக்கி ன்றன. வயல்களுக்கூடாக வளைந்து செல் லும் குமுழமுனை வீதியில் மக்கள் நடந் தும் சைக்கில்களிலும் பயணித்துக் கொண் டிருந்தார்கள். பாதையோரங்களில் வளர்ந் திருந்த புல்லை மாடுகள் மேய்ந்து கொண் டிருந்தன. இளம் கன்றுகள் வாலைக் கிளப் பியபடி அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந் தன. தாய்ப் பசுக்கள் கன்றுகளின் பாது காப்புக்காக அவற்றின் பின்னால் ஓடிக் கொண்டிருந்ததைப் பார்த்து சின்னையா வியந்து கொண்டிருந்தான்.

ஆனால், இவற்றையெல்லாம் ரசித்துக் கொண்டிருக்கும் மனநிலையோ அவகா சமோ சேர்மனுக்கு இருக்கவில்லை. அவருடைய கவனம் முழுவதும் கொக்குக ளின் மீதே இருந்தது. துவக்கை லோட் பண்ணிக் கொக்குகளைக் குறி வைத்தார். சேர்மன் வைத்த குறி ஒருபோதும் தப்பிய தில்லை. 'டுமீல்!' கொக்கொன்று சூடுபட் டுச் சுருண்டு விழுந்தது.

''நீந்திப் போய்க் கொக்கை எடுத்துவா, சின்னையா!'' என்று சேர்மன் சொல்ல, ''வேண்டாம் ஐயா! எனக்கு வடிவாய் நீந்த வும் தெரியாது. இருட்டுக்குள்ளை போய் தண்ணிக்குள்ளை அவலப்பட வேண்டி வரும்'' என்று கூறிச் சின்னையா குளத்தில் இறங்க மறுத்துவிட்டான்.

''இந்தா துவக்கை வைச்சிரு. நான் நீந் திப் போய்க் கொக்கை எடுத்து வாறன், பார்'' என்று சேர்மன் சொல்ல, ''வேண்டாம் ஐயா! இருட்டுற நேரம். ஏன் தண்ணிக்குள்ளை இறங்குறியள்? கொக்குப் போனால் போக ட்டும். வாருங்கோ வீட்டை போவம். அங்கை அம்மாவும் புள்ளையளும் உங்களைத் தேடு வினம், காணேல்லை எண்டு. என்னை மனிசி தேடிக் கொண்டிருக்கும், எங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன மனுசனைக் காணேல்லை எண்டு; வாருங்கோ வீட்டை போவம்; குளத்திலை இறங்க வேண்டாம்!" என்று சின்னையா எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேளாமல், சேர்மன் நீரில் குதித்து விட்டார்.

'கெடுகுடி சொற் கேளாது!' என்று சின்னையா மனதில் நினைத்துக் கொண்டான்.

சேர்மன் நீந்திச் சென்று கொண்டிருந்த போது, பென்னம் பெரிய முதலையொன்று வாயைப் பிளந்தபடி சேர்மனை நோக்கி வந்து கொண்டிருந்தது.

சின்னையா "ஐயோ, முதலை! முதலை!" என்று கத்தினான்.

சேர்மனும் முதலையைக் கண்டு "ஐயோ! ஐயோ!" என்று அவலக் குரலெழுப்பினார். கண் இமைக்கும் நேரத்துக்குள் முதலை சேர்மனைக் கௌவிப் பிடித்து அவர் கதறக் கதற நீருக்குள் இழுத்துச் சென்றது.

செல்வமும் செல்வாக்கும் உள்ள பெரிய முதலை, சேர்மன் செல்லத்துரை. அவரையும் விடப் பெரிய முதலை முறிப்புக் குளத்துக்குள் இருக்கிறது என்ற உண்மையைச் சின்னையா அன்றுதான் முதன் முதலாக நேரில் கண்டு கொண்டான்.

மரப் பொந்தில் இருந்த கொக்குக் குஞ்சுகள் தாயை இழந்து தவித்துக் கொண்டிருந்தது போலவே, தகப்பனை இழந்த சேர்மனின் பிள்ளைகளும் தவிக்கப் போகிறார்களே என்ற மிகவும் வருந்திய சின்னையா துவக்கைத் தூக்கித் தூர எறிந்து விட்டுச் சைக்கிளில் ஏறி அமர்ந்தான். அது சேர்மன் வீட்டை நோக்கிப் பறந்தது.


HAPPY
PHOTO
Excellent
Photographers
Modern Computerized
Photography
For
Wedding Portraits
&
Child Sittings
Photo Copies of
Identity Cards (NIC),
Passport &
Driving Licences
Within 15 Minutes
300, Modera Street,
Colombo - 15.
Tel : 2526345




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தமிழ் எழுத்தாளர் மகாநாடு இதுவரையில் நடந்தது என்ன?

**-முருகபூபதி**



இலங்கையில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றுகூடல் மகாநாட்டை நடத்துவதுதொடர்பாக கடந்த பல வருடங்களாகவே நாம் ஆலோசித்துக் கொண்டிருந்தோம் என்பது மல்லிகை வாசகர்களுக்கு நன்கு தெரியும்.

இதுபற்றி மீண்டும் மீண்டும் சொல்லி வாசகர்களையும் எம்முடன் இணைந்து பணியாற்றுகின்ற படைப்பாளிகளையும் கலைஞர்களையும் ஊடகவியலார்களையும் பேராசிரி யர்களையும் கலை, இலக்கியவாதிகளையும் அலுப்படையச் செய்ய நான் விரும்பவில்லை.

கடந்த ஜனவரி மாதம் 3 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் விரிவான ஆலோசனைக்கூட்டமும் நடத்தி, மகாநாட்டை 2011 இல் ஜனவரியில் கொழும்பில் நடத்துவது என ஏகமனதாக முடிவெடுத்து, மகாநாட்டின் இலங்கை இணைப்பாளராக 'ஞானம்' ஆசிரியர் தி. ஞானசேகரன் தெரிவாகி, பணிகளும் ஆரம்பமாகியிருக்கின்றன.

இதுதொடர்பான பல செய்திக்கட்டுரைகளும் இலங்கை இதழ்களிலும் தமிழகத்தில் **யுகமாயினி** மற்றும் **இனிய நந்தவனம்** இதழ்களிலும் பிரசுரமாகியிருந்தன.

சுமார் ஆறுமாதம் கழித்து, ஆழ்ந்த உறக்கத்திலிருந்து கெட்டகனவுகண்டு திடுக்கிட்டு விழித்தவர் போன்று தமிழக **கீற்று இணைய இதழில்** மிகவும் அவதூறாகவும் தமக்கேயுரித்தான எள்ளல்களுடனும் பொறுப்பற்றமுறையில் விஷம் கக்கத் தொடங்கினார், எஸ்.பொன்னுத்துரை. அதன் மூலம் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த இன்னும் சிலரையும் உசுப்பிவிட்டார்.

இது நாம் எதிர்பார்த்ததுதான்.

இப்படி இவர் அவதூறு பொழியப் போகிறார் என்ற தகவல் எனக்கு சென்னையிலிருந்து கிடைத்த மறுகணமே, நான் அவருடன் தொலைபேசியில் தொடர்புகொள்ள முயன்றேன். ஆனால் அவரது மனைவியுடன்தான் பேசமுடிந்தது. மீண்டும் மீண்டும் தொடர்புகொண்டேன். அப்பொழுதும் அவர் இல்லை என்ற தகவல்தான் கிடைத்தது. அவரது மனைவிக்கு எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாநாட்டின் நோக்கம் பற்றி விரிவாக எடுத்துக் கூறியதுடன் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்காமல், என்னுடன் கலந்துரையாடுமாறு தயவாகக் கேட்டுக்கொள்வதாகவும் அவரது மனைவி ஊடாகத் தெரிவித்தேன்.

இதற்கிடையில் ஜுனியர் விகடனிலிருந்து தொடர்புகொண்டு என்னிடம் கருத்துக் கேட்டார்கள். மகாநாட்டின் நோக்கத்தை விளக்கமாகவே தெரிவித்தேன். கீற்று இணைய இதழின் ஊடாக அவதூறைப் பரப்பிய பொன்னுத்துரை, அவுஸ்திரேலியாவில் ஒலிபரப்பாகும் இன்பத்தமிழ் வானொலியிலும் அதனையே தொடர்ந்தார்.

உலகில் எத்தனையோ தமிழ் வானொலி ஊடகங்கள் இயங்கும்போது அவர் தமிழகத்திலிருந்து அவுஸ்திரேலியாவை நோக்கி குறிவைத்ததன் உள்நோக்கம் புரிந்தது தான்.

மிகவும் தந்திரமாகவும் சாமர்த்தியமாகவும் என்னுடன் உரையாடுவதைத் தொடர்ச்சியாக தவிர்த்துக்கொண்டே தமது இயல்புகளை அம்பலப்படுத்திக் கொண்டிருந்தார்.

இத்தனைக்கும் நான் அவருடன் 2009 இறுதியிலிருந்து இம்மகாநாடு தொடர்பாக ஆலோசனைகளை கேட்பதற்காக பலதடவைகள் தொடர்புகொண்டேன் என்பது அவருக்கும் தெரியும். அவரது நண்பர் யுகமாயினி ஆசிரியர் சித்தனுக்கும் தெரியும். அவருடன் தொடர்புகொள்ள முயற்சிக்கின்றேன் என்பது அவுஸ்திரேலியா சிட்னியிலிருக்கும் அவரது மருமகளுக்கும் தெரியும். மருமகள்தான் அவரது சரியான தொலைபேசி இலக்கத்தையும் எனக்குத்தந்தவர்.

ஏப்பொழுதுமே தனக்குத்தானே பகைவனாகிக்கொள்ளும் அவர், புலம்பெயர்ந்த படைப்பாளிகள் மத்தியிலும் தனது வக்கிரமான சிந்தனைகளினால் பிளவுகளை ஏற்படுத்தவும் துணிந்தார். பொன்னுத்துரையின் வழக்கமான எள்ளல் நிரம்பிய கட்டுரை குமுதம் தீராநதி செப்டெம்பர் இதழில் வெளியானதும் நான் தீராநதி ஆசிரியர் மணிகண்டன் அவர்களுடன் தொடர்பு கொண்டு எனது பதிலையும் அனுப்பினேன். குறிப்பிட்ட பதிலை மல்லிகை வாசகர்கள் இந்த ஆக்கத்தின் இறுதியில் படிக்கலாம்.

அதற்கு முன்னர், தீராநதியில் பொன்னுத்துரையின் பிதற்றல்களை படித்த மல்லிகை வாசகர்களின் கவனத்துக்காக இதனை இங்கு பதிவுசெய்கின்றேன்.

பொதுமக்கள் கலந்துகொள்ளும் ஒரு நிகழ்ச்சி நடைபெறவிருந்தால் முதலில் அதனை ஒழுங்குசெய்யவிருக்கும் அமைப்பாளர்களிடம் நிகழ்ச்சியின் நோக்கம் மற்றும் செயற்பாடுகள் பற்றி அறிந்து செய்தியை வாசகர்களுக்கு வெளியிட்டபின்பே அது தொடர்பான எதிர்வினைகளை கேட்டு பிரசுரிப்பது வழமையான ஊடக தர்மம்.

ஆனால், நாம் நடத்தவுள்ள மகாநாடு தொடர்பாக முழுமையாக அறிந்து கொள்ளாமலேயே நீண்டகாலமாக இலங்கைக்கு அப்பால் புலம்பெயர்ந்து தமிழகம், அவுஸ்திரேலியா என வாழ்ந்துகொண்டிருக்கும் ஒருவரின் கருத்துக்களை தீராநதி வெளியிட்டிருக்கிறது. அந்தவகையிலாவது எமது இலங்கை மகாநாடுபற்றியும் ஈழத்து இலக்கிய உலகுபற்றியும் தீராநதி வாயிலாக அறிமுகம் தந்தமைக்கு நாம் நன்றி தெரிவிக்கலாம்.

**அறிந்ததை பகிர்தல், அறியாததை அறிந்துகொள்ள முயல்தல்** என்பதுதான் எமது மகாநாட்டினது அடிப்படை நோக்கம். இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் நாம் அவுஸ்திரேலியாவில் வருடந்தோறும் தமிழ் எழுத்தாளர் ஒன்றுகூடல்- விழாக்களை நடத்திவருகின்றோம். இதனை முன்னின்று நடத்திய அனுபவத்தின் தொடர்ச்சியாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இலங்கையிலிருக்கும் படைப்பாளிகள் ஊடகவியலாளர்களின் நீண்ட நாள் வேண்டுகோளை முடிந்தவரையில் நிறைவேற்ற நான் ஒழுங்குகளை மேற்கொண்டேன்.

இத்தகைய கலை, இலக்கியம், ஊடகம் சார்ந்த ஒன்றுகூடல்களும் மகாநாடுகளும் அனுபவப் பகிர்வாக அமைந்து இந்தத் துறைகளில் ஈடுபடுபவர்களுக்கு பயிற்சியும் தேர்ச்சியும் கிட்டும்.

சிலவருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியா ஒன்றுகூடலிலே நாம் எஸ்.பொ. அவர்களையும் வரவழைத்து அவரது இலக்கிய எழுத்தூழிய அனுபவங்களை கேட்டறிந்துள்ளோம்.

கலை, இலக்கிய, ஊடகத்துறைகளில் தலைமுறை இடைவெளி இருப்பதையும் அறிந்துகொண்டே நாம் இந்த சர்வதேச மகாநாட்டுக்காக 12 அம்ச யோசனைகளை முன் வைத்தோம்.

இவை கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் எழுதப்பட்டு இதுதொடர்பாக எஸ்.பொ. அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு நான் பலதடவைகள் தொலைபேசி ஊடாக தொடர்புகொள்ள முயன்றும் முடியாமல் போனது. எனினும் தமிழகத்தில் சென்னையிலிருக்கும் அவரது நண்பர் ஊடாக தகவல் அனுப்பிவிட்டு இலங்கை சென்று மகாநாட்டுக்கான ஆலோசனைக் கூட்டங்களை கொழும்பிலும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களிலும் தென்னிலங்கையில் முஸ்லிம் எழுத்தாளர்கள் மத்தியில் (மினுவாங்கொடை, கள்ளொளுவை) தகவல் அமர்வுகளையும் நடத்திய பின்பு இதுபற்றிய விரிவான செய்தி எஸ்.பொ.வின் தமிழக நண்பர் வெளியிடும் யுகமாயினி மாத இதழிலும் கடந்த மார்ச் மாதம் குறிப்பிட்ட 12 யோசனைகளுடன் பிரசுரமாகியிருக்கிறது.

இலங்கையில் மகாநாட்டுக்காக ஒரு அமைப்புக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டு எதிர்நோக்கப்படும் செலவுகளுக்காக நிதி சேகரிக்க ஒரு வங்கிக்கணக்கும் திறக்கப்பட்டு பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இதுபற்றியெல்லாம் நன்கு தெரிந்திருந்தும் சுமார் ஆறுமாதகாலம் அமைதி காத்திருந்துவிட்டுத் திடீரென்று இணைய இதழ்களிலும் தீராநதியிலும் அபாண்டமான குற்றச்சாட்டுகளையும் அவதூறுகளையும் அவர் பரப்ப முனைந்திருப்பதுதான் எமக்கு வியப்பளிக்கிறது. கடந்த சில மாதங்களாக பல முரண்பாடான, அதேசமயம் தமிழ் மக்களிடம் எமக்கு எதிராக அபகீர்த்தி ஏற்படுத்தும் விதமாக கருத்துக்களை சொல்லியிருக்கும் எமது மூத்த படைப்பாளி, எமது 12 அம்ச யோசனைகளை எள்ளி நகையாடுகிறார்.

எஸ்.பொ. என்றாலே எள்ளலுக்கு பெயர் போனவர் என்ற அபிப்பிராயம் ஈழத்து இலக்கிய உலகில் அவர் பிரவேசித்த காலம் முதலே நீடிக்கிறது. மீண்டும் இந்த வயதிலும் அவர் தமது இயல்புகளை நிரூபித்திருக்கிறார்.

இன்று தமிழ் கணினிக்குள் வந்து விட்டது. 21 ஆம் நூற்றாண்டில் வாழ்கின்றோம். இன்னமும் அவர் 1962 சாகிரா மகாநாடு காலத்திலேயே நிற்கிறார் என்பதுதான் வருத்தமளிக்கிறது.

எமது தமிழ் படைப்புலகில் செம்மைப்படுத்தல் வளர்க்கப்படவில்லை என்று பலகாலமாக உரத்துக்கூறிவந்தவர்களில் எஸ்.பொ.வும் ஒருவர். அவரே பலரது படைப்புகளை செம்மைப்படுத்திக் கொடுத்திருக்கிறார். மேலைநாடுகளில் படைப்பாளிக்கும் பதிப்பாளருக்கும் இடையே ஒரு கொப்பி எடிட்டர் இருப்பார். ஆனால், எமது தமிழ்ச் சூழலில் செம்மைப்படுத்தல் என்பது பிழை திருத்துதல் (Proof Reading) என்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலானவர்கள் நம்பிக் கொண்டிருக் கிறார்கள்.

விக்ரம் சேத்தின் Suitable Boy என்ற நாவல் ஆறு பதிப்பாசிரியர்களிடம் சென்றிருப்பதாகவும் அவர்களின் ஆலோசனைகளின் பின்னரே, அதற்கு நேர்த்தியான வடிவம் கிடைத்ததாகவும் தகவல் இருக்கிறது. தமிழகத்தில் சுந்தர ராமசாமி, ஜெயமோகன் உட்பட பலபடைப்பாளிகளின் படைப்புகள் நூலுருவில் வெளியாகுமுன்னர் சிலர் படித்துப் பார்த்து திருத்தங்கள் ஆலோசனைகள் கூறியிருக்கிறார்கள். நாம் ஏன் அதிக தூரம் செல்லவேண்டும். எமக்கு எதிர்வினையாற்றிக் கொண்டிருக்கும் எஸ்.பொ.வின் 1924 பக்கங்கள் கொண்ட **வரலாற்றில் வாழ்தல்** என்ற இரண்டுபாகங்கள் கொண்ட அவரது சுயசரிதை நூல் அச்சுவாகனம் ஏறுமுன்னர் எத்தனைபேரால் பார்க்கப்பட்டு எத்தனை பக்கங்கள் நீக்கப்பட்டன என்பதை அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

நாம் தனியாக இலக்கியப்படைப்புகளில் செம்மைப்படுத்தலை மாத்திரம் யோசிக்கவில்லை. செய்தி ஊடகங்களிலும் இது அவசியமானது என்று விவாதித்துவருகின்றோம். இன்று உலகெங்கும் இதழியல் கல்லூரிகள் இயங்குவதை அறிவீர்கள். இலத்திரனியல் ஊடகம் பற்றிய பிரக்ஞையிலும் தலைமுறை இடைவெளியிருக்கிறது. இளம்தலைமுறைக்குத்தெரிந்த பல விடயங்கள் மூத்த தலைமுறையினருக்குத்தெரியாது. இது பற்றி சில கட்டுரைகளை நான் ஏற்கனவே இலங்கை இதழ்களில் பதிவுசெய்துள்ளேன்.

நாம் முன்வைத்துள்ள அனைத்து யோசனைகளையும் எதிர்க்கவேண்டும் என்ற முன்தீர்மானத்துடனேயே அவர் இயங்குகிறார். அதனால் தமது எள்ளல் வார்த்தைகளை அள்ளித் தெளிக்கிறார்.

"வேண்டாப்பெண்டில் கை தொட்டாலும் குற்றம், கால் தொட்டாலும் குற்றம்" – என்று எங்கள் ஊரில் சொல்வதுபோன்றுதான் அனைத்தையும் அவர் நிராகரிக்கின்றார்.

நாம் களியாட்டம் நடத்தவோ கேளிக்கை மூலம் சர்வதேச தமிழ் எழுத்தாளர்களை ஏமாற்றவோ முனையவில்லை. தமிழாராய்ச்சி மகாநாட்டின் பிதாமகர் எங்கள் ஈழத்திருநாட்டு அருட்தந்தை தனிநாயகம் அடிகளார். அவர் தொடக்கி வைத்த ஆராய்ச்சி மகாநாட்டை காலப்போக்கில் களியாட்டமாகவும் அரசியலாகவும் மாற்றிய பெருமை யாரைச்சார்ந்தது என்று நான் இங்கே கூறத்தேவையில்லை.

**தமிழகத்தில் இலக்கியம் செத்து விட்டது என்று சிலவருடங்களுக்கு (1989 இல்) முன்னர் அறிக்கையிட்டவரும் , தமது மித்ர பதிப்பகத்தின் விழா தொடர்பாக தாம் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டுக்கு வந்த தமிழக பத்திரிகையாளர்கள் காப்பி, டிபன் சாப்பிட்டுவிட்டு சென்றார்களேயன்றி தமது இதழ்களில் ஒருவரிச்செய்தியும் பிரசுரிக்கவில்லை என்று ஆதங்கப்பட்டதுடன் அவர்களுக்கு 'கவர்' (கடித உறையில் பணம்) கொடுக்காதமையால்தான் செய்திகள் பிரசுரமாகவில்லை என்று பேசியும் அந்தப் பேச்சை தமது நூல் ஒன்றில் பதிவு செய்து வைத்திருப்பவரும் இந்த எஸ்.பொ. என்ற எஸ்.பொன்னுத்துரைதான் என்பதையும் நினைவுபடுத்துகின்றேன்.**

**இப்படித்தான் புலம்பெயர்ந்தோர் இலக்கியம்தான் கொடியுயர்த்தும் என்ற இவரது முன்னைய பேச்சும். பொறுப்பற்றுப் பேசும் பொன்னுத்துரை என்றும் இவருக்கு புகழாரம் உண்டு.**

இதில் என்ன வேடிக்கை என்றால்... ஆட்டோ சங்கர், சந்தனக்கடத்தல் வீரப்பன், சிலுக்கு சுமிதா, பிரேமானந்தா சாமியார், நித்தியானந்த சாமியார் நடிகர் பிரசாந்தின் விவாகரத்து உட்பட பல பரபரப்பான மலினமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகளுக்கு களம்கொடுக்கும் வணிக இதழ்களையே எம் மகாநாடுபற்றி பிதற்றுவ தற்கும் பொன்னுத்துரை தேர்வு செய்து கொண்டதுதான்.

அவர் தீராநதி இதழில் இப்போது பொறு ப்பற்று சொல்லியிருக்கும் கருத்துக்கள் குறித்து நாம் கவலைப்படவில்லை. ஏனென் றால் அவர் காலம் பூராவும் ஈழத்தில் சொன் னதையும் செய்ததையும்தான் இப்போது தமிழகத்திலிருந்தும் சொல்கிறார். செய்கி றார். அவர் ஓடுவது எப்படி என்று சொல்லிக் கொடுக்கும் உபதேசியாக மாறிவிடாமல் இலங்கை வந்து இம்மகாநாட்டில் கலந்து கொள்வாரேயானால் அவர் முன்வைக்கும் சந்தேகங்களுக்கும் விடை கிடைக்கும்.

இவரது 1962 ஆம் ஆண்டுகாலத்து 'நற்போக்கு' இலக்கியம் போன்று தொடங் கிய இடத்திலேயே அஸ்தமனமானமாகப் போவதல்ல, நாம் இலங்கையில் நடத்த வுள்ள மகாநாடு. இது தொடர் பயணம். ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு நாடுகளில் நடைபெறவிருக்கிறது.

ஈழப்போரினால் பாதிக்கப்பட்ட படைப்பா ளிகளின் குடும்பங்களை போருக்குப்பின்னர் நேரில் சென்று பார்த்துவிட்டு வந்தவன் என்ற மனிதாபிமானப்பண்புடனும் கடந்த 22 வருடங்களுக்கும் மேலாக ஈழத்தில் போரி னால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவச் சமு தாயத்தின் நலன்கள், தேவைகளில் தொட ர்ச்சியாக ஆக்கபூர்வமாக ஈடுபட்டுழைப்ப வன் என்ற ரீதியிலும் எமது தாயகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நூற்றுக் கணக் கான தமிழ்ப்படைப்பாளிகளுடன் தமிழ் ஊடகவியலாளர்களுடன் நெருக்கமான உறவை வைத்திருப்பவன் என்ற முறையி லுமே இந்த மகாநாட்டை பலரதும் ஆதரவு டன் முன்னெடுக்கின்றேன்.

நீண்ட காலம் வெளியிலிருப்பதனால் இலங்கைத் தொடர்புகளிலிருந்து அந்நியப் பட்டிருப்பவருக்கு **மல்லிகை** இதழ் கிரம மாக வெளிவரும் தகவல் தெரிந்திருக்க நியாயம் இல்லைத்தான்.

ஆனால், இவர் ஆலோசகராக இருந்து இலங்கையில் முன்பு வெளியான **இளம் பிறை** அவுஸ்திரேலியாவில் வெளியான **அக் கினிக்குஞ்சு** ஆகிய இதழ்களுக்கு என்ன நேர்ந்தது? என்பது அவருக்கே வெளிச்சம். ஆனால், மல்லிகை குண்டு தாக்குதல், எறி கணை வீச்சுகளிலிருந்தெல்லாம் தப்பி இன் றும் தொடர்ந்து **45 வருடங்களுக்கும் மேலாக வெளியாகின்றது. விரைவில் 46 ஆவது ஆண்டுமலரும் வெளியாகவிருக்கிறது.**

**யாருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது கொடுப்பார்கள்? என்றும் எஸ்.பொ. அங்கலாய்க்கின்றார். இவரையும் அழை க்கவேண்டும் இவரது இலக்கிய அனுபவ ங்களையும் இன்றைய இலங்கை மற்றும் புகலிட இளம் தலைமுறை படைப்பாளிகள் கேட்டறியவேண்டும் அதன் மூலம் கருத்துப் பரிவர்த்தனைகளை ஆரோக்கியமாக வளர்க்கவேண்டும், வருங்கால தலைமுறை யினருக்கு முன்மாதிரியாக நாம் இயங்க வேண்டும் என்ற யோசனைகளுடன் நாம் எமது மகாநாட்டுப்பணிகளை முன்னெடுத் துக் கொண்டிருக்க... இவரோ, இவருடன் நான் நடத்தவிருந்த தொலைபேசி உரை யாடலை திட்டமிட்டே சாதுரியமாக தவிர் த்துவிட்டு இப்போதுதான் துயில் எழுந்து வந்தவர்போன்று ஆறுமாதங்கள் கழித்து கருத்துச்சொல்கிறாரா? அல்லது அங்கத மொழி பேசுகிறாரா?**

அரச மானியம் குறித்தும் எள்ளி நகை யாடுகிறார். நான் வாழும் நாடு அவுஸ்திரே லியா உட்பட பலநாடுகளில் கலை, இலக் கிய, கல்வி, கலாசாரப்பணிகளை ஊக்கு விக்க அரசுகள் மானியம் வழங்குகின்றன. இலங்கையில் அனைத்துப் பாடசாலைகளி லும் நூல்கள், இதழ்கள் வாங்குவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு மானியம் வழங்குவதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. தமிழகத்தில் சில இதழ்களுக்கு நூலக ஆதரவு தமிழக அரசினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், பதிப்பகங்கள் வெளியிடும் நூல்களை தேர்வுசெய்து நூலக அபிவிருத்தி சபை கொள்வனவு செய்வதாகவும் அறிகின்றோம். இத்தகைய நடைமுறையை இலங்கையிலும் மேற்கொள்வதற்கு நாம் வலியுறுத்துவதில் எஸ்.பொ. என்ன தவறை காண்கிறார்?

இப்படியே அவரது எள்ளல் வியாக்கியானங்களுக்கு நாமும் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க முடியும். ஆனால், அதற்கு மல்லிகையில் பக்கங்கள் இருக்காது என நம்புகின்றேன்.

இனி தீராநதிக்கு நான் எழுதிய பதில்:-

**17-09-2010**
**ஆசிரியர்**

அன்புடையீர் வணக்கம்.

**'இந்திய விசா பிரச்சினையை தவிர்க்க செம்மொழி மகாநாட்டை எதிர்க்கவில்லை' -இது எஸ்.பொ.வின் நழுவல்**

**'சீதாபிராட்டிகளால் எரியும் இலங்காபுரி' இது இந்திய காங்கிரஸ் தலைவர் மீது மறைமுகமான தாக்குதல்.**

எஸ்.பொ. என்ற எஸ்.பொன்னுத்துரை தான் வாழும் நாட்டுக்கோ தனது நண்பர்களுக்கோ தான் சார்ந்த எவருக்குமோ வாழ்வு முழுவதும் உண்மையாக இருக்கவில்லை என்பது அவரது வரலாறு.

அதுதான் அவரது தத்துவமான **'வரலாற்றில் வாழ்தல்'.**

தற்பொழுது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மகாநாடுக்கு எதிராக தமிழ் நாட்டில் பிரபலம் தேடும் அவரை விடுத்து, மகாநாடு ஏன் என்பதை தீராநதி வாசகர்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

**ஏன் இந்த மகாநாடு?**

முப்பதுவருடகாலப் போர்ச்சூழலினால் இலங்கையைவிட்டு புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் அநேகர். வன்முறை, அடக்குமுறை, போரின் பாதிப்பு...

இப்படி எத்தனையோ வாழ்க்கைப் போராட்டங்கள்.

இன்று தமிழர்கள் இறக்கும் நிலையில் இருந்து உயிர்களை தக்க வைக்கக் கூடிய தன்மைக்கு மாறியிருப்பதால், தங்கள் உறவுகளை சந்தித்து உணர்வுகளை பரிமாற ஈழத்து தமிழ் எழுத்தாளர்கள் இதயங்கள் துடிக்கின்றன. இம்மகாநாடு எம்மவரின் நீண்டகாலக் கனவு. போரின் ரணங்களை மயிலிறகுகளால் வருடவேண்டிய கட்டாயத்திற்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம். அயலவர்களாலும் மற்றவர்களாலும் கைவிடப்பட்டவர்கள் நாங்கள், எங்களுக்கு நாங்களே ஆறுதல் வார்த்தைகள் பரிமாற வேண்டியகாலத்தில் எங்களை மீறிய சக்திகளால் தள்ளப்பட்டுள்ளோம்

அவுஸ்திரேலியாவில் கடந்த பத்து வருடங்களாக தமிழ் எழுத்தாளர் ஒன்றுகூடலை நடத்தியிருப்பதனாலும், ஈழத்திலிருந்தும் தமிழகத்திலிருந்தும், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் பல படைப்பாளிகளுடன் தொடர்ச்சியான நட்புறவு கொண்டிருந்தமையினாலும் என்னை இந்த ஒன்றுகூடல் மகாநாட்டை ஒருங்கிணைத்து தருமாறு இலங்கையில் பல இலக்கியவாதிகள் பலதடவைகள் கேட்டிருக்கிறார்கள்.

பல புலம்பெயர் ஈழத்து படைப்பாளிகள் தமது நூல்களை அச்சிடுவதற்கு தமிழகத்துக்கு வந்து திரும்பினார்கள். ஆனால், அவர்களினால் தமது தாயகம் சென்று வரக்கூடிய சூழல் இதுவரை இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஜனவரி மாதம் இலங்கை சென்று நிலைமைகளை கவனத்தில் எடுத்து பலருடனும் ஆலோசிக்க ஒரு கருத்தரங்கு ஒழுங்குசெய்தேன். பேராசிரியர்கள் கா. சிவத்தம்பி, மௌனகுரு, உட்பட மற்றும் பல படைப்பாளிகள், கலைஞர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் ஊடகவியலாளர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு ஏகமனதாக முடிவெடுத்தே நாம் மகாநாட்டு பணிகளை முன்னெடுத்தோம்.

கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவுனியா, மலையகத்தில் ஹட்டன்... என்று தமிழ்ப் பிரதேசங்களிலும் மகாநாடு தொடர்பான விரிவான தகவல் அமர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஈழத்து எழுத்தாளர்களின் விருப்பத்துடனேயே மகாநாட்டுப்பணிகள் முன்னெடுக்கப் படுகின்றன.

நான் சர்வதேச ரீதியாக எழுத்தாளர்களை ஒருங்கிணைக்கும் பணிகளை மேற்கோள்கின்றேன்.

இனி, எமது நோக்கங்களை எள்ளிநகையாடும் எஸ்.பொ.வுக்கு எனது பதில்களை எமது 12 அம்ச யோசனைகளிலிருந்தே தருகின்றேன்.

1. இருபதாம் நூற்றாண்டிலிருந்தே எல்லா உலகப்புகழ் பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகளுக்கும் கொப்பி எடிட்டர்கள் இருந்திருக்கிறார்கள். படைப்பை செம்மைப் படுத்துவதுதான் கொப்பி எடிட்டிங். இந்தியாவில் உள்ள பெரிய ஆங்கில பதிப்பகங்களை தொலைபேசியில் அழைத்தால் இது எஸ்.பொ.வுக்கு தெரிந்துவிடும்

2. தமிழ் படைப்புகள் ஆங்கிலத்தில் அல்லது ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப்படுவதை நாம் மட்டுமல்ல அ.முத்துலிங்கம், ஜெயமோகன் போன்ற படைப்பாளிகளும் வரவேற்கிறார்கள். நாம் நடத்தவுள்ள மொழிபெயர்ப்பு அரங்கில் இதுகுறித்து ஆராயப்படுவதுடன், இதுவரையில் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்ப் படைப்புகளை அறிமுகப்படுத்தும் பணியிலும் ஈடுபடுவோம். இதற்காக புலம் பெயர்ந்தவர்களின் சிறுகதைத் தொகுப்பு ஆங்கிலத்தில் இந்த மகாநாட்டில் வெளிவருகிறது

3. இலங்கையில் நீடித்த போரினால் பல நூலகங்கள் அழிந்தது எஸ்.பொ.வுக்கு தெரியாதா? யாழ்ப்பாணம் பொதுநூலகம் உட்பட, வன்னியில் பல நூலகங்களின் தேவைகளை நாம் கவனத்தில் கொள்கின்றோம். நூலகர்களுக்கு ஆதரவு அளிக்க சில நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம்.

4. போரினால் பாதிக்கப்பட்டு தாய், தந்தையரை இழந்த ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்களுக்கு அவுஸ்திரேலியாவிலிருந்து புலமைப்பரிசில் திட்டம் ஒன்றின் மூலம் கடந்த 22 வருடங்களாக உதவி வரும் அமைப்பில் பணியாற்றிக் கொண்டிருக்கும் அனுபவத்திலிருந்து இலங்கையில் இறுதிப்போரில் பாதிக்கப்பட்ட தமிழ் எழுத்தாளர்களின் குடும்பங்களுக்கும் உதவும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

5. இலங்கையிலிருந்து வெளியாகும் தமிழ் இதழ்களுக்கு அரசிடமிருந்து மானிய உதவி கேட்பது ஒன்றும் தவறில்லை. தமிழக அரசு நூலக அபிவிருத்தி திட்டம் மூலம் தமிழக நூல்களுக்கு இதழ்களுக்கு உதவுவது எஸ்.பொ.வுக்கு தெரியாதா?

6. போரினால் எங்கள் குழந்தைகள் கல்வியை இழந்தார்கள். அவர்களின் புனர்வாழ்வு கல்வி, வாசிப்பிலும் தங்கியிருக்கிறது. அவர்களிடம் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதில் எஸ்.பொ என்ன குறை காண்கிறார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தமிழ்ப்படைப்பாளிகளுக்கு ஈழத்தைப் பொறுத்தமட்டில் சன்மானங்கள் என்பது அபூர்வமானது. எனவே, அவர்களில் சாதனையாளர்களை தெரிவுசெய்து பாராட்டி கௌரவித்து விருதுகொடுப்பதில் என்ன எள்ளல்? எஸ்.பொ. அவர்களை மட்டுமல்ல, இன்னும் சில சாதனையாளர்களையும் நாம் அவுஸ்திரேலியா தமிழ் எழுத்தாளர் ஒன்று கூட லிலே பாராட்டி கௌரவித்திருக்கின்றோம்.

8. கருத்துப் பரிவத்தனை, அனுபவ பகிர்வு என்பது காலம் காலமாக ஒன்றுகூடல்களில் சந்திப்புகளில் நிகழ்ந்திருக்கின்றன. பலநாடுகளிலிருந்தும் தமிழ் எழுத்தாளர்கள் கலந்து கொள்ளும்போது பயனுள்ள விடயங்கள் புரிந்துணர்வுடன் பேசப்படும். இது ஈழத்து இலக்கியத்தில் புது இரத்தம் ஓட வைக்கும்.

9. சிறுவர் இலக்கியம் ஈழத்தில் மட்டுமல்ல, தமிழ் மொழியிலும் வறுமை அடைந்துள்ளது. இது வளர்த்தெடுக்கப்படவேண்டியது. இலக்கியம் எல்லைகளிடப்பட்ட அல்லது ஒரு தலைமுறையுடன் தேங்கிவிடுவதும் அல்ல. எஸ்.பொ.வுக்கு அப்பால் இலக்கியம் நகர்ந்துவிடக்கூடாது என நினைக்கிறாரா? இது ஒருவகை மரதன் ஓட்டம். சிறுவர் இலக்கியம், சிறுவர் நாடகம் உட்பட பல நிகழ்சிகள் உள்ளடக்கிய அரங்கும் இந்த மகாநாட்டில் இடம்பெறுகிறது.

10. சினிமா வலிமையான ஊடகம். கற்கை நெறியாகவும் மாறிவிட்டது. தமிழ்ச் சினிமா வர்த்தகப் பண்டமாக மாறிவிட்ட காலத்தில் குறும்படம் முக்கியத்துவம் பெறுகிறது. தமிழகத்தில் நிழல் இதழ் மற்றும் சில அமைப்புகள் குறும்பட பயிற்சிகளை நடத்துகின்றன. இதுபோன்று இலங்கையிலும் குறும்பட பிரக்ஞை வளர்த்தெடுப்பதற்கான அத்திவாரக்கல் பதிக்க விரும்புகிறோம்.

11. இசை, நடனக்கல்லூரிகள் மீதான ஆர்வம், ஈழத்தில் ஓவியக் கல்லூரிகளிடத்தில் இல்லை. எமது தமிழ்சமுதாயத்தில் இக்குறை நீடிக்கிறது. இதுபற்றிய கலந்துரையாடலும் நடைபெறும்.

12. பல ஈழத்து கூத்துக் கலைஞர்கள் மற்றும் நாடக நெறியாளர்கள் புலம்பெயர்ந்து விட்டனர். இவர்களின் மீள் வரவை ஈழத்து கூத்து, மற்றும் நாடக கலை உலகம் எதிர் பார்த்து காத்திருக்கிறது. தமது விடுமுறை காலத்தில் இவர்கள் இலங்கை வந்து கூத்து. நாடகம் தொடர்பான பயிற்சிகளை வழங்க முடியும்.

இறுதியாக, நாம் சொல்லவிரும்புவது: கோடைகாலத்தில் அவுஸ்திரேலியாவிலும் குளிர்காலத்தில் தமிழகத்திலுமாக வாழ்ந்து பல வருடங்களாக இரண்டு உலகத்தின் நன்மைகளை அனுபவித்து வரும் எஸ்.பொ. வுக்கு ஈழ எழுத்தாளர்களின் ஆதங்கம், இதயத்துடிப்பு தெரிய வாய்ப்பில்லை. ஆனால் அதற்காக அவர், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சகட்டுமேனிக்கு வாய்க்கு வந்த படி பேச, எழுத முடியாது.

அவதூறுகள் சுமத்துவதிலும் பரப்புவதிலும் தன் ஒழுங்கற்ற தன்மையை எஸ்.பொ. காட்டுகிறார்.

முதலில் இலங்கை அதிபரிடம் லஞ்சம் வாங்கி நடத்தும் மகாநாடு என்றார்.- இது இணையம்

கே.பி. என்ற குமரன் பத்மநாதனிடமிருந்து கோடிகோடியாகப்பெற்று நடத்தும் மகாநாடு என்றார் – இது சிட்னி வானொலி.

பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரால் மூளைச்சலவை செய்யப்பட்டவர்களினால் நடத்தப்படுகிறது என்றார் - இது இணையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக இலங்கை அரசினாலும் கருணா, டக்ளஸ் முதலானவர்களினாலும் நடத்தப்படுகிறது. என்றார். - இது தீராநதி.

இடைக்கிடையே சீனாவும் இந்த மகா நாட்டுக்குப்பின்னணியில் இருக்கிறது என்கிறார்.

அவர் இதுவரையில் முன்வைத்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை நிரூபிக்கு மாறும் இல்லையேல் சட்டநடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் அவருக்கு நாம் கடிதம் ஒன்று சிலவாரங்களுக்கு முன்னரேயே அனுப்பியுள்ளோம்.

லெ.முருகபூபதி
அமைப்பாளர்
சர்வதேச தமிழ் எழுத்தாளர் மகாநாடு
2011

## மல்லிகை ஆண்டுச் சந்தாதாரராகச் சேருபவர்கள் கவனத்திற்கு....



**ஆண்டுச் சந்தா 600/-**
**தனிப்பிரதி 40/-**
**ஆண்டு மலர் 200/-**

**ஓராண்டுச் சந்தாவுக்குக் குறைந்தது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.**

**வங்கித் தொடர்புகளுக்கு:**

**Dominic Jeeva 072010004231,- Hatton National Bank. Sea Street, Colombo - 11.**

காசோலை அனுப்புபவர்கள் Dominic Jeeva எனக் குறிப்பிடவும். காசோலை அனுப்புவோர் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, **Dominic Jeeva** என எழுதுவோர் இந்தப் பெயருக்கு முன்னாலோ பின்னாலோ வேறெதுவும் கண்டிப்பாக எழுதக் கூடாது. காசுக்கட்டளை அனுப்புபவர்கள் Dominic Jeeva. Kotahena, P.O. எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

தனித்தனி இதழ்களைப் பெற விரும்புவோர் 5 பத்து ரூபா தபாற் தலைகளையனுப்பியும் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

**201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13. தொலைபேசி : 2320721**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் இளைஞனின் வலிகளின் ஆவணம்

**-மேமன்கவி**



இன்றைய யுகம் வாழ்வின் மேற்புறத்திலும் உள்புறத்திலும் ஒளிந்துக் கொண்டிருக்கும் ரம்யங்களை விழுங்கி, பல்வேறு வலிகளின் வழியாக, வாழ்வை தன் கோரப்பற்களால் குதறப்பட்ட மான்குட்டியை இழுத்துச் செல்லும் ஒரு சிங்கத்தின் விஸ்வ ரூபமாய் எழுந்து நிற்கிறது. இத்தகைய சூழலில் படைக்கப்படும் கலை இலக்கியங்கள் ரம்யங்களால் நிறைந்த ஒரு பூங்காவனமாய் வாழ்வை சித்திரிக்க முற்பட்டால், அக்கலைப்படைப்பு போலியானது என்று நிச்சயமாக கூறலாம். அத்தகைய படைப்பு யதார்த்திலிருந்து விலகி ஓடும் ஒன்றாகும். அத்தகைய வலிகளின் வழிகளை கடந்து வந்த ஓர் இளைஞனின் கன்னி கவிதைப் படைப்புக்கள் அடங்கிய தொகுப் பாக ஓர் ஆவணமாக நம் கையில் கிடைத்திருக்கிறது வெற்றி வேல் துஷ்யந்தனின் **'வெறிச் சோடும் மனங்கள்'** எனும் கவிதைத் தொகுப்பு.

இந்த உலக தேசத்தின் எல்லா இளைஞர்களும், அவர்கள் எந்த பிரதேசமானாலென்ன, எந்தவொரு இனக்குழுவைச் சார்ந்தவர்களாக இருப்பினுமென்ன, எந்த மதமானாலுமென்ன கடந்த காலத்தில் சந்தித்த வலிகள் ஏராளம். அந்த வரிசையில் இந்த தேசத்தின் இளைஞர்களும் எதிர் கொண்ட வலிகளையும் குறைவாக மதிப்பிட முடியாது.அந்த வகையில் இக்காலகட்டத்தில் இந்த தேசத்தில் படைக்கப்பட்ட கலை இலக்கியங்களில் அந்த வலிகள் தந்த வேதனை அவ்வாறாக படைக்கப்பட்ட இளைஞர்களின் படைப்புகளில் அவர் தம் உயிர்ப்பிலிருந்து களைந்தெறிய முடியாத வகையில் பதிவாகிவுள்ளன. அவ்வாறான வேதனையின் குரலைதான் துஷ்யந்தனின் எல்லா கவிதைகளிலும் கேட்கிறோம். துஷ்யந்தனின் வயது பெற்று தந்திருக்கும் அனுபவம், பார்வை, அவரது அவர் அளவான மொழி வளம் ஆழ்ந்த விமர்சனப் பார்வையில், ஒரு வகையில் படைப்பாக்க வழயிலான போதாமையை தென்படக்கூடும். இவ்விடத்தில் நமது சூழலைச் சார்ந்த விமர்சனப் பார்வைத் தளம் கொண்டிருக்கும் ஒரு குறைபாட்டினையும் இங்கு சுட்டி காட்டுவது தவறு இல்லை என எண்ணுகிறேன். இன்றைய நமது விமர்சனப் பார்வைத் தளமானது, ஆய்வு செய்வதற்கு தேர்தெடுக்கும் படைப்புகள் எல்லாவற்றையும் ஒரே தரத்தில் வைத்து ஆய்வு செய்வதன் காரணமாக வளரும் கலை இலக்கியப் படைப்பாளிகளின் படைப்புக்கள்,அவை தன்னளவில் கொண்டிருக்கும் சிறப்புக்கள் அதாவது எதிர் காலத்தில் தேர்ச்சியான படைப்பாளிகளாக மாற கூடிய சமிக்ஞைகள் கொண்ட படைப்புக்களாக அவை இருந்தும் வாசக பார்வையின் கவனத்திற்கு கொண்டு வரப்படுவதில்லை. துஷ்யந்தனின் படைப்புக்களும் அவ்வாறான நிலையில் நோக்கப்படுமிடத்து, வெறுமனே புலம்பல் இலக்கியம் என அடையாளப்படுத்தப்படக் கூடும். (இதுவும் அவருக்கு ஒரு வலியாக இருக்க கைடும்) ஆனால் இன்றைய வாசகப் பார்வையில் அவரது கவிதைப்பிரதிகளை வாசித்தோமானால், கடந்த கால யதார்த்தம ஏற்படுத்திய வலிகளை எதிர் கொண்ட ஓர் இளைஞனின் ஆத்மார்த்த குரலாக அக்கவிதைப் பிரதிகளை நாம் இனங்காணக்கூடியதாக இருக்கும்.

பெரும்பாலான இவரது கவிதைகளின் தலைப்புக்கள் இவர் எதிர் கொண்ட வலிகளுக்கான காரணங்களை பேசி இருக்கின்றன. உதாரணத்திற்கு **'அமானுஷ்ய வாழ்வு' 'ரணமும் பிணமும்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வெறிச்சோடும் மனங்கள்' 'விடையிலா கேள்விகள்' 'தழும்புகள்' இப்படியாக சொல்லி கொண்டே போகலாம். ஓர் இளைஞனாக இவர் கடந்து வந்த காதல் கூட இன்றைய யுகத்தின் வலியை இணைத்துக் கொள்கிறது.

**'காதலில்**
**வலிகள் உருங்களாக மாறும்**
**சில சமயங்களில்**
**உருவங்களே வலிகளாக மாறும்'**

இக்கவிதைக்கான தலைப்பு **'ஆதலால் காதல் செய்வீர்'**

இத்தனை வலிகளை எழுதியும் **'சம்பிரதாயக் கூடு'** எனும் கவிதையில் **'வலிகள் எழுதி முடியாதவை'** என கூறும் பொழுது தான் இவர் கண்ட வலிகள் தந்த வேதனையை பூரணமாக சொல்லிக் கொள்ள முடிய வில்லையே என்ற ஏக்கத்துடன் அவர் இருப்பது புரிகிறது. அதே வேளை எவ்வளவுதான் தமக்கு பிரியமானவர்களாக இருப்பினும் அவர் தம் இறப்பின் பின் அவர் தம் ஞாபகங்கள் காலத்தால் கரைந்து விடுவதுண்டு. ஆனால் வலிகள் தந்த வேதனை காலத்தால் கரையும் ஒன்றல்ல என்பதை அழுத்தி சொல்வதில் இவர் பின்நிற்கவில்லை.

இவரது எல்லா கவிதைகளிலும் வலியானது வெவ்வேறு ரூபங்களில் எட்டிப்பார்த்து, இவரது படைப்புகளின் வழியாக நமக்கு உணர்த்த நினைத்த வலியின் வேதனையை ஒரு கணமேனும் மறந்து விடாக்கூடாது என்பதிலும் அவர் கவனமாக இருக்கிறார்.

அவ்வாறாக அவர் வெளிப்பட்டு நிற்கும் நிலையானது அதாவது இத்துணை சிறு வயதில் இவர் சந்தித்த வலிகளை பற்றிய அவரது வெளிப்பாடு என்பது சற்று அதீதமானது என யாரும் கருதி விடக்கூடும் என இவருக்கு தெரிந்திருக்கிறது. அப்படி கருதுபவர்களுக்கு நாம் சொல்வது இதுதான் அந்த இளைஞன் **'நேற்றைய நம் தேசத்து இளைஞன் அவன்'** அதே வேளை துஷ்ய ந்தன் அதற்கான பதிலை **'வலிகளுடான வாழ்க்கை'** எனும் கவிதையில் இப்படி பேசுகிறார்.

**'வலி தீர்க்கும் நிவாரணிகளே**
**வலிகளை அள்ளி வழங்கும்**
**நிவாரணிகளாகி விடுகின்றன.'**

என சொல்வதன் மூலம் வலிகளின் நீட்சியை உறுதி செய்கிறார்..இனி தொகுப்பின் இறுதி கவிதைக்கு வந்து தரிக்கும் பொழுது இத்தொகுப்பின் கடைசி கவிதை தலைப்பு வலிகளிலிருந்து நம்மை சற்று தூரமாக்கப் போகிறது என **'மீளும் நினைவுகள்'** என்ற அக்கவிதை நினைக்க வைக்க, கவிதையை முழுமை யாக படித்து முடிக்கின்ற பொழுது வலியின் சுவடு அக்கவிதையிலும் நுண்ணியமான முறையில் கால் பதித்திருப்பதை கண்டு கொள்கிறோம்.பால்ய கால நினைவுகளை மீட்டிப் பார்க்கும் அக்கவிதையில் இடையில்

**'மின்சாரம் நிறுத்தப்பட்டு'**
**'ஒளியும் ஒலிமுக்காய்**
**விம்மி விம்மி அழுததையும்'**

எனும் வரிகள், அடுத்து

**"கடலுக்கு சென்று நீராடி**
**அப்பாவின் வீரத் தழும்புகள்**
**பெற்றதையும்''**

எனும் வரிகள் கடைசியாயெ வலியின் பிரதேசத்திற்கு நம்மை நிறுத்துகிறது.

## துஷ்யந்தன்!

இவையும் வலிகள்தானே இன்னும் சொன்னால் இறந்த காலத்திற் கான ஏக்கம் என்பதும் ஒரு வகையில் வலிதான். துஷ்யந்தன் கடைசி வரை வலிகளின் வேதனையை தக்கவைத்திருக் கும் துஷ்யந்தனின் கவிதைகளில் வலி யானது வெறுமனே கவிதைக்கான பாடு பொருளுக்காக மட்டுமே பாடப்படவில்லை என்பதை நாம் அறிவோம். அதனால் அவ ரது இத்தொகுப்பு நிறைவு பெற்ற பின்னும் வலியானது நம் நிழலில் சென்று அமர்ந்து விடுகிறதை உணர்கிறோம். அதுவே துஷ்யந்தனின் **'வெறிச் சோடும் மனங்கள்'** எனும் இத் தொகுப்பின் கனதியாகும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத் தாகம் மிகக் கொண்ட கலையரசின் வாரிசு

**-வி. ரி. இளங்கோவன்**

**'நிர்மலா' ரகுநாதன்.**

ஆம். அன்று அப்படித் தான் இலங்கையில் அவரைக் கலை இலக்கியவாதிகள் குறிப்பிடுவதைப் பார்த்திருக்கிறேன்.
இன்று அவர் பவள விழா நாயகர்.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ்த் திரைப்படங்களில் முதன்முதலில் நம்பிக்கையூட்டிய படமாக, சிறந்த முறையில் அமைந்ததென பலராலும் போற்றப்பட்டது 'நிர்மலா' திரைப்படமாகும்.

என் கல்லூரி நாட்களின்போது, நிர்மலா யாழ் ராஜா திரையரங்கில் வெளி யானபோது அதனைப் பார்த்தேன். இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஒரு தமிழ்ப்படம் சிறப்பாக வந்துள்ளதென நண்பர்களுக்குக் கூறினேன். பின்னர் நண்பர்களுடன் இரண்டாவது தடவையும் அதனைப் பார்த்தது இன்றும் ஞாபகம்.

ஆயிரம் தடவைகளுக்குமேல் மேடையேறிய, நடிப்பிசைக் கலாமணி வைர முத்துவின் **'மயான காண்டம்'** நாடகமும் நிர்மலாவில் இடம்பெற்றதும் ஞாபகம்.

இலங்கை வானொலி வர்த்தக சேவை ஒலிபரப்பில், அன்று இந்தியத் திரைப் பாடல்களையும் விஞ்சி, நேயர்களால் அதிகமாக விரும்பிக்கேட்கப்பட்ட இலங்கைத் திரைப் பாடலான **'கண்மணி ஆடவா... ..'** என்ற பாடல் இடம்பெற் றதும் நிர்மலா படத்திலாகும். அப் பாடலை எழுதியவர் 'பல்கலை வேந்தர்' **சில்லையூர் செல்வராசன்.**



இவ்வாறு நம்பிக்கையூட்டிய நிர்மலா திரைப்படத் தைத் தயாரித்தும், அதில் நடித்தும் எம்மக்கள் மனதில் கலை ஞனாக அழியாத இடத்தை ரகுநாதன் பெற்றுக் கொண்டார்.

மாணவப் பராயம் முதல் நாடக மேடையைக் கண்ட ரகுநாதன், கலையரசு சொர்ணலிங் கம் அவர் களின் வாரிசாக, பல நாடகங்களை இயக்கியும், நடித் தும் பாராட்டுக்கள் பெற்றிருந்தாலும், **'கடமையின் எல்லை'** திரைப்படத்தில் பங்கு பற்றியிருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மலாவுக்குப் பின் தான் அவர் இலங்கையெங்கும் பொது மக்கள் மத்தியில் பரவலாக அறியப்பட்ட புகழ்பெற்ற கலைஞனாக மிளிர்ந் தார் என்றும் கூறலாம்.

அவர் நடித்த வி. பி. கணேசனின் **'புதிய காற்று'**, சினிமாஸ்கோப் திரைப் படமான **'தெய்வம் தந்த வீடு'** ஆகிய வற்றையும் நான் பார்த்திருக்கிறேன். இருப்பினும் 'நிர் மலா' தான் இலங்கைத் தமிழ்த் திரைப்பட வரலாற்றில் அவர் பெயரைப் புகழுடன் சேர்த்துள்ளது எனலாம்.

இலங்கையெங்கும் கலைஞர்களின் நட்பும் தொடர்புகளும் அவருக்கிருந்தது. போட்டி, பொறாமை மிகுந்தது கலையுலகம் என்பர். அந்தத் துறையில் நீண்ட காலம் தன் புகழையும் பெருமையையும் காப்பாற்றிக் கொண்டு காலூன்றி நிற்பது சிரமமானது. ஆனால், ரகுநாதன் இன்றுவரை இலங்கை யில் மட்டுமல்ல, புலம்பெயர்ந்து உலக மெங்கம் பரந்துவாழும் எம்மக்கள் மத்தியில் தன் அயரா உழைப்பினாலும் கலைப் பணியினாலும் போற்றத்தக்க முன்னோடிக் கலைஞனாக மதிக்கப்படுகிறார்.

இலங்கையில் நாடக, சினிமாக் கலைஞர்களுடன் மட்டுமல்ல, சிறந்த இலக்கியப் படைப்பாளிகளுடனும் அவர் இணைந்து பணியாற்றியுள்ளார். அவர் ஒரு படைப்பாளி. இலக்கிய நேசன். மக்கள் எழுத்தாளர் கே. டானியல், பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராசன் ஆகியோருடன் அவர் நட்புடன் பழகி வந்ததை நான் அறிவேன்.

1986 -ம் ஆண்டு தை மாதம் 30 -ம் திகதி, வைத்திய சிகிச்சையின் பொருட்டும், இலக்கிய நண்பர்களைச் சந்திப்பதற்காக வும் மக்கள் எழுத்தாளர் கே. டானியல் தமிழகம் சென்றிருந்தார். உடல்நலம் குன்றியிருந்த அவரை நான் அழைத்துச் சென்றிருந்தேன். பேராசிரியர் அ. மார்க்ஸ் ஏற்பாட்டில் தஞ்சாவூரிலும், மதுரையிலும் சிகிச்சை பெற்றபின், சென்னை வந்தபோது 'சங்கர் நேத்திராலயா' கண் மருத்துவமனையிலும் அவருக்கு பரிசோதனை செய்யப்பட்டது. இலக்கிய, அரசியல் நண்பர்களைச் சந்தித்துப்பேசுவதற்காகச் சென்னை எக்மோரில் ஒரு விடுதியில் தங்கியிருந்தோம். அப்போது எழுத்தாளர்கள் செ. கணேசலிங்கன், செ. யோகநாதன் ஆகியோர் வந்து டானியலைச் சந்தித்து உடல் நலம் குறித்து கவலையுடன் விசாரித்தனர். ஓய்வெடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். பின்னர் திடீரென இருவர் உள்ளே வந்தனர். கலைஞர் ரகுநாதன், 'மக்கள் குரல்' புனிதலிங்கம் ஆகியோரே வந்தவர்கள்.

டானியலின் உடல்நலம் பாதிக்கப்பட்டமை குறித்து, தமிழகத்தில் தங்கியிருந்த ரகுநாதன் எப்படியோ அறிந்து புனிதலிங்கத்தையும் அழைத்துக்கொண்டு அங்கு வந்திருந்தார். கவலை மிகுந்தவராக, உடல்நலத் தில் கவனம் செலுத்துமாறும் மற்றும் இலக்கிய முயற்சிகள் குறித்தும் டானியலுடன் அவர் நீண்ட நேரம் நட்புரிமையுடன் உரையாடிக்கொண்டிருந்தமை இன்றும் எனக்கு ஞாபகம். எழுத்தாளர்கள், நண்பர்கள் மீது ரகுநாதன் கொண்டிருந்த நேசம், பாசம், மனிதாபிமானத்தை என்னால் உணர முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சென்றபின் டானியலிடம் ரகுநாதனின் சினிமா முயற்சிபற்றிக் கேட்டேன். டானியல் சொன்னார்.. 'இலங்கையில நாடகம், சினிமா, கலையென தாகம் கொண்டு தன்ர வாழ்க்கையையே அர்ப்பணிச்சுக் கொண்டு திரிஞ்ச மனுசன்.. இங்கையும் அந்த அலுவல் தான் பார்த்துக் கொண்டு நிற்கிறார் போல... ஆனால் இங்க சுத்துமாத்து நிறைஞ்ச இந்தச் சினிமாப் பெரும்சமுத்திரத்தில உண்மையா கலைத் தாகம் கொண்டவனால நிண்டுபிடிக்கிறது கஸ்ரம் ரகுநாதன் என்ன செய்யப் போறாரோ தெரியாது...!' கவலையோடு தான் சொன்னார். தமிழக சினிமா அப்படிப்பட்டது தான் என ரகுநாதன் உணர்ந்து கொண்டார் என்று தான் சொல்ல வேண்டும்.

ரகுநாதன் புலம்பெயர்ந்து இங்கு வந்த ஆண்டில் தான் நானும் பாரிஸ் வந்திருந் தேன். அன்று அவரை நண்பர் எஸ். கே. ராஜென் வீட்டில் பலமுறை சந்தித்துக் கலை இலக்கிய முயற்சிகள் குறித்து உரையாட முடிந்தது. அவரது சுறுசுறுப்பும் திடகாத்திரமான நிமிர்ந்த நடையும் பேச்சும் கலை இலக்கிய நேசிப்பும் எனக்கு வியப்பளிப்பன.

1991 -ம் ஆண்டு நடைபெற்ற எனது **'கரும்பனைகள்'** கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துக் கவிதையும் தந்து சென்றார். பின்னரும் எனது நூல்வெளியீட்டு வைபவங்களிலும் சரி, வேறு கலை இலக்கியக் கூட்டங்களிலும் சரி அவர் கலந்துகொண்டு ஊக்கமளித்துச் சிறப்பித்து வருவது மனங் கொள்ளத்தககது.

இன்றுவரை தளராத ஊக்கமுடன் புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள கலைஞர்கள் பலரோடும் உறவுகளைப்பேணி, சின்னத் திரைக்கான படங்களைத் தயாரித்தும் இயக்கியும் நடித்தும் வருவதோடு, தனது அனுபவங்கள் மூலம் பெற்றதை இளந் தலைமுறைக் கலைஞர்களுடன் பகிர்ந்து கொண்டு, நெறிப்படுத்தியும் ஊக்கமளித் தும் வருகின்றமை போற்றுதற்குரியது.

பவள விழாக் காணும் மூத்த கலைஞனை, முன்னோடியை, கலைத்தாகம மிகக் கொண்ட கலை இலக்கிய நேசனைப் பல் லாண்டு வாழ்கவென வாழ்த்துவோமாக..!

A. R. R. HAIR DRESSERS
89, Church Road,
Mattakuliya,
Colombo - 15.
Tel : 0112527219
முற்றிலும் குளிரூட்டப் பெற்ற சலூன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதைகள்

**-சீனா.உதயகுமார்**

ரகு..! ரகு..! என்று கூப்பிட்டுக்கொண்டு உள்ளே வந்துகொண்டிருந்தாள் மதுமிதா. மூன்று சில்லு வண்டியிலிருந்து பத்திரிகை பார்த்துக் கொண்டிருந்த ரகு, பத்திரிகையை கீழே பதித்தபடி "என்ன மது..! இவ்வளவு அவசரம்..!" என்ற கேள்வியுடன் மதுவின் அடுத்த பதிலுக்காகக் காத்திருந்தான், ரகு.

"ரகு..! எங்கட ∴பைநெல் றிசெல்ற் வெளியாகிடுத்து. அதில் நான் செக்கண்ட் அப்பரில் பாசாகிட்டன்."

"வாழ்த்துக்கள், மது! உன்னுடைய நல்ல மனதுக்கும், விடா முயற்சிக்கும் கடவுள் தந்த பரிசுதான் உது!"

"ரகு..! இந்த சந்தோசமான விசயத்தை உங்களிடம்தான் முதல் சொல்ல வேணும் எண்டு நான் ஓடிவாறன்."

"நீங்க நினைத்திருந்தால் பெஸ்ற் கிளாசில் பாசாகியிருக்கலாம் மது!"

"ரகு..! நான் எவ்வளவு சந்தோசமாக இருக்கிறேன், தெரியுமா?" ஒருவித பதட்டத்துடன் மது சொல்லிக் கொண்டே போனாள்.

உண்மையில் மது இயற்கையான கெட்டிக்காரி. அவளின் பெற்றோர் நல்ல வசதி யானவர்கள். இரண்டு தமையனும், ஒரு தம்பியும் இன்று லண்டன் நாட்டில் நின்று உழைக் கின்றார்கள். தகப்பனும் தாயும் ஓய்வு பெற்ற அதிபர்கள். மதுவின் அக்கா ஒரு டொக்டர். அக்காவின் புருசன் ஓர் எஞ்சினியர்.

அந்த ஊரிலென்ன. மதுவைத் தெரிந்த எல்லாருக்குமே தெரியும், மது வீட்டார் நல்ல காசுக்காரர்! சரியான தடிப்புப்பிடித்த மனிதர்! அவர்கள் சரியான திமிர் பிடிச்சாக்கள் என்றெல்லாம் கதைப்பார்கள். ஆனால், மது அப்படியில்லை. அவளிடம் இரக்க சுபாவமே அதிகம் உண்டு. எல்லோருடனும் நல்லபடி பழக நினைப்பாள். இல்லாதவர்களுக்கு தன்னிட முள்ள பணமோ, அல்லது பொருளோ, கொடுத்து உதவுவாள். அன்பாகவும், அடக்கமாகவும் கதைப்பாள். திமிர்த்தனம் என்பது கொஞ்சமும் அவளிடம் இல்லை. அதனால் அந்தக் குடும்பத்தினரில் அவளை மாத்திரம் எல்லோருக்கும் நன்கு பிடித்திருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு முன்னால் அந்த புத்தகக் கடை இருந்தது. எந்த வகை புத்தகமானாலும் அங்கே அதை வாங்கிக் கொள்ளலாம். அங்கேதான் ரகு வேலை செய்கிறான். போட்டோக் கொப்பி, பிறின்ற் அவுட் என்று எது வேண்டுமானாலும் அதை அங்கு செய்து கொள்ளலாம். அந்தக் கடையில் தன்னை ஒரு பில் கிளாக்காக இணைத்துக் கொண டவன் ரகு.

ரகு மிகுந்த உழைப்பாளி. குடும்பப் பொறுப்பு வாய்ந்தவன். அவன் அப்பா ஓர் ஓய்வு பெற்ற ஆசிரியர். அவரின் பென்சன் பணம் அந்தக் குடும்பத்தை கொண்டு இயக்குவதற்கு போதுமானதாக இல்லை. இதனால்தான் ரகு ஏ.எல். எடுத்த அடுத்த வருசமே எங்கேயாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து உழைக்க வேண்டும் என்று ஆவல் கொண்டான். ஏ.எல். இல் கணிதப் பிரிவைத் தேர்ந்தெடுத்து படித்தவன். தான் ஓர் எஞ்சினியராக வருவேன் என்று நினைத்துப் படித்தவன். அந்த நம்பிக்கையில் ஊரும் நம்பியிருந்தது. அதற்காக அவன் பல சவால்களை சந்திக்க வேண்டியுமிருந்தது. அவனது கால் ஊனம், ஒரு தடையாக இருந்தது. குடும்ப வறுமை இன்னொரு காரணம். கால் ஊனமாக இருந்தாலும் அவனது விடா முயற்சியும், தன் நம்பிக்கையும் அவனை அத்துறையில் மூன்று பாடங்களும் சித்தி பெறச் செய்திருந்தது. தொடர்ந்து படித்து, அடுத்த ஆண்டும் அந்தச் சோதனை எடுத்திருந்தால் நிச்சயம் அவன், பௌதிக விஞ்ஞானத் துறைக்காவது தெரிவாகி இருந்திருப்பான். அவன் படிப்பு..! படிப்பு..! என்று அலைந்த போதெல்லாம் அது தனக்கொரு சுமையாகவே அவனின் அப்பா நினைத்திருந்தார். அவன் ஐந்து சத வருமானமும் இல்லாதவன். அதனால் தான் என்னமோ, தகப்பன் அவனை அது, இது என்று சுட்டிக்காட்டி சினந்து கதைப்பார். அந்த வார்த்தைகள் கேட்டு ரகு வின் உடல் சுருண்டு விடும். உள்ளம் கருகி இறுகிவிடும். அவன் அக்கா அவனுக்காக ஆறுதல் வார்த்தைகள் சொல்லுவாள். தங்கை விக்கலெடுத்து அழுது கொண்டிருப்பாள். இந்த நேரங்களில் ரகுவிற்காக இவர்கள் இவ்வளவும் தான் செய்ய முடியும். தந்தையின் வஞ்சனைகள் நன்கு தெரிந்த பிள்ளைகள் இவர்கள்.

இத்தனைக்குமிடையில் அந்த மூன்று சில்லு வண்டியில் ஏறி நூல் நிலையத் திற்கோ! அல்லாது போனால் இளம் பொடியள் கூட்டமாக நிற்கும் ஓர் இடம் நோக்கியோ ரகு சென்று விடுவான். தாய் எதுவும் பேசமாட்டாள். முப்பது வருடங்களாக வாழ்ந்து பழக்கப்பட்ட அவளுக்கு, அவரின் தொடரான சினப்பு வார்த்தைகளும், முறையற்ற கதை காரியங்களும் அவளுக்குள் புதைந்து மரத்துப் போயிருந்தன. இதனால் தந்தையின் அடாவடித்தனமான கதைகள் எதுக்கும் தாய் கலங்கி விடுவதில்லை.

'அவர் ஒரு வாத்தி! நான் என்ன? ஒன்பதாம் வகுப்புத்தானே படிச்சனான். நான் சொல்லுகிற எந்தக் கதைகளையும் கேட்காதவரோடு திருப்பி நான் என்னத்தைக் கதைக்க முடியும்? அப்பிடிக் கதைச்சாலும் அதை அவர் கேட்டுத்தான் விடுவாரோ!' இப்படித் தினமும் நினைத்துக் கொள்ளவே ரகுவின் தாயால் முடிந்திருக்கிறது.

தந்தையின் சுடும் வார்த்தைகளுக்குள் அகப்பட்டு, தத்தளித்து வந்தவனுக்கு அந்தப் புத்தகக் கடையில் ஒரு பில் கிளார்க்காக இணைந்த போது, ஓரளவு ஆறுதல் பெற்றான்.

ரகு நல்லதொரு அழகன்! அவனின் முடி அழகும் அவனுக்கொரு தனிக் கவர்ச்சி தான்! கதைப்பதிலும் ஒரு முதிர்ச்சி! குழந்தை உள்ளம் கொண்டு கதைக்கும் அவனை எல்லோருக்குமே பிடித்திருந்தது. இப்படி ரகு அங்கு வேலை செய்யத் தொடங்கிய காலத்தில்தான் கொப்பி, பேனை வாங்க என்றும் போட்டோ கொப்பி எடுக்க என்றும் மது அங்கு வந்து போனாள்.

ரகுவின் நகைச்சுவைக் குறும்புகளில் துவண்டு போகும் மது, அங்கு அடிக்கடி வந்து பழகிப் போனாள். நாட்கள் செல்லச் செல்ல அது காதலாகிக் கசிந்துருகியது. தானாகக் கனிந்து வந்த தன் காதலை மது தெரியப் படுத்தினாள். ரகு தயக்கம் காட்டி வந்தான்.

தன் இளைய தங்கையின் திருமண நினைவுகளால் உள்ளம் பூரித்துப் போவான். தங்கையின் அந்த இனிய நாளுக்ககாவே கடுமையாக அவன் உழைத்தான். அது அவனுக்கொரு இலட்சியம் மாதிரி. அந்த இலட்சியத்தை உடைத்தெறிந்து வெளியேற அவன் விரும்பவில்லை.

இந்த ஏக்கம் ஒரு புறமிருக்க, 'ஓர் அழகான பெண்! படித்த பெண்! பெரிய இடத்துப் பெண்! ஓர் ஊனமான என்னைக் காதலித்தால் தானும் காதலிக்கலாமா?' அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காதல் கல்யாணம் வரைதான் நீண்டு வருமா? என்கிற சலன ஏக்கமும், மன உழைச்சலும் மறுபுறம் வாட்டி வதக்கி நின்றன. மதுவின் உயர்வான காதலை நினைத்து பெருமை கொண்டான். அவன் இதயம் நெருடிக் கொண்டேயிருந்தது. இதயத்தில் வலி பிடித்தவன் போல் துடிதுடித்தான். பல இராத்திரிகள் நித்திரையின்றித் தவித்தான்.

'அக்கா நல்லபடி கரை சேர்ந்து விட்டாள். அத்தானும் நல்லவர். சோலி சுரட்டில்லாத மனுசன். அக்கா குடும்பத்தை அத்தான் நல்லபடி பார்த்து வருகிறார். அவையின்ர குடும்பங்களால் எனக்கெந்த கவலையும் இல்லை. அவர்கள் நிறைவான வாழ்வு வாழ்கிறார்கள். தங்கையின் கல்யாணத்துக்கென்று நகை, பணம் எல்லாம் சேர்த்தாச்சு. அவளுக்கென்டொரு வீடும் கட்டியாச்சு.' என்று நினைத்து மன நிம்மதி அடைந்தான்.

அன்றொரு நாள் அந்தக் கடையில் மதுவும், ரகுவும் நீண்ட நேரமாகவே கதைத்துக் கொண்டிருந்தனர். கடை மனேச்சரும் அதைக் கண்டு கொள்ளாமல் நடந்து கொண்டார். ரகுவின் நேர்மையான உழைப்பிற்கு மனேச்சரும் அடிமைதான். இதனால் மதுவினதும், ரகுவினதும் உரையாடல்களுக்கிடையில் அவர் எப்போதும் குறுக்கே நின்றதில்லை.

"ரகு! வரும் மாதமளவில எங்கட டைநெல் எக்சாம் நடக்கப் போகுது. நீங்கள் எதுவுமே சொல்லேல. இப்ப நானும் படிக்கிறதும் குறைவு. பிளீஸ் ரகு! இண்டைக்காவது நல்ல பதிலைச் சொல்லுங்க?" என்று மது அடம் பிடித்தாள். ரகு தயங்கித், தயங்கிக் கேட்டு நின்றான்.

இன்று வீட்டிலிருந்து வெளிக்கிட்டு வரும்போதே 'மது உங்களை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கு' என்று சொல்ல வேண்டுமென நினைத்து வந்தவன், ரகு. மது கதைத்துக் கொண்டிருக்கிற விதம் ரகு இலகுவாகிக் கொண்டது. மதுவுக்கென்று ஆசையாக வாங்கி வந்த அந்தப் பெரிய பார்சலை மதுவிடம் கொடுத்தான். மது முகமலர்ந்து அதை வாங்கிக் கொண்டாள்.

பார்சலை அடிக்கடி பார்த்து, ரகுவின் கதைகளை உள்வாங்கி அதற்கான பதிலையும் சொல்லி கதைத்துக் கொண்டிருந்தாள். மதுவின் குதூகலத்தை ரகு தனக்குள் அளந்து கொண்டான். அவன் மிகவும் சந்தோசமானான். மது அங்கிருந்து புறப்பட்டு விட்டாள். கடை மனேச்சரிடம் ரகு மன்னிப்புக் கேட்டான். மனேச்சர் ரகுவைப் பார்த்து ஏதோ கதைக்கிறார். அது ஒரு குறும்பான கதை. அந்தக் கதை கேட்டு ரகு சிரித்து நின்றான். அவனின் அந்த அழகான சிரிப்பு கண்டு மனேச்சரும் சிரித்தார்.

******

ரகுவும், மதுவும் கல்யாணம் செய்து வீட்டுக்குத் தெரியாமல் ஓடி வந்தனர். வடமராட்சியில் பஸ் கொண்டக்டர் ஆனந்தன் வீட்டில் இருந்தார்கள். ஆனந்தன், ரகுவின் நல்ல நண்பன்.

"ரகு! நீங்கள் ஏன் வடமராட்சிக்கு ஓடி வர வேண்டும். வலிகாமத்திலேயே இருந்திருக்கலாம் தானே?"

"அங்கை அம்மாவும், தங்கையும் பிரச்சினை இல்லை. அப்பா சரியான கடுப்பாக நிற்கிறார்." என்றான் ரகு.

ரகு நல்லதொரு பொடியன்! ரகுவை பிள்ளையாக கிடைப்பதற்கு தகப்பன் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஆனால், ரகு பாவம்! அவனுக்கு இப்படியொரு வாழ்வு வந்த போது அவன் தகப்பன் சந்தோசம் அடைந்திருக்க வேண்டும். ஆனால், அவர் தன் பிடிச்சுராவித் தன்மையயை இதிலும் விட்டு விடாது இருந்தார்.

"ஆனந்தமண்ணை! என்ன யோசிக்கிறியள்? நீங்களும் அப்பாவிற்குப் பயப்பிடுறியள் போல"

"அதொண்டுமில்லையடாப்பா! ஆமியின்ர கெடுபிடியள் தெரியும்தானெ!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம்! அதுக்கென்ன இப்ப!"

"நீங்கள் இங்கை இருக்கலாம். அது பிரச்சினை இல்லை. நான் என்ன சொல்ல வாறனெண்டால...!"

"................"

"எங்கட விதானையிட்டை போய் பதிஞ்சு, காட் எடுத்திட்டமெண்டால் ஆருக்கும் பயப்பிடத் தேவையில்லை."

ஆனந்தன் எதிலும் ஒரு முன் எச்சரிக்கையானவன். அதை, இந்த விசயத்திலும் நிருபித்திருந்தார். இப்ப ரகு மிகவும் சந்தோசமாய் இருந்தான். ஆனந்தனின் சிரிப்புக் கதை கேட்பதென்றால் ரகுவுக்கும் கொள்ளை விருப்பம். இடையிடை அவர் செய்யும் மிமிக்கிரி அசலாகவே இருக்கும்.

மதுவைக் கூட்டி வரும் போது வடமராட்சியில் ஆனந்தமண்ணைை வீட்டிலதான் இருக்க வேண்டும் என்று ரகு நினைத்து வந்தான். அதற்கு முதற் காரணம் அவரினதும், அவர் மனைவியினதும் அன்பான அனுசரிப்பும், இனிமையான கதை காரியங்களும்தான்.

'நாளை விதானை வீடு போக வேணும். பிறகு டீ.எஸ். ஓப்பிஸ் போக வேண்டும். நாளைக்கே எல்லா அலுவல்களும் முடிச்சிட்டமெண்டால் ஒரு நிம்மதி!' என்று ஆனந்தன் நினைத்துக் கொண்டான்.

திட்டமிட்ட செயலே திடமான செயல்! இதை ஆனந்தனுக்கு ஆரும் சொல்லத் தேவையில்லை. அப்பிடி எந்தவொரு செயலையும் நன்கு திட்டமிட்டு நிறைவேற்றி வைப்பதில் ஆனந்தன் வலு கெட்டிக்காரன். அடுத்த நாள் காலை ஒன்பது மணி ஆனந்தனின் மோட்டர் சைக்கிள் முன்னே சென்று கொண்டிருந்தது. ரகுவின் மூன்று சில்லு மோட்டர் சைக்கிள் ஆனந்தனின் பின்னே சென்று கொண்டிருந்தது. அந்த மூன்று சில்லு மோட்டர் சைக்கிளின் பின் இருக்கையில் மது இருந்து, கொண்டிருந்தாள்.

'அலுவலகம் சென்ற அவர்கள் அந்த நிழல் வேம்பின் கீழே மோட்டர் சைக்கிளினை நிறுத்திக் கொண்டனர். ரகு மோட்டர் சைக்கிளில் இருந்தபடி இருக்க, மது இறங்கி ஆனந்தன் பின்னே நடந்து சென்றாள்.

உள்ளே சென்றதும், அந்த நிர்வாக உத்தியோகத்தரிடம் உண்மை நிலமை களை ஆனந்தன் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தான். ரகுவும், மதுவும் காதல் செய்து கல்யாணமாகி வலிகாமத்திலிருந்து, வடமராட்சி ஓடி வந்து தங்கள் வீட்டில் இருக்கிற வரைக்குமான அத்தனை சம்பவங்களையும் ஆனந்தன் சொல்லிக் கொண்டிருந்தான்.

"ஆனந்தன்! உவை ரண்டு பேரும் வலிகாமத்து ஆக்கள். இப்ப இருக்கிற ஆமிப் பிரச்சினேக்கை உவை இங்கை இருக்கிறதுக்கு எப்பிடி அனுமதி வழங்கலாம்" என்று நிர்வாக உத்தியோகத்தர் படபடவென வெடித்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

"சேர்! பிரச்சினை இல்லாதவை தானே! எனக்கு நன்கு பழக்கமானவை!" ஆனந்தன் இப்படிச் சொல்லி முடிப்பதற்குள், சீறும் பாம்பு போல் சினந்து கொண்டார் அந்த நிர்வாக உத்தியோகத்தர். ஆனந்தனின் முகம் பேய் அறைஞ்சது போலாகியது.

"போங்க! போங்க! எங்களுக்கு உபத்திரம் தாற வேலையள் ஒண்டுக்கும் இஞ்சை வரக் கூடாது". நிர்வாக உத்தியோகத்தரின் உரப் பான தொனி அந்த அலுவலகம் எங்கும் ஒலித்து ஓய்ந்தது.

மதுவுக்குள்ளும் சிறுபதட்டம். ஓரளவு துணிவை வரவளைத்து, மிக நல்ல பணிவுடன் நின்று கொண்டே "சேர்! கால் மட்டும் ஊனமானவரை நான் கல்யாணம் செய்தேன் என்பது, தவறா சேர்! அவருக்கு என்னையும், எனக்கு அவரையும் பிடிச்சிருக்கு. இதை விட வேறென்ன வேணும் சேர். கருணை காட்டி எங்களை வாழ வையுங்க சேர்?" என்று கெஞ்சி நின்றாள்.

"சீ... ச்சீ... உந்தக் கதையொண்டும் இங்கை சரிவராது. முதல்ல வெளியில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போங்க!'' என்று சொல்லிக்கொண்டார். மேசை மீதுள்ள மணியை ஒலிக்க விட்டார். அலுவலக உதவியாளன் ஓடி வருகிறான். நிர்வாக உத்தியோகத்தரின் கடுமையான உத்தரவினை உடனடியாக நிறைவேற்றி வைத்தான், அந்த அலுவலன்.

மதுவின் கண்கள் பனித்தன. கைக்குட்டையால் துடைத்த வண்ணம் அலுவலகத்துள் இருந்து வெளியே வந்தாள். அந்த மூன்று சில்லு மோட்டர் சைக்கிளில் ரகு இருந்தபடி இருந்தான். மது ரகுவைக் கண்டு விம்மினாள். ரகு நிலமையைப் புரிந்து கொண்டான்.

'எனக்கு கால் மட்டும் தான் ஊனம்! இங்கை படிச்ச கனபேருக்கு மனசெல்லாம் ஊனம்தான்!' ரகு தன் மனத்திற்குள் இந்த மாதிரியான அதிகாரிகளின் செயல் கண்டு வெட்கப்பட்டான். ஆனந்தமண்ணை எதுவுமே பேசாது நின்றபடி நின்றிருந்தார். நடந்த அவமானங்ளை நினைத்து ஒருவித மனச் சஞ்சலமடைந்தார். ரகு வீடு போவதற்கு ஆயத்தமானான். மது அவன் பின்னே ஏறிக்கொண்டாள். அலுவலகக் கன்ரீனில் ரீ குடித்துவிட்டு வந்த ஆனந்தனுக்கு தெரிந்த அந்த அலுவலக உத்தியோகத்தர்கள் சிலர் 'என்ன, ஏதென்று' விசாரிக்கின்றனர். சற்று நடந்து முடிந்த அத்தனை அவமான நிகழ்வுகளையும் ஆனந்தன் கூறி முடித்தான்.

''உந்த மனுசன் உப்பிடித்தான். பண்பாடில்லாத மனுசன். உந்த மனுசனிடம் பதவி மட்டும்தான் இருக்கு. உதைவிட்டால் உந்தாளிட்டை வேறொண்டுமில்லை.'' அங்கு வந்தவர்களில் ஒருவன் கூறி நின்றான். அந்த நேரத்தில் சொல்லி வைத்தது போல், ஆனந்தனின் கிராம அலுவலர் வந்து கொண்டிருந்தார். ஆனந்தனின் உள்ளம் நம்பிக்கையின் விம்பமானது. ''என்ன! இன்னும் அலுவல் சரிவரலையா?'' கிராம அலுவலர் கேள்வி ஒன்றினைக் கேட்ட வண்ணமே மோட்டர் சைக்கிளிலிருந்து இறங்கி வந்தார்.

''அந்த மனுசன், மாட்டன் என்று சொல்லுறார்.'' இப்படி ஆனந்தன் கூறிக் கொண்டான்.

''ஆரிட்டை போய் வந்து கதைக்கிறியள்?'' விதானையார் ஒரு விதமாய்க் கேட்டார்.

''ஏ.ஓ.விடம் போய் கதைச்சுப் போட்டுத்தான் இதில வந்து நிக்கிறம்'' ஆனந்தன் சொல்லி முடிப்பதற்குள்.

''அதுதானே பார்த்தன்! நீங்க ரண்டு பேரும் வாங்க! என்று கூறி மதுவை டீ.எஸ். இடம் கூட்டிச் சென்றார் விதானையார்.

ரகு தனது உந்துருளியை இயக்கி, அந்த அலுவலகத்தின் முன் கூடார வாசலின் ஒரு ஓரமாக நிறுத்திக் கொண்டான். டீ.எஸ். தன் இருக்கையில் இருந்து எழுந்து வெளியே வருகிறார். ரகுவிடம் உரையாடுகிறார். மதுவைப் பார்த்து சில கேள்விக் கணைகள் தொடுக்கிறார். பிறகு சிரிக்கிறார். மது சந்தோசமடைகிறாள். ரகு சிரித்து நின்றான். ரகுவின் கைகள் பிடித்து தன் நட்பின் ஆதரவைத் தெரியப்படுத்தினார். இருவரையும் வாழ்த்திவிட்டு ''நீங்கள் ஒண்டுக்கும் பயப்பட வேண்டாம்! இந்தச் சமூகத்தில் பலத்த சவால்கள் எல்லாம் உங்களுக்காக் காத்திருக்கு. அதையெல்லாம் நல்லபடி வாழ்ந்து காட்ட வேணும். என்றார் டீ.எஸ்.

டீ.எஸ்.இன் இந்த வார்த்தைகள் கேட்டு உள்ளம் உருகி தன் இரு கரங்கள் கொண்டு தன் முகம் பொத்தி அழுதுவிட்டாள், மது. அளுக்குள் பெருக்கெடுத்த பெரும் ஆனந்தமே இந்த அழுகைக்குக் காரணம். டீ. எஸ். யை தன் கண்களுக்குத் தெரியும் ஒரு தெய்வம் என்று நினைத்தாள். அவர் பாதம் தொட்டு வணங்க நினைத்தாள்.

''all the best'' நீண்ட காலங்கள் இருவரும் சேர்ந்து வாழுங்க!'' என்றார், அந்த அன்பான டீ.எஸ். அது அவர்களின் உண்மையான காதலுக்கான நல்ல ஆசிர்வாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு வாழ்வு

**–செங்கை ஆழியான்**

அந்த வருடம் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு எடுபட்ட கலைப்பிரிவு மாணவர்களுக்கு அநுமதி கொழும்புப் பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்தது. கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் இடநெருக்கடி ஏற்பட்டதால் கொழும்புக் குதிரைகள் விளை யாட்டுத் திடல் மண்டபங்கள் இட நெருக்கடி நீக்க எடுக்கப்பட்டன. குதிரை ரேஸ் பார்வை யாளர் ஸ்ரேடியம் விரிவுரை மண்டபங்களாக விளங்கின. அதனால் இப்பல்கலைக்கழகப் பகுதியை அசுவவித்தியாசாலை என்றழைக்கப்பட்டது. பார்வையாளர் ஸ்ரேடியத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அமர்ந்திருப்பார்கள். அவர்கள் முன்னிடப்பட்ட காவல் கூட்டில் நின்று விரிவுரை நடாத்த வேண்டும். காற்றில் தான் விளக்கம் எழுத வேண்டும். கரும் பலகை கிடையாது. இந்த ஸ்ரேடியத்தில் கரும்பலகை வைக்க இடமில்லை. எனது விரிவுரைகளும் அவ்வாறே நடந்தன.

கமலா புவியியல் பாடம் எடுப்பதில்லை. ஆனால், அந்தப் பகுதியிலேயே படித்தாள். ஹவலொக் ரவுனில் அவள் தங்க சில பெண்களுடன் அறை எடுத்திருந்தாள். விரிவுரை முடிந்ததும் அவளை அழைத்துச் சென்று அவள் அறையில் விட்டு வருவேன். ஆரம்பத்தில் அவள் மனதை என்னால் கவர முடியவில்லை. கோண்டாவில் புகையிரத நிலையத் திலிருந்து என்னோடு தான் கொழும்புக்கு வருவாள். ஒரு தடவை என்னையறியாமல் அவள் தோளில் தூக்கக் கலக்கத்தில் சாய்ந்து விட்டேன். அந்த ரவுக்கையைப் பலதடவை தோய்த்ததாகப் பின்னர் என் மனைவியானதும் கூறினாள்.

ஒரு சனிக்கிழமை 'மெட்னி திரைப்படம் ஒன்றுக்குப் போவமா?' என்று அவளைத் துணிந்து கேட்டேன். முதலில் அவள் மறுத்தாள். வற்புறுத்திய பின்னர் கடைசியாக ஒத்துக் கொண்டாள். முதன் முதல் நல்ல பிள்ளையாக அமர்ந்து 'நவராத்திரி' திரைப்படம் பார்த்தேன். இடையில் கேட்டதற்கெல்லாம் அவள் எரிந்து விழுந்தாள். அவள் என் வற்புறுத்தலில் படத்துக்கு வர ஒப்புக் கொண்டாள் போலப்பட்டது. சிலநாட்களின் பின்னர் அவள் சகஜமானாள். என்னோடு சகயமாகப் பழகினாள். மிருகக் காட்சிச் சாலைக்குப் போனோம். ஹொட்டல்களுக்குப் போனோம். விக்டோரியாப் பூங்காவிற்குப் போனோம். படங்கள் விதம் விதமாகப் பிடித்துக் கொண்டோம். எனக்கு மூன்று மகள்மார். மூத்தவள் பொரளை ஆஸ்பத்திரியிலும் மூத்த மருமகன் கொழும்பு ஆஸ்பத்திரியிலும் டாக்டர்களாக வேலை பார்க்கின்றனர். இரண்டாவது மகள் இரத்மலானை இந்துக் கல்லூரி பட்டதாரி ஆசிரியை. மருமகன் சீயரா ரெலிகொம் கம்பனியின் நிர்வாக எஞ்சினியர். மூன்றாவது மகளும் மருமகனும் கணினித் துறையில் ஈடுபட்டுள்ளனர்.

எனது மனைவியை காதலித்த காலத்தில் ஒரு தடவை எனது தாயுடன் கதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமத்திற்குச் சென்று வந்தோம். மறக்க முடியாத நாட்கள். 'ஆச்சி பயணம் போகிறாள்' என்ற நாவலை அப்போதே எழுதினேன். கிணற்றுத் தவளையாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஒரு வயோதிபப் பெண் வெளியுலகைக் காணும் போது ஏற்படும் வேறுபட்ட உணர்வுகளை அந்த நாவல் சித்திரித்தது. அது ஒரு நகைச்சுவை நாவல். வாசகர்களைப் பெரிதும் கவர்ந்தது. 'சௌ' என்ற ஓவியரின் சித்திரங்களுடன் வெளிவந்தது. முதலில் **விவேகி** என்ற சஞ்சிகையில் தொடராக வெளிவந்து நூலுருப் பெற்றது. அதன் பின்னர் சிரித்திரன் சுந்தர் 'சிரித்திர'னில் தொடராக வெளியிட்டார். இப்பொழுது 'சுவைத்திரள்' என்ற சஞ்சிகையில் மீண்டும் தொடராக வெளியிடுகின்றது. ஆச்சி பயணம் போகிறாள் நாவல் குறித்து ஒரு அநுபவம் உள்ளது. ஒரு தடவை விமானம் மூலம் யாழ்ப்பாணத்தைக் கடப்பது என்பது சிம்ம சொப்பனம். விமானச் சீட்டுப் பெறுவதில் உள்ள சிரமும், அதற்காகக் காத்திருப்பதும் கொஞ்சமல்ல. இவற்றைத் தாண்டிப் பயணப்பட வேண்டும். விமானத்தில் என் அருகில் ஒரு வயோதிபப் பெண்ணிருந்தார். மிகவும் களைத்துப் போய் காணப்பட்டார். கதையோடு கதையாக அவர், "அக்காலத்தில் ஆச்சி பயணப்பட்டதைச் சொன்னது மாதிரி இக்காலத்தில நாங்க படுகிற அவலத்தையும் சொல்ல ஒருவர் முன்வரவேண்டும்" என்றார்.

என்னுடைய காலத்தில் சில பத்திரிகைகள் நடாத்திய அநுபவம் உள்ளது. பல்கலைக்கழகத்தில் மாணவனாகவும் உதவி விரிவுரையாளராகவும் இருந்த காலத்தில் 'புவியியல்' என்றொரு சஞ்சிகை நடாத்தினேன். 25 பிரதிகள் வெளியிடப்பட்டன. பாடசாலைகளில் நல்ல வரவேற்பைப் பெற்றது. இந்த சஞ்சிகையின் கௌரவ ஆசிரியராகப் பேராசிரியர் தம்பையாப்பிள்ளையைப் போட்டதால் புவியியல் விரிவுரையாளர் சோ. செல்வநாயகத்தின் பகைமையைச் சம்பாதிக்க நேர்ந்தது. அது என் பல்கலைக் கழகத்தின் பிற்கால வாழ்வைப் பாதித்தது. பல்கலைக்கழகத்தினை விட்டு வெளியேறிய பின்னர் 'விவேகி' என்ற சஞ்சிகையின் இணையாசிரியராக இருக்க நேர்ந்தது. விவேகி என்ற சஞ்சிகையை ஆசிர்வாதம் என்பவர் பல்லாண்டுகளாக நடாத்தி வந்தார். அப்பத்திரிகையை எடுத்து நவீன வடிவில் கொண்டு வர செம்பியன் செல்வன் முன் வந்தார். அதனால் அதன் இணையாசிரியராகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. ஈழத்து இலக்கிய உலகில் விவேகியின் பங்களிப்பு அதிகமாகும். இப்பத்திரிகை மூலம் இன்றைய எழுத்தாளர் பலர் அறிமுகமாயினர். விவேகியின் சில பிரதிகள் கிடைக்காமையினால் அதன் இலக்கியப் பணியை அளவிட முடியாதுள்ளது. அதன் பின்னர் மூத்த எழுத்தாளர் **வரதர்** 'அறிவுக் களஞ்சியம்' என்றொரு மாதப் பத்திரிகையை ஆரம்பித்தார். மூன்றாண்டுகள் நடந்தது. அதன் பின்னர் என்னால் 'நுண்ணறிவியல்' என்றொரு பத்திரிகை தொடங்கப்பட்டது. அதுவும் மூன்றாண்டுகள் நடந்தது. உண்மையில் அறிவுக் களஞ்சியமும், நுண்ணறிவியலும் நிற்பாட்டப்பட்டமைக்குக் காரணம் விற்பனையல்ல. எழுதும் திறன் அற்றவர்கள் இன்மையே. ஒவ்வொரு மாதமும் 32 பக்கங்களை நான் ஒருவனே நிரப்ப நேர்ந்தது. ஈழமுரசு என்றொரு தினசரி வெளிவந்தது. அதனை மயில் அமிர்தலிங்கம் என்பவர் வெளியிட்டார். ஈழமுரசின் இணைப்பாக வெளியிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிதழைத் தயாரித்துத் தருமாறு என்னிடம் கேட்டார். 'மாலை முரசு' என நான் தயாரித்துக் கொடுத்தேன். இரண்டாண்டுகள் வெளி வந்ததாக நினைவு. அமிர்தலிங்கம் என்ற அற்புத மனிதனின் அகால மரணத்துடன் நின்றுவிட்டது. இவ்வாறு காலத்திற்குக் காலம் பத்திரிகைகள் சில என்னுதவியுடன் வெளிவந்துள்ளன.

கொழும்பு வாழ்வில் எனக்கு ஏற்பட்ட அநுபவங்களில் ஒன்று **'சுதந்திரன்'** ஆசிரியராகவிருந்த இ.சங்கரை சந்தித்தமை தான். பல்கலைக்கழகத்திலிருந்த போதே சுதந்திரனுக்கு சிறுகதைகள் எழுதி அறிமுகமாயிருந்தேன். மேலும் நானும் செம்பியன் செல்வனும் இணைந்து 'நிழல்கள்' என்றொரு நாவலையும் சுதந்திரனில் எழுதியிருந்தோம். இந்த நாவல் புதுமையானது. ஒவ்வொரு அத்தியாயத்தை ஒருவர் மாறி ஒருவர் எழுதினோம். இந்த அறிமுகங் ளுடன் சங்கரை அவர் பணிமனையில் சந்தித்தேன். மூத்த எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரையைக் கொண்டு சுதந்திரனில் ஒரு தொடர்கதை எழுதுவித்தால் என்ன என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. எஸ்.பொன்னுத்துரை அப்போது 'இளம்பிறை' என்றொரு சஞ்சிகையை ரஹ்மான் என்பவருடன் இணைந்து வெளியிட்டு வந்தார். பொன்னுத்துரையைச் சந்திப்பதற்காக இளம்பிறை காரியாலயத்திற்குச் சென்றோம். நிறைவெறியில் எங்களைச் சந்தித்தார். அவர் சுதந்திரனில் எழுத ஒப்புக் கொண்ட நாவல் தான் 'சடங்கு'. அவருக்கு அழியாத புகழைத் தேடித் தந்தது.

இ. சங்கர் ஒரு சிறந்த அரசியல் விமர்சகராவார். சுதந்திரனில் அவர் இருந்த காலத்தில் எழுதிய அரசியல் கட்டுரைகள் தரமானவையாகவும் தமிழ் மக்களைச் சிந்திக்கவும் வைத்தன. அவ்வாறான கட்டுரைகள் எழுதுவோர் இன்றில்லை. இன்று தமிழ் மக்களுக்குச் சரியான அரசியல் தடத்தைச் சுட்டிக் காட்டுவோரில்லை. தமிழ் மக்களது பாரம்பரியங்களையும் இன்றைய அரசியல் நிலைமைகளையும் புரிந்து கொண்ட அரசியல்வாதிகள் இல்லை. நமக்கு சரியான பாதையைக் காட்டுவாரில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரியாக உள்ளோம். சரியான அரசியல் தடத்தை சங்கர் போன்றோர் காட்ட வேண்டும்.

கொழும்புப் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் பதவி எளிதாகும் நிலை ஏற்பட்டது. என்னவளைக் கலியாணம் கட்டவும் நாள் நெருங்கியது. எல்லாவற்றுக்குமாக என் ஸ்கூட்டரை விற்க நேர்ந்தது. பண நெருக்கடி. பத்திரிகை ஒன்றில் விளம்பரம் இட்டேன். மூவர் பார்க்க வந்தார்கள். ஓடிப் பார்க்க வேண்டும் என்றார்கள். ஒத்துக் கொண்டேன். இருவர் எடுத்துச் சென்றுவிட்டு திருப்பிக் கொண்டு வந்தார்கள். 'பிறகு வாறம்' என்றார்கள். பெரிய ஏமாற்று நிகழ்ந்திருந்தது. எனது ஸ்கூட்டரின் பெற்றோல் மூடி களவாடப்பட்டிருந்தது. என்னை உதவி ஆசிரியராகக் கொக்குவில் இந்துக் கல்லூரி ஏற்றுக் கொண்டது. எனக்குப் புவியியல் கற்பித்த ஆசிரியர் குமாரகுலசிங்கம் இங்கிருந்தமை எனக்கு வாய்ப்பாக இருந்தது. யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் பகுதி நேர விரிவுரையாளராகவும் இருந்தேன். கல்வி அதிகாரியாக இருந்த மகாதந்தில என்பவர் என்னை அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளராக நியமித்தார். நான் போக மறுத்ததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையின் பகுதி நேர விரிவுரையாளராக நியமனம் தந்தார். மத்தியானம் வரை நான் கொக்கு வில் இந்துக் கல்லூரியிலும் பிற்பகல் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையிலு மாக என் பணி நடந்தது.

என் திருமண வாழ்க்கை இனிமையா கக் கழிந்தது. எனது இலக்கியப் பணியும் நடந்தது. நான் கொக்குவில் இந்துக்கல்லூ ரியில் படிப்பித்த காலத்தில் ஈழநாடு பத்தி ரிகை தனது 25 ஆவது நிறைவாண்டைக் கொண்டாடியது. அதன் நிமித்தம் நடாத் திய சிறுகதைப் போட்டியிலும் நாவல் போட்டியிலும் முதற் பரிசுகள் கிடைத்தன. நான் எழுதிய 'போராடப் பிறந்தவர்கள்' (இர வின் முடிவு) என்ற நாவல் முதற் பரிசில் பெற்றது. அக்காலங்களில் சிரித்திரன் சுந்தர் தனது பத்திரிகையின் தலைமைப் பீடத்தை பிறவுண் வீதிக்கு மாற்றினார். சகல உதவிகளும் செய்து கொடுத்தேன். நிறைய எழுதினேன். 'ஆச்சி பயணம் போகிறாள்', 'கொத்தியின் காதல்', 'மயான பூமி', (பிரளயம்) 'கங்கைக் கரையோரம்' எனப் பலவற்றை எழுதினேன். நடந்தாய் வாழி வழுக்கியாறும் சிரித்திரனில் வெளி வந்தது. சிரித்திரன் எனது சில நூல்கள் வெளியிட்டது. அவ்வகையில் 'அலை கடல் தான் ஓயாதோ?', 'சித்திரா பௌர் ணமி', 'முற்றத்து ஒற்றைப் பனை' என்பன முக்கியமானவை. சிரித்திரன் சொந்தக் கட்டிடத்தில் குடி புகுந்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆறு ஆண்டுகள் கடமையாற்றினேன். அவ் வேளை என் சம்பளம் அறுநூறு ரூபா வரை யில் இருக்கும். இது எனக்குப் போதுமான தாக இருந்தது. எனது பெற்றோருக்கு செலவிற்கு 150 ரூபா கொடுப்பேன். 200 ரூபா எனது காருக்கு வைத்திருப்பேன். மிகுதி வீட்டுச் செலவிற்குப் போதும். அக் காலத்தில் காரில் தான் பாடசாலை செல் வேன். பாடசாலையுடன் தேங்கி இருந்து விட என்னால் முடியவில்லை. அப்போது இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை நடந் தது. எடுத்தேன். எடுபட்டேன். முதலில் காரி யாதிகாரியாக வலிகாமம் வடக்கு (தெல்லி ப்பளை) பணிமனைக்குச் சென்றேன். அங்கு திருவாளர் பற்றிக்ஸ் என்பவரிடம் வேலை கற்றுக் கொண்டேன். தெல்லிப்பளையில் தொடர்ந்து இருக்க முடியவில்லை. கிண் ணியாவுக்கு மாற்றிவிட்டார்கள். கிண்ணி யாவுக்கு மனைவி, ஒரு மகள் சகிதம் பய ணமானோம். அங்குதான் அரசியல்வாதி கள் தமது பாராளுமன்றக் கதிரைகளைத் தக்க வைத்திருப்பதற்கு உத்தியோகத்தர் களை எவ்வளவு தூரம் கட்டுப்படுத்துவார் கள் என்பதை நிதர்சனமாகக் கண்டேன்.


## மகிழ்ச்சியடைகின்றோம்


பேராசிரியர். ம.கருணாநிதி

நீண்ட கால மல்லிகை அபிமானியும் கல்விமானுமாகிய **திரு.ம.கருணாநிதி** அவர்கள் கல்வித்துறையில் **பேராசிரியரா** கியுள்ளார். அன்னாரது கல்வித்தகைமையைப் பாராட்டி, மல் லிகை தனது ஆனந்த மகிழ்ச்சியில் பங்கு கொள்ளுகின்றது.

-ஆசிரியர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி மூன்றாவது ஆண்டு மலர் வெளியீட்டுவிழா "ஒரு வாசகனின் பிரதிகள்" நூல் அறிமுக விழா

**-மேமன்கவி**



நீண்ட இடைவெளிக்கு பின் வடபகுதிக்கு செல்வதற்கான சமீபத்தில் ஒரு வாய்ப்பு கிட்டி யது. யாழ்ப்பாணம் நெல்லியடியிலிருந்து கடந்த மூன்று ஆண்டுகளாக வெளிவரும் பரணீ தரன் கலாமணி மற்றும் துஷ்யந்தன் போன்ற இளைஞர்களின் உழைப்பில் வெளிவரும் **ஜீவ நதி** சஞ்சிகையின் 25 வது இதழ் வெளியீட்டு என்னை அழைத்ததன் மூலம் அந்த வாய்ப்பு கிட்டியது.


இப்பயணத்துடன் சமீபத்தில் கொடகே பதிப்பாக வெளி வந்திருக்கும் எனது **'ஒரு வாசகனின் பிரதிகள்'** எனும் கட்டுரைத் தொகுப்பின் அறிமுக விழா ஒன்றினை ஜீவநதி குடும்பத்தினர் மறுநாள் ஏற்பாடு செய்வதாகக் கூறினார்கள்.

அதன் பிரகாரம் நண்பர் வதிரி சி.ரவீந்திரனுடன் வெள்ளிக்கிழமை இரவு புறப்படுவதாக இருந்தது. ஆனால் நண்பர் ரவீந்திரனுக்கு தவிர்க்க முடியாத பணி நிமித்தம் என்னுடன் வர முடியாத சூழல். நீண்ட தூரப் பயணத்தை தனியாக பயணிப்பது என்பது ஒரு சலிப்பான அனுபவம் என நினைத்துக் கொண்டிருந்த பொழுது,

அதிஷ்டவசமாக வதிரி இராஜேஸ்கண்ணனும் இளங் கவிஞர் அஜந்தகுமாரும் வியாழன் அன்று கொழும்பில் நடக்கவிருந்த சாகித்திய விழாவில் கலந்துக் கொள்ள வந்திருந்தார்கள்.

வெள்ளி காலை அவர்கள் யாழ் திரும்புவதாக இருந்தது. ஆனால் நண்பர் ரவீந்திரன் என்னுடன் வர முடியாமல் போனதால் எனக்காக அவ்விருவரும் என்னுடன் வெள்ளி இரவு யாழ் திரும்புவதெனத் தீர்மானித்தார்கள். அவ்விருவர்களுடன் மேற் கொண்ட பயணம் மிக பயன்மிக்கதாக இருந்தது.

நண்பர் இராஜேஸ்கண்ணனைப் பற்றிச் சொல்வதானால் சிறந்த சிறுகதையாசிரியர். இரு சிறுகதைத் தொகுப்புக்களையும் **('முதுசொமாக', 'தொலையும் பொக்கிஷங்கள்')** மற்றும் ஒரு கவிதைத் தொகுதியினையும் வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் சமூகவியல் துறை விரிவுரையாளர். சிறுகதைத் துறையில் தனித்துவமாய் இயங்கி வருபவர்.. உரையாடலை கொண்டே கதையை நகர்த்தி செல்வதில் வல்லவர். ஈழத்து சிறுகதைத்துறையில் அத்தகைய உத்தியினை கையாண்டு வெற்றி கண்டவர்களில் ஒரு சிலர்களில் இராஜேஸ்கண்ண னும் ஒருவர் என்பதே அவரின் தனித்துவம். அஜந்தகுமார் புதிய கவிதைப் படைப்பாளிகளில் ஒருவர். **'ஒரு சோம் பேறியின் கடல்'** எனும் தலைப்பிலான கவிதைத் தொகுப்பினை வெளியிட்டுள்ளார். இவரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிச் சென்ற கலை இலக்கியப் பணிகளின் வழியான செல்வாக்கை, பிற்காலத்தில் தோன்றிய இத்தலைமுறை படைப்பாளிக ளின் பணிகளில் காணக் கூடியதாக இருக் கிறது. நண்பர் ரவீந்திரன் போன்றவர்கள் கொழும்புவாசிகாளக மாறிய போதும் இவர் கள் நாடிய பொழுதெல்லாம் தேவை யான ஆலோசனைகள் வழங்குவதில் பின் நிற்க வில்லை என்பதையும் நான் அறிவேன். அதே நேரத்தில் இன்று வரை அவர்களுடன் ஒன்றாகக் கலந்து உறவாடிக் கொண்டிருக் கும் மூத்த எழுத்தாளர் தெணியான் அவர்க ளின் உறவு தொடர்பு மிகக் காத்திரமான ஒன்றாக இருப்பதை என்னால் உணர முடிந் தது. அக்கூற்றினை நிரூபிக்கும் வகையில் நான் கலந்து கொள்ளச் சென்ற இரு கூட்ட ங்களுக்கும் அவரையே தலைமை வகிக்க வைத்தமையை சொல்லலாம். தெணியான் அவர்களைப் பொறுத்த வரை, 70களின் மத் தியில் முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்து டன் எனக்கு ஏற்பட்ட தொடர்பு நாள் தொடக் கம் அவருக்கும் எனக்குமான உறவு. நான் அவர்மீது கொண்டிருக்கும் மரியாதைக்கும் மதிப்புக்கும் அந்த உறவு மட்டுமே காரண மாக அமையவில்லை. அதற்கு மேலாக கடந்த காலத்தில் வட பகுதி கண்ட வாழ் வின் இருப்பை அசைத்து பார்த்த பல உக்கிர பிரச்சினைகளின் பொழுதும் தன் மண்ணை விட்டு வெளியே வராத அவரது பிடிவாதம் அவர் மீதான மதிப்புக்கும் மரி யாதைக்கும் காரணமாக அமைந்ததோடு, அதற்கும் மேலாக முன்னாள் எழுத்தாளர் என்ற அடைமொழியுடன் ஒய்வு பெற்ற மூத்த எழுத்தாளராக ஒதுங்கி விடாமல், வாழ்வின் இருப்பை அசைத்து பார்த்த பல உக்கிர பிரச்சினைகளின் மத்தியிலும் ஓயாது படை ப்பாக்கப் பணியில் ஈடுபட்டு, இன்று வரை ஓயாது ஈடுபட்டுக் கொண்டிருக்கும் படைப் பாளிகளில் ஒருவராக, தான் வரித்துக் கொண்ட கருத்தியல் நிலையிலிருந்து சிறிதும் பிசகாது, தான் வாழ்ந்து கொண்டிரு க்கும் சூழலில் உருவாகிய, உருவாகிக் கொண்டிருக்கும் புதிய தலைமுறை படைப் பாளிகளுடன் இடைவெளியற்ற உறவு பேணி வரும் ஓர் மனிதநேயப் படைப்பாளி என்ற வகையி லும், அவர் மீது எனக்குத் தனி மரியாதை மதிப்பு. அதன் காரணமாக இம்முறை அவர் வாழ்ந்த பிரதேசத்திற்கு சென்ற பொழுது முதலில் அவரைச் சந்தி க்க விரும்பினேன்.

அதிகாலை 6..00மணி அளவில் பரணீதரன் வீடு சென்று, சிறிது நேரம் ஓய்வுக்குப் பின் துஷ்யந்தனின் உதவியுடன் தெணியான் அவர்களின இல்லம் செல்ல முடிந்தது. நீண்ட கால இடைவெளிக்கு பின் நேரில் சந்தித்ததனால் அவருக்கும் எனக் குமிடையில் பேசுவதற்கென பல விடயங் கள் இருந்தன. பேசினோம். பிற்பகல் 3.00 மணிக்கு **ஜீவநதி** மூன்றாவது ஆண்டு மலர் வெளியிட்டு விழா ஏற்பாடு செய்யப் பட்டிரு ந்தது. அங்கு செல்வதற்கு முன்னதாக ஏதோ ஒரு மண்டபத்தில் நடைபெறும் என்றுதான் நினைத்திருத்தேன். ஆனால் பரணீதரன் வீட்டுக்குச் சென்ற பொழுதுதான் கூட்டம் அங்குதான் நடைபெறப் போகிறது எனத் தெரிந்தது. ஒரு கூட்டம் நடைபெறு வதற்கு வசதியாகக் கலாமணி அவர்களின் இல்லத்து முன் விறாந்தை ஒரு மண்படம் போல் அமைந்திருந்தமை தொடர்ந்து அவர்கள் கலை இலக்கிய கூட்டங்களை அங்கு நடத்துவதற்கு வசதியாக இருந்தது.

பிற்பகல் நெருங்கிய பொழுது மழை பெய்யத் தொடங்கி விட்டது. எனக்கோ கவலையாகப் போய்விட்டது. இத்துணை ஆர்வத்துடன் இவர்கள் ஏற்பாடு செய்தி ருந்த கூட்டம் சோபை இழந்து விடுமோ என்ற பதட்டம். என்னில் ஏற்பட்டிருந்த கவ லையும் பதட்டமும் அவர்கள் இருவருக்கும் ஏற்பட்டிருக்கும் என நினைத்து அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பல்கலைக்கழகப் பட்டதாரி. இவ்விருவர்களுடன் யாழ் பயணம் சென்றதன் மூலம் பல விடயங்களைப் பற்றியும் அவ்விருவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள முடிந்தது



நெல்லியடியைப் பொறுத்தவரை அதன் அருகே அமைந்திருந்த வதிரி மற்றும் பொலிகண்டியை பொறுத்த வரையும் அப்பிரதேசங்களுக்கும் எனக்கும் 1976 ஆம் ஆண்டு தொடக்கம் ஒரு தொடர்பு இருந்து வந்துள்ளது. 1976 ஆம் ஆண்டு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தொடர்பின் காரணமாக அதன் எழுத்தாளர் கூட்டுறவு பதிப்பகத்தின் வெளியீடாக எனது முதலாவது கவிதைத் தொகுப்பான **'யுகராகங்கள்'** தொகுப்பின் வெளியீட்டு விழா யாழ் வீரசிங்க மண்டபத்தில் நடந்த சமயத்தில், நண்பர் லெ. முருகபூபதியுடன் யாழ்ப்பாணம் சென்றிருந்த வேளை முதல் முதலாக நான் வதிரி மற்றும் பொலிகண்டிக்கு பூபதியுடன் தெணியான் அவர்களை சந்திக்க சென்ற வேளை தான், முதல் முதலாக நான் வதிரி மற்றும் பொலிகண்டிக்கு சென்றேன். அங்கு வைத்துத்தான் பிற்காலத்தில் என் நெருங்கிய நண்பர்களான ராஜஸ்ரீகாந்தன் மற்றும் போன்றோரைச் சந்தித்தேன், இவர்களுடன் இன்னொருவரைப் பற்றியும் சொல்ல வேண்டும்.

எனது தம்பிமார்களுக்கும் எனக்கும் 70களின் ஆரம்பத்தில் எங்கள் வீட்டுக்கு வருகை தந்து ஆங்கிலப் பாடத்தை நமக்குக் கற்பித்த திரு. குணசிங்கம் மாஸ்டரும் (இவர் வதிரி சி. ரவீந்திரனின் உறவினர்) வதிரி பொலி கண்டியைச் சேர்ந்தவர் என்பதும் இங்கு குறிப்பிட வேண்டிய சேதி. இவர்தான் 1972ம் ஆண்டு கொழும்பில் வைத்து வதிரி சி. ரவீந்திரனை முதன் முதலாக எனக்கு அறிமுகப்படுத்தியவர். இம்முறைக்கு முந்திய யாழ்ப்பாணப் பயணம் வதிரியை முன் வைத்தே என்னால் மேற் கொள்ளப்பட்டது. (அத்தோடு யாழ் இலக்கிய வட்டத்தின் பரிசளிப்பு விழாவும் இருந்தது.) அக்காலகட்டத்தில் மறைந்த நண்பர் ராஜஸ்ரீகாந்தன் அவர்களுக்கு அவரது ஊரான வதிரியில் ஓர் அஞ்சலிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கூட்டத்தில் கலந்துக் கொள்வது அவசியம் என கருதியதால் சென்று இருந்தேன். அவ்வாறாக அப்பிரதேசத்தை நோக்கிய எனது இம்முறை பயணத்திற்கு **ஜீவநதி**யின் மூன்றாவது ஆண்டு மலர் வெளியீட்டு விழா ஓர் சந்தர்ப்பமாக அமைந்த பொழுது, எனக்கு இன்னொரு யோசனையும் தோன்றியது. இக்குறிப்பில் முன்பு குறிப்பிட்டது போல், எனது முதலாவது கவிதைத் தொகுப்பான **யுகராகங்கள்** தொகுப்புக்கு யாழ் நகரில் நடைபெற்ற வெளியீட்டு விழாவுக்குப் பின் அடுத்து வந்த எனது எந்தவொரு நூலுக்கான வெளியீட்டு விழாவோ அறிமுக விழாவோ நடத்துவதற்கான சந்தர்ப்பம் கிட்டவே இல்லை. அதற்கான சூழலும் இருக்கவில்லை.



அதனால் இம்முறை யாழ் செல்லவதற்கான சந்தர்ப்பத்தின் பொழுது, சமீபத்தில் கொடகே வெளியீடாக வெளிவந்திருக்கும் எனது முதலாவது கட்டுரைத் தொகுப்பான **'ஒரு வாசகனின் பிரதிகள்'** எனும் நூலுக்கான அறிமுக விழா ஒன்றினை அங்கு நடத்துவது என்ற யோசனை தோன்றியது. அந்த யோசனையை டொமினிக் ஜீவா அவர்களும், நண்பர் சி. ரவீந்திரனும் வரவேற்றார்கள். அதே வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய யோசனையை மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்று, அதற்கான ஏற்பாடுகளையும் செய்து மிகுந்த ஒத்துழைப்பு வழங்கினார்கள் **ஜீவநதி** குடும்பத்தினர். அதற்காக அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைபட்டவனாக இருக்கிறேன்.



அதேவேளை, எனது அக்கட்டுரைத் தொகுப்புக்கு அங்கொரு அறிமுக விழா செய்வதற்கான ஒரு தனிப்பட்ட காரணமும் இருந்தது. நான் அத்தொகுப்பை நண்பர் ராஜ ஸ்ரீகாந்தன் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்திருக்கிறேன். அந்த வகையில், அத்தொகுப்புக்கான அறிமுக விழா ராஜ ஸ்ரீகாந்தனின் பிறப்பிடமான வதிரியில் வைக்கக் கூடிய சந்தர்ப்பம் சாத்தியம் இல்லை என்ற நிலையில், அதன் அருகே அமைந்த நெல்லியடியில் அவ்விழாவை வைக்கக் கிடைத்தமை மனதுக்குப் பெரும் திருப்தியை அளித்தது.

வெள்ளிக்கிழமை இரவு புறப்பட்டுச் சனிக்கிழமை அதிகாலை 6.00 மணி அளவில் நானும் நண்பர்களான இராஜேஸ் கண்ணனும் அஜந்தகுமாரும் நெல்லியடி போய் சேர்ந்தோம்.

பரணீதரனும் துஷ்யந்தனும் என்னை அழைத்துச் செல்ல வந்திருந்தார்கள். பரணீதரனின் உற்சாகமான இயக்கம் என்னை மிகவும் கவர்ந்தது. அவரைப் பார்ப்பவர்கள் அவரது அமைதியான தோற்றம் அவர் இவ்வளவு தூரம் இயங்கக் கூடியவர் என்று சொல்ல மாட்டார்கள். அவருக்கு சமமாக அவரோடு இயங்கிக் கொண்டிருந்தவர்தான் துஷ்யந்தன். இத்துணை சிறிய வயதிலா இவ்விருவர்களின் இயக்கம் வெறுமனே ஆர்வத்தின் பாற்பட்டது அல்ல மிகுந்த பொறுப் புணர்ச்சியுடன் கூடியது எனக் கண்டு கொண்டேன். இது மிகைக் கூற்று அல்ல கண் கூடாகப் பார்த்த உண்மை. ஆதனால் தான் பரணீதரனால் **ஜீவநதி** போன்ற ஒரு சிறுசஞ்சிகையைத் துஷ்யந்தன் போன்ற பொறுப்புணர்ச்சி மிக்க இளைஞர்களின் ஒத்துழைப்புடன் மூன்று ஆண்டு காலமாக நடாத்த முடிந்துள்ளது.



ஏனெனில் நான் பழகிப் பார்த்த புதிய தலைமுறையினர் கணிசமானவர்களிடம் பல்வேறு மெச்சதக்க திறன்களும் இருந்தும் பொறுப்புணர்ச்சி இல்லாமையின் காரணமாக அவர்கள் செயற்பட்டு கொண்டிருக்கும் பணிகளில் வெற்றியினையும் பிறரின் அவதானத்தையும் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால் பரணீதரனும் மற்றும் துஷ்யந்தனும் அப்படியில்லை எனத் தெரிந்தது. அவர்கள் கொண்டிருக்கும் கருத்தியல்களில் சிற்சில இடங்களில் (ஜீவநதி வழியாக அவர்கள் முன் வைக்கும் ஒரு சில கருத்துக்களை முன் வைத்து சொல்கிறேன்,) நான் அவர்களுடன் முரண்பட்டவனாகவும் இருக்கிறேன், தமது கருத்தியல் மற்றும் சிந்தனை சூழலில் கருத்தியல் ரீதியான முரண்பாடானது தனிநபர்களிடையிலான பகைமை உணர்ச்சியாக வாசிக்கப்பட்டு கொண்டிருக்கும் அதே வேளையில், ஒருவருடனான கருத்தியல் ரீதியான முரண்பாட்டைப் பற்றிய பிரஸ்தாபிப்பு என்பது அந்த ஒருவர் கொண்டிருக்கும் சகல விதமான, மெச்சத்தக்க திறன்களை நிராகரிக்கும் ஒரு செயற்பாடாகவும் அர்த்தம் கொள்ளப்படும் சூழலைப் பற்றி அறிந்து இருப்பவனாக நின்றுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பரணீதரனைப் பற்றியும் துஷ்யந்தனைப் பற்றியும் எனது கருத்துக்களை முன் வைத்திருக்கிறேன்.



**ஜீவநதி** போன்ற ஒரு சஞ்சிகையை, சிறுசஞ்சிகையைப் பற்றிய முழுமையான பிரக்ஞையுடன் ஒரு சஞ்சிகையாக இன்னும் சொல்ல போனால், வட பிரதேசத்தைத் தவிர, இலங்கையின் **பிற பிரதேசங்களுக்குப் போய் சேராத, போய் சேர முடியாத ஒரு சிறுசஞ்சிகையாக** அல்லாமல், ஈழத்து சிறுசஞ்சிகை வரலாற்றில் இடம் பெற்றுக் கொள்ள முடிந்த ஒரு சிறுசஞ்சிகையாகப் பரணீதரன் மற்றும் அவரது நண்பர்களால் (துஷ்யந்தன் போன்ற நண்பர்கள்) நடாத்த முடிந்திருப்பதற்கு ஒரு சில அக-புற கார ணிகள் செயற்பட்டிருக்கின்றன என எனக்கு அவர்தம் சூழலுக்கு சென்ற பொழுதுதான் ஆழமாகப் புரிந்து கொள்ள முடிந்தது. காரணிகளாகச் சொல்வது என்றால் முதலாவதாகப் பரணீதரனின் தந்தையார் த. கலாமணி அவர்கள். அவர் ஈழத்து கலை இலக்கியத் தளத்தில் நீண்ட காலமாக ஆக்க இலக்கியத் துறையில் செயற்பட்டு வருபவர். ஆய்வாளர். இதுவே பரணீதரன் **ஜீவநதி** போன்ற ஒரு சஞ்சிகை நடாத்துவதற்கான அகரீதியில் முதல் நிலையாக செயற்பட்டிருக்கிறது. அதன் காரணமாகப் பரணீதரனுக்கு குடும்ப ரீதியாக அப் பணியில் ஈடுபடுவதற்கான முழுமையாகக் கிடைத்த ஒத் துழைப்பு இவையே அக நிலைக் காரணிகளாகப் பரணீதரனில் செயற்பட்டுள் என எனலாம்.



புறநிலைக் காரணியாகப் பார்க்குமிடத்து, பரணீதரனும் அவருடன் ஒத்துழைக்கும் துஷ்யந்தன் போன்ற நண்பர்களும் பிறப்பிடமாகக் கொண்ட வடமராச்சி பிரதேசம் மிக முக்கியமான புறநிலைக் காரணியாகப் பரணீதரனிதும் அவரது நண்பர்களினதும் கலை இலக்கிய செயற்பாடுகளில் செல்வாக்கு செலுத்தி வந்துள்ளது. அதாவது அவர்கள் சார்ந்த வடமராச்சி பிரதேசத்திலிருந்து தோன்றிய பல ஆளுமைகள் ஈழத்து கலை இலக்கிய உலகுக்கு கணிசமான முறையில் பங்காற்றி உள்ளார்கள். பங்காற்றி வருகிறார்கள்.

(அத்தகையவர்களைக் கொண்டு ஒரு பட்டியலே போடலாம். ஆனால் பட்டியல் போடும் பொழுது ஏற்படும் ஆபத்து என்னவென்றால் ஒருவரது பெயராவது விடுபடும் பொழுது, குறித்த விடயத்தையிட்டு வரலாறு சரியாகத் தெரியாதவராக எம்மை ஆக்கி விடும் ஆபத்தும் இருக்கிறது. அதனால் பட்டியல் போடும் வேலையைச் செய்ய விரும்பாததனால் கணிசமானவர்கள் என்ற சொல்லாடலைப் பயன்படுத்தி இருக்கிறேன்.) அத்தகையவர்களின் வழியான 3ஆண்டுகள் **(ஆதர்சனம், ஆதரவு, ஆலோசனை)** பரணீதரன் மற்றும் அவரது நண்பர்களின் (குறிப்பாக துஷ்யந்தன் ) கலை இலக்கியப் பணிகளில் புற நிலையாகச் செயற்பட்டு வந்துள்ளன எனத் தெரிகிறது. அதிலும் குறிப்பாக அவர்களின் நெருங்கிய சூழலில் இயங்கிக் கொண்டிருந்தவர்களான மூத்த எழுத்தாளர் தெணியான் அவர்கள், காலஞ் சென்ற ராஜ ஸ்ரீகாந்தன், மற்றும் வதிரி சி.ரவீந்திரன் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களில் நண்பர் ராஜ ஸ்ரீகாந்தன் அவர்கள் கலை இலக்கிய உலகில் பிரவேசிப்பதற்கு முன்னதாகவே எம்மை விட்டு பிரிந்துப் போனாலும், அவர் ஆற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கினேன். ஆனால் அவர்கள் இருவரது முகங்களில் எந்த விதமான பதட்டமோ கவலையோ தெரியவில்லை. நிச்சயமாகக் கூட்டம் சிறப்பாக நடைபெறும் என்றொரு அசைக்க முடியாத நம்பிக்கையுடன் செய லாற்றிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களின் நம்பிக்கை வீண் போக வில்லை. தெணியான் அவர்களின் தலை மையில் நடைபெற்ற அக்கூட்டத்திற்கு கடும் மழைக்கு மத்தியிலும் கணிசமானவர்கள் வருகை தந்திருந்தார்கள். எனக்கோ ஆச்ச ரியாமக இருந்தது. அக்கூட்டம் நடந்த அக் கால கட்டத்தில் வடமாகண சாகித்திய விழா தெடர்ந்து மூன்று நாட்களாக கிளி நொச்சியில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவ்வாறான சூழலைக்கு மத்தியிலும் மிகக் காத்திரமானவர்கள் அக்கூடட்த்திற்கு வருகை தந்திருந்தார்கள். தெணியான் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அவ்விழா துஷ்யந்தனின் வரவேற்புடன் தொடங்கியது. இராஜேஸ்கண்ணன் மலர் அறிமுகவுரையை நிகழ்த்தினார். நான் முன்பு குறிப்பிட்டது போல் அந்தத் திகதியில் கிளிநொச்சியில் நடைபெற்றுக் கொண்டிருந்த வடமாகாண சாகித்திய விழாவில், மறுநாள் உரையாற்ற இருந்த அருட்திரு தமிழ்நேசன் அடிகளாரும் **ஜீவநதி** விழாவுக்கு வருகை தந்து மலர் வெளியீட்டு உரையை ஓர் அழகான உரை யாக நிகழ்த்தினார். சமீபத்தில் பேராசிரிய ராக நியமனம் பெற்ற விசாகருபன் அவர்க ளுககும் எனக்கும் மலரை மதிப்பிடும் பணி கொடுக்கப்பட்டிருந்த்து. பேராசிரியர் விசாக ருபன்அவர்கள் தன் பணியினை செவ்வனே நிறைவேற்றினார். ஆனால் எனக்குதான் ஒரு பிரச்சினை எழுந்தது. நான்தான் இறுதி பேச்சாளன். என்னிடம் ஒரு பழக்கம் இருக்கி றது. அது என்னுடைய பலமா? பலஹீனமா? எனத் தெரியவில்லை. அதாவது பேசுவத ற்கு மேடைகளில் ஏறினால் எப்படி பேசப் படுமோ என்ற கவலையோ, மேடைக் கூச் சமோ சமீப காலமாக என்னிடம் இருந்த தில்லை. மாறாக சபையினர் பற்றிய அக் கறை அவர்களின் மனோநிலை என்பன பற்றி உணர்வு என்னிடம் எப்பொழுதும் இரு ந்து கொண்டே இருக்கும். **ஜீவநதி** விழா விலும் அவ்வாறுதான் நடந்தது. வெளியே மழை தொடர்ந்து தூறிக் கொண்டுதான் இருந்தது. நான் எதிர்பாராத வண்ணமும், **ஜீவநதி** குடும்பத்தினர் எதிர்பார்த்த வண்ணமும் அவ்விழாவில் கணிசமானவர் கள் மழையின் காரணமாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அவ்விழாவுக்கு வந்திருந்தார்கள். அவர்களை நீண்ட ஓர் உரை நிகழ்த்தி மேலும் அவர்களைச் சிரமப்படுத்தாது நேர காலத்துடன் அவர்கள் தம் வீடு சேர வேண்டும் என்ற கவலையின் காரணமாக, மிக வேகமாகவும் சுருக்கமாக வும் எனது மதிப்பீட்டு உரையை முடித்துக் கொண்டேன். அந்த வேகத்திலும் சுருக்க மான முறையில் **ஜீவநதி** 3வது ஆண்டு மலரைப் பற்றிய உரையில், **ஜீவநதி** யின் வளர்ச்சி, அதன் போக்கு ஈழத்து சிறுசஞ் சிகை வளர்ச்சி போக்கில், **ஜீவநதி**யின் பங்கு என்பனவற்றைச் சொல்லி, இன்றைய ஈழத்து சிறுசஞ்சிகைகள் கவனம் செலுத் திய விடயங்களைப் பற்றி முன்வைத்து, அவ்வாறான விடயங்களைப் பிரநிதித்துவப் படுத்தும் வகையில் **ஜீவநதி** 3 வது ஆண்டுமலரில் இடம் பெற்ற படைப்புக்களை எடுத்துக்காட்டிப் பேசினேன்.

வேகமாகப் பேசினாலும் அவ்விழாவுக்கு தலைமை வகித்த தெணியான் அவர்களுக் கும் சபையோருக்கும் **ஜீவநதி** குடும்பத்தின ருக்கும் எனது உரை திருப்தி அளித்தமை எனக்கு ஆறுதலாக இருந்தது. அத்தோடு அவ்விழாவில் பெயரளவில் அறிந்து வைத் திருந்த கலை இலக்கிய மற்றும் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பலரைச் சந்திக்கக் கிடைத்தமை அக்கூட்டத்தில் கலந்து கொண் டதில் நான் பெற்ற பெரும் பயனாக இருந்தது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிவளவு மாமரத்து நிழலுக்குக் கீழே, தேவன் தீராத சத்திய வேட்கையுடன், ஏதோ ஒரு கலைவழிபாடு செய்ய வந்து நிற்பது போல், உலகப் பிரக்ஞையற்றவனாய், தன்னை மறந்து நின்று கொண்டிருந்தான். பதினாறு வயது கூட நிரம்பாத அவனுக்கு, அந்த வயதில் அப்படியொரு கலைத் தாபம். பெரும்பாலும் அவன் வயதொத்த ஏனைய இளைஞர்கள், அம் மாமரத்தை நாடி வருவது, மாங்காய் பறித்துச் சாப்பிடத்தான். பழுத்துக்குதவாத புளி மாங்காய் தானென்றாலும், கல்லால் அடித்து, அதை ஒவ்வொன்றாக விழுத்தி காயப்பட்டு விழுகிற அம்மாங்காய்களைத் தோழர்களோடு வேடிக்கைக் கதை பேசிச் சுவைத்து உண்பதில் அவர்களுக்கு அலாதி மகிழ்ச்சி.

# கானலில் ஒரு கங்கை விழிபாடு

—ஆனந்தி

வீட்டுக்காரன் கண்டால், அவர்களைச் சும்மாவிடமாட்டார். கண்டபடி திட்டு விழும். அவர்களின் கரைச்சல் தாங்காமல் சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்யும் லட்சுமிக்கு, மரத்துடனேயே காய்களை விற்றும் விடுவார். தேவன் இதையெல்லாம் கண்டு கொள்வதில்லை. அவனது உலகம், சராசரி மனித வாழ்வோடு ஒட்டாத, சிந்தனை வெறித்த, ஒரு தனிமை உலகம். நேரிலே பார்ப்பதற்கு எந்தப் பாசக்குட்டையினுள்ளும் அகப்படாத, விசாலமான ஆத்மார்த்த உணர்வுடன் கூடிய லட்சிய வேட்கை கொண்ட, அப்பழுக்கற்ற ஒரு மானுட தேவ புருஷன் போல் அவன் தோன்றுவான். சிறுவயதிலேயே பெற்றோரைப் பறிகொடுக்க நேர்ந்த காரணத்தினாலேயே அவனுக்கு அவ்வாறான ஒரு முதிர்ச்சி, தானாகவே கனிந்தது. அவனை ஆதரித்து அன்பு செய்ய, எவருமே முன்வரவில்லை. நெருங்கிய உறவினரொருவரின் வீட்டில், அடிமை வேலை செய்யும், ஒரு பணியாள னாகவே இன்னும் அவன் இருக்கிறான். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம், அவன் தனது இயல்பான தனிமை உலகை நாடி அந்த மரத்தடியே கதியென்று வந்து கிடப்பான். சிறு வயதிலேயே தனது வயதொத்த பையன்களை, ஏன் சிறுமிகளையும், ஒன்று கூட்டி அவன் நாடகம் போடவும் தவறுவதில்லை. அவனே சிறந்த நடிகன். நன்றாக நடிக்க வருவதோடு, மற்றவர்களைப் பயிற்றுவிக்கிற சிறந்த இயக்குநர் அவதாரமும், அவனுக்குண்டு.

சுகந்தி என்றொரு சிறுமி அவன் போடும் நாடகங்களில் முக்கிய கதாபாத்திரம் ஏற்று நடித்து வருபவள். அவனுக்கு நெருங்கிய சொந்தமும் கூட. மாமன் மகள் என்றாலும் மாற்றான் தோட்டத்து ரோஜா மாதிரி அவள்.

முதலாம் தலைமுறைக் காலமென்றபடியால், அவள் வயதுப் பெண்களுக்கே கட்டுப்பாடு அதிகம். வயது பத்தாக இருக்கும் போதே நல்ல வளர்த்தியும், மொழு மொழு வென்ற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகவனப்பும் கொண்ட, கள்ளம் கபட மற்ற, கிராமத்து இயல்புடன் கூடிய, ஒரு வசீகரமான இளந்தேவதை போல, அவள் இருந்தாள். தேவனுக்கு அவளை மிகவும் பிடிக்கும். தனது உயர்ந்த இலட்சியங்க ளையே ஆராதனை பண்ணி, வழிபடக் கூடிய, தனக்குப் பொருத்தமான ஓர் இலட் சியத் துணையாக எதிர்காலத்தில் அவள் இருப்பாளென்று, அவன் மனப்பூர்வமா கவே நம்பினான்.

சுகந்தி, பிறர் அறியாமல் அவனுடன் பழக நேர்கிற அந்தத் தருணங்கள் மிகவும் அற்புதமானவை. சிறுவயதிலேயே அவன் பற்றிய நினைவு, அவளையறியாமலே அவ ளின் மனதில் வேரூன்றி விட்டது. அடிவள வில், அந்த மாமரத்து நிழலுக்குக் கீழே, அவன் நாடகம் போடுவதற்காக ஒரு கீற் றுக் கொட்டகை போடுவான். இதில் யாரும் அவனைத் தடை செய்வதில்லை. அவனின் நாடகங்கள் மாலை வேளைகளில் அமர்க் களமாக நடைபெறும். இத்தனைக்கும் நடைமுறை வாழ்க்கையில் எடுபடாமல் போன ஒரு வெற்று மனிதன் மாதிரித்தான் அவன் நிலை. ஒருவேளை சாப்பாட்டுக் காகச் சமையல் வேலை செய்து பிழைப்ப வன். அரைக் காற்சட்டை தான் எப்பவும் அணிவான். அதுவும் சமை யல் கரி பிடித்து, அழுக்கு மண்டிக் காட்சி தரும். சுகந்தி அவனுக்காக மனமிரங்கி, தனது சகோத ரர்கள் போடாமல் கழித்து வைத்த பழம் உடுப்புகளை அவனுக்காக, வாஞ்சை யோடு எடுத்து வருவாள். எல்லாம் வீட்டிற் குத் தெரியாமல் தான்.

அவளும் ஒரு தனிப்போக்குத்தான். சராசரி பெண்களைப் போல, சலனம் மிக்க நடைமுறை வாழ்க்கையோடு ஒட்டாத விட்டு விலகி நின்று, பிரகாசிக்கின்ற, ஒரு தனித்துருவம் போன்றவள் அவள். தேவன் போலவே, கலை ஊற்றான புனிதமான மனம் அவளுக்கு. தேவனது இடறலற்ற, கணீரென்ற குரல் மீது, அவளுக்கு ஒரு தனி ஈடுபாடு. அவன் பிறரைச் சங்கடப் படுத்தாமல், அமைதியாகவும் சலனமின்றி யும் பேசும் போது, அவள் கவனம் சிதறா மல் கேட்டுக் கொண்டிருப்பாள். நாடகத் தில் அவன் செய்து காட்டுவதை அப்படியே செய்வாள். அது அவர்கள் இதயங்களி லான ஒரு தனி உலகம்.

அது எவ்வளவு தூரத்திற்கு நிலைக் கும்? இந்த உலகம் வெற்றுக் கண்களால், கண்டு கொள்ளும் வரைக்கும் தான். சுகந்தி வளர்ந்து கொண்டிருந்தாள் வாழ்க் கையை நோக்கி. பருவம் கனிகிற தோற் றப்பாடு, அவளையறியாமலே வந்து சேர்ந் தது. அவளால் முன்பு போல, வெளியே வர முடியவில்லை.

எனினும் அந்த நிழல் வெறித்த சஞ்சார த்தினிடையே அபூர்வமான ஒரு கீதம் அவ ளுக்காகவே கேட்டபடியே இருந்தது. அது தேவனின் அழைப்புக் குரல். அது அவ ளின் காது வரைக்கும் போகும். அவளுள் புகுந்து சிலிர்ப்பூட்டி மயக்கமில்லாத ஓர் ஆதர்ஸ வெளிக்கு, அவளை இட்டுச் செல் லும். உலகம் விரும்பினாலென்ன, விரும் பாவிட்டாலென்ன, அப்படியான அவர்க ளின் உயிர் வாழ்தல், அங்கு இயல்பாகவே நடந்தேறி வந்தது.

ஒரு நாள் வீட்டிலே யாருமில்லாத சம யம், தேவன் முன்னால் நிலா எறித்தது. இந்த மண் வெறித்த பூமியில், அவனுக் காய், அவன் இலட்சியங்களுக்குத் தோள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பதற்காக ஒளிப்பிழம்பு சோதியாக ஒரு மனித முகம். வேறு யார் அவனை அப்படித் தேடி வந்திருக்க முடியும்?

சுகந்திதான், நிலை கொள்ளாத பரவச த்துடன் நிலா வெள்ளமாக வந்து நின்றாள். மணற்திட்டின் மீது, அவன் வெறிச் சோடிக் குந்தியிருந்தான் அவளைக் கண்டதும், தொண்டை வரளக் கேட்டான்.

"ஏன் சுகந்தி, ஒரு கிழமையாய் என் னைப் பார்க்க வரேல்லை?"

"முன்பு மாதிரி இல்லையப்பா, எனக் கினி வயது வந்திட்டுதாம். கண்டபடி நான் திரியக் கூடாதாம்."

"எப்பிடிச் சுகந்தி உன்னைப் பாக்காம லிருக்கிறது? எனக்கு நீ வேணும். என்ரை நாடகத்துக்கு மட்டுமல்ல. வாழ்க்கைக்கும் நீதான் வேணும். எங்கோ இருட்டில் கிடக் கிற என்னை உள்ளபடி, புரிஞ்சு கொண்ட வள் நீ ஒருத்திதானே"

"இது நடக்குமே? நாடகம் தான் உங் கடை உயிர். ஒரு பிச்சைக்காரனாக இருந் தாலும், கலை உங்களை வாழ்விப்பதாய், உங்கடை நம்பிக்கை. என்னை வாழ வைக்க இது போதுமென்று நான் நம்புறன். இந்த நம்பிக்கை, வீட்டிலையும் வரவே ணுமே. அப்பா என்ன சொல்லுறார் தெரி யுமே? நீங்கள் ஒரு உதவாக்கரையாம். உங்களோடு பழகினால், நானும் கெட்டழி ஞ்சு போயிடுவேனாம். வேலிப் பொட்டுக் குள்ளாலை, நான் இனி வெளியே போகக் கூடாதாம். அப்பிடி மீறிப் போனால், வேலிப் பொட்டையும் அடைச்சுப் போடுவாராம்"

"நீயும் அப்பிடியே நினைக்கிறாய், சுகந்தி?"

"எப்பிடி....?"

"நான் உதவாக்கரையே? நான் படிக் காதது ஒரு பெரிய குறைதான். ஆறாம் வகுப்போடு, என்னைப் படிக்க விடேலை மாமா. சமையலுக்காக என்னை நிப்பாட் டிப் போட்டினம். அதனாலென்ன? எனக் குள்ளே கலைத்தீ எரிஞ்சு கொண்டிருக்கு. நான் ஒரு நல்ல நடிகனாக வரவேணும். என்ரை குரல் வளத்தை வைச்சு, நான் பிழைச்சுக் கொள்ளுவன். இதன் மூலமே நான் உச்சத்துக்குப் போய்விடலாம், இல்லையா? நீ இதை நம்புறியே சுகந்தி"

"இதை நம்பாமலா, நான் உங்களி ட்டை வந்தது? எனக்கு ஒன்றும் புரியே ல்லை. ஒரே குழப்பமாக இருக்கு. நீங்கள் உதவாக்கரையெண்டால், அப்பாவே ஒரு நல்ல மனிதனைக் காட்டட்டும். நான் அவனுக்கு மாலை போடுறன்"

"அதுதான் நடக்கப் போகுது சுகந்தி! நீ என்னை மறப்பதுதான் நல்லது" என்றான் அவன் மனவைராக்கியத்தோடு.

அதைக் கேட்டு ஒன்றும் பதில் கூற மனம் வராமல் சுகந்தி மௌனமாக அழுது கொண்டே போய்விட்டாள். இது நடந்து முடிந்து ஒரு யுகத்தேய்வில், மெதுவாக வாழ்க்கை கழிந்து போனது. சுகந்திக்காக எல்லாத் தகுதிகளையும் உடைய ஒரு நல்ல மனிதனைப் புடம் போட்டே அப்பா தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. இதில் தேவன் அவர் கண்களுக்குள் சிக்கவி ல்லை. கேவலம், அவன் ஒரு உதவாக் கரைதானே. வாழ்க்கையின் உன்னதங்க ளைப் பொருட்படுத்தாமல், ஒரு கழைக் கூத்தாடி போல அவன் நிலைமை. அப்படி யானால் யார் நல்ல மனிதன்? சுகந்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகத் தேடப்பட்டவனா அப்பிடியொருவன்? சல்லடை போட்டு, அப்படியொருவனைக் கண்டு பிடிக்க அப்பா என்ன பாடுபட்டிருப்பார்? வாழ்வியல் சார்பான அவரின் கணிப்பின்படி, சுகந்திக்காக வந்து சேர்ந்த குமார், புறம் போக்கு வாழ்க்கையைச் சீரும் சிறப்புமாகக் கொண்டு நடத்தக் கூடிய சகல தகுதிகளையும் பெற்ற, முழுமையான ஒரு பெரிய மனிதனென்றாலும் கூட மனதளவில், சுகந்தியை நெருங்கி வரமுடியாதபடி சிறுமைப்பட்டுப் போயிருக்கிற, அவனது நடத்தைக் கோளாறுகள் காரணமாகச் சுகந்தி, மனதால் பங்கப்பட்டுப் போகிற, இழப்பு வாழ்க்கை யென்றே தனது தரம் கெட்ட கல்யாண விதியின் சாபமாகி, வெகுவாக மனம் நொந்து, உருக் குலைந்து போயிருந்தாள். தேவனை மட்டும் அவள் மணக்க நேர்ந்திருந்தால், என்ன நடந்திருக்கும்? உணர்வுகளும் மனமும், ஏன் உயிரும் கூட, எவ்வித பங்கமுமின்றி உச்சத்தில் கொடிகட்டிப் பறக்கவல்லவா நேர்ந்திருக்கும்.

குமாரின் அதிதீவிர மன வக்கிரம் காரணமாக, அவளுக்கு ஒன்றுமே மிஞ்சவில்லை. உயிர் ஒழிந்து போன, வெறும் சடம் தான் இப்போது அவள். அவள் ஒருகாலத்தில் மேடை விரித்து தேவனோடு ஒன்று கூடிக் குலாவித் திரிந்த, அந்த அடிவளவு மாமரத்து நிழல் கூட, எதிலோ சோடை போனதாய், களையிழந்து காட்சி தருகிறது. கண்ணைத் திறந்து பார்த்தால் எங்கும் வெறுமை நெருப்புத் தான். இக்கனவிடையே நிஜதரிசனமாய், அவள் கண்கள் தேவனையே காணத் துடித்தன. அவன் என்னவானானோ தெரியவில்லை. கானல் முளைத்த நெஞ்சில் மீண்டும் அவன் காட்சிக்கு வருவானா? அவனை எங்கே என்று தேடுவது? அவன் காலடிச் சுவடுகள் தேடி, யாரும் அறியாமல் கிராமத்துப் பாதை வழியே போனது போது, ஒரு சமயம் தேவன் எதிர்ப்பட்டான் அவள் முன்னால். அவளைக் கண்டதும், சைக்கிளை விட்டு மெதுவாகப் பழைய புன்சிரிப்பு மாறாமல், இறங்கி வந்தான். அவள் அவனெதிரே ஒன்றும் பேசத் தோன்றாமல், அவனையே மெய் மறந்து பார்த்தபடி உறைந்து போய் நின்றிருந்தாள்.

அவன் வெகுவாக மாறிப் போயிருந்தான். நீண்டு வளர்ந்த தலைமுடியும் அழுக்கு மண்டிக் காட்சி தந்தான். அவனுக்கும் ஏதோ பெருஞ் சோகம் நேர்ந்திருக்க வேண்டுமென்று, அவள் திடீரென்று நினைவு கூர்ந்தாள். அவனுக்கு அவளோடு நிறையப் பேசவேண்டும் போல், தோன்றியது. கலை ஊற்று வற்றாத, ஒளிமிக்கக் கண்களால் அவளை ஏறிட்டு நோக்கியவாறே, அவன் மிருதுவாகக் கேட்டான்.

"சுகந்தி! எப்படி இருக்கிறாய்?"

"உங்களோடு சேர்ந்திருந்தால், என் மனம் பிழைச்சிருக்கும். இப்ப வெறும் கூடு நான்"

அதற்கு அவன் கேட்டான்...

"நீ என்ன சொல்கிறாய்....?"

"நான் மனதால் வாழேலை எண்டு சொல்லுறன்."

அவன் விஷமமாகச் சிரித்தபடியே கேட்டான், "அப்ப ஓர் உதவாக்கரையுடனா உனக்கு வாழ்க்கை?"

"அப்பா அப்பிடி நினைக்கேலையே. என்னை வாழ வைக்கப் புறம் போக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் தகுதிகளே போதுமென்று அவர் நம்பிக்கை. மனதிலே அன்பில்லாமல் போனால், இது சரிப்பட்டு வருமே? சரி, என் நிலைமை இப்பிடி? நீங்கள் எப்பிடி?"

"எனக்குக் கலியாணம் ஒரு கனவு மாதிரி முடிஞ்சு போச்சு. மூன்று பிள்ளைகளும் மனைவியும் போய்ச் சேர்ந்திட்டினம். எப்பவும் நான் இதை மெய்யென்று நம்பினவனில்லை. எல்லாத்தையும் மறந்திட்டுக் கலைக்காகவே, என் உயிர் ஓடிக் கொண்டிருக்கு"

அவன் அப்படி இருக்கக் கூடியவன் தான்.

வாழ்வு பற்றிய புறப் பிரக்ஞையாக வருகிற சலனங்களை இயல்பாக மறந்துவிட்டு, எதையுமே இழக்காத பாவனையில், அவனை அந்நிலையில் பார்க்க மிகவும் பெருமையாக இருந்தது சுகந்திக்கு. அவன் காலைத் தொட்டுக் கும்பிட வேண்டும் போல், தோன்றியது. பாவங்கள் சூழ்ந்த தன் இருப்பை மறந்துவிட்டு, அதைச் செய்யவும் அவள் தயங்கவில்லை. இழப்பு வாழ்க்கையின் துயரங்கள் ஒழிந்து போக, கங்கை குளித்து எழுவது போலத் தன்னை அது சாந்திப்படுத்துவதாக, அவள் முழு நம்பிக்கையோடு நினைவு கூர்ந்தாள்.

---

## இலக்கியக் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக சம்பந்தர் விருது

சம்பந்தன் விருது- 2009 இவ்வருடம் சம்பந்தன் விருதுக்குரிய நூலாக பேராசிரியர் கிருஸ்ணப்பிள்ளை விசாகரூபன் எழுதிய **'ஈழத்தின் தமிழ் நாவல்கள்- நாட்டார் பண்பாட்டுக் கூறுகள்: பயில் நிலையும் பயன்பாடும்'** என்ற நூலிற்கு வழங்கப்படவுள்ளது.

இலக்கியக் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக வருடா வருடம் சம்பந்தன் விருது வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி பண்டிதர் க. சச்சிதானந்தன், எழுத்தாளர் தெளிவத்தை யோசேப், பேராசிரியர் எஸ்.பத்மநாதன், படைப்பாளி சு.வே., பேராசிரியர் சி. மௌனகுரு, பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் ச.சத்தியசீலன், பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம் ஆகியோர் பெற்றுள்ளனர். எழுத்தாளர் சம்பந்தனின் மகள் திருமதி **திரிவேணி கஜன்** இவ்விருதுக்கான பணப் பரிசில் 10000 ரூபாவை வழங்கிக் கௌரவிக்கின்றார். 2009 ஆம் ஆண்டிற்கான விருதுக்கு **பேராசிரியர்.கி.விசாகரூபன்** தெரிவாகியுள்ளார். இவருக்கான பரிசும் விருதும் விரைவில் வழங்கப்படும்.

**செங்கை ஆழியான்**
**இணைப்பாளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு முழு நாட்களாக வெகு சிறப்பாக மன்னாரில் நடைபெற்று முடிந்த செம்மொழி விழா



மன்னார் மக்களே நெஞ்சு நிமிர்த்திப் பெருமிதம் கொள்ளும் வகையில் இச் செம்மொழி விழா, இனிதே நடைபெற்று பூரண நிறைவுடன் முடிவெய்தியது. மன்னார் தமிழ்ச் சங்கம் நடத்திய இந்த நான்கு நாள் விழாவும் பூரண நிறைவுடன் முற்றுப் பெற்றது.

தேசம் பூராவுமிருந்து தகைகமை சான்ற விற்பன்னர்களும், பேராசிரியர்களும், கலைஞர்களும் இவ் விழாவில் கலந்து கொண்டு, இவ்விழாவை இலக்கியச் சரித்திரத்தில் பதிய வைத்துச் சிறப்பித்துள்ளனர்.

ஆய்வரங்குகள், கலை அரங்குகள், இசை நிகழ்ச்சிகள் எனப் பூரண பொலிவுடனும் நிறைந்த சிறப்புடனும் இந்த நான்கு நாள் விழா, திங்கட்கிழமையுடன் முற்றுப் பெற்றது.

அருட்திரு **தமிழ்நேசன்** அடிகளாரின் மேற்பார்வையிலும் தலைமையிலும் இவ்விழா நான்கு நாட்களுமே மிக மிகச் சோபிதமாகவும், கூட்டுணர்ச்சியுடனும் கச்சிதமாகவும் நடைபெற்றது.

இவ் விழாச் சிறப்பின் உச்சமாக தகைகமை சான்றோருக்கு விருது வழங்கி மதிப்பளித்தது குறிப்பிடத் தக்கதொன்றாகும்.

இவ் நான்கு நாள் விழா இத்தனை சிறப்புடனும் வரலாறு படைக்கத் தக்கதாக அமைந்ததற்குச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய ஊரவர்களையும் பொருளாதார உதவி நல்கிய நல் நெஞ்சங்களையும் நாம் மனதார மெச்சிப் பாராட்டி மகிழ்கின்றோம்.

வந்து தங்கியிருந்து, நிகழ்ச்சிகளைச் சிறப்புற ஒப்பேற்றி, ஒழுங்கமைத்து சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய இலக்கிய நல் நெஞ்சங்களையும் ஈழத்து இலக்கிய எதிர்கால வளர்ச்சியையும் எதிர்கால ஆரோக்கியத்தையும் நெஞ்சில் நிறுத்தியும் வாழ்த்துவது இலக்கிய உலகின் பெருங் கடனில் ஒன்றாகும்.

-விநோதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குறையும் இல்லை

கொழும்பில் சமீபத்தில் மேல் மாகாண ஆதரவில் இரண்டாவது தமிழ் சாகித்திய விழா வெகு கோலாகலமாக நடைபெற்று முடிந்தது. அவ் விழா ஞாபகார்த்தமாகச் சிறப்பு மலரொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. அம்மலரை வெளியிட்ட மலராசிரியரும் செயலாளருடையதுமான மலர்க் குறிப்பு:

-விசு கருணாநிதி

ஒரு பொல்லாப்பும் இல்லாமல் ஒதுங்கியிருப்பது சுகமானது என்றுதான் அநேகமானோர் எண்ணுகிறார்கள். ஆனால், இலக்கிய சிந்தனையும் சமூக மேம்பாடு கருதிய அக்கறையும் உள்ளவர்களால் அவ்வாறு இருந்து விடுபட முடியாது. நடத்தவே முடியாது என்று பலரும் ஒதுக்கிவிட்டிருந்த ஓர் இலக்கிய விழாவை எவ்வாறேனும் ஆரம்பித்து வைத்து விட வேண்டும் என்ற முயற்சி கைகூடியதன் விளைவாக இரண்டாவது சாகித்திய விழாவும் நடைபெறுகின்றது.




முதலாவது விழாவை ஏற்பாடு செய்த பொழுது எதிர்பார்த்ததை விடவும் அதிர்ச்சியான ஈர்ப்பு வெளிப்பட்டது. இதற்கு மருதானை எல்பின்ஸ்டன் மண்டபமே சாட்சி. அந்த மகிழ்ச்சியின் திளைப்பில் மேல் மாகாணத்து கலை இலக்கிய வாதிகள் மாத்திரமின்றி, அரசியல் மற்றும் பல்வேறு துறைகளையும் சார்ந்த பெருந்தகைகள் வியந்து போனார்கள் என்பது வெளிவராத தகவலாக இருக்கலாம்.

ஆரம்ப விழா என்பதால் அதற்கான ஒழுங்குகளை இறுக்கமாக்காமல் தளர்வு போக்கில் எல்லோரையும் தாராள சிந்தை கொண்டு கௌரவப்படுத்தியிருக்கின்றோம். என்றாலும் நாட்டின் வர்த்தகத் தலைநகராக விளங்கும் கொழும்பு மாநகரில் சாகித்திய விழா மேடையில் அறிஞர்கள் மற்றும் பெரியார்களோடு கௌரவம் பெற்ற சிலர் தம்மையே தாழ்த்திக் கொண்டு விமர்சனம் செய்ய முனைந்து கையைச் சுட்டுக் கொண்டிருக்கிறார்கள். சாகித்திய விழாவின் ஏற்பாட்டுக் குழுத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் மாகாண சபை உறுப்பினர் கௌரவ **ராஜேந்திரன்** அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டிருக்கும் விடயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது. நடக்காமல் இருந்த ஒரு விழா நடந்திருக்கும் பொழுது அதில் தாமும் பங்கெடுத்து சிறப்பிக்க வேண்டும் என்பது தான் அதன் மீது அக்கறையுள்ளவர்களின் கடமையாகும். இதனை இங்கு சொல்லித் தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை.

முதலாவது விழாவின் போது பாராட்ட முடியவில்லையே அல்லது சந்தர்ப்பம் வாய்க்கவில்லையே, அவர்களை இரண் டாவது விழாவில் வாழ்த்தலாம் என்று எண்ணியிருந்த வேளையில், எம்மனங்க ளில் இடம் பிடித்த சில கலைஞர்கள் எம்மை விட்டே பிரிந்திருக்கிறார்கள். விசே டமாகக் கலைஞர் **ஸ்ரீதர் பிச்சையப்பா, மணிமேகலை இராமநாதன், பாடகி ராணி ஜோசப்** ஆகியோரின் மறைவு இந்த சாகித்திய விழாவிற்கு பெரும் குறையா கவே காணப்படுகின்றது. அதே போன்று சாகித்திய விருது பெற்ற பன்முகத் திறனாளர் பி. முத்தையாவின் மறைவும் மனதை நெருடுகிறது. பொதுவாகவே இழப்பு என்பது எம்மைப் பொறுத்தவரை அது நமக்கு இயல்பாகவே போயிருக் கின்றது. இழப்புகளும், விமர்சனங்களும், வசைகளும் தான் நமது வாழ்வை வளப் படுத்தும். அது இலக்கியம் சொல்லித் தந்தி ருக்கும் பாடம். தமிழ் சாகித்திய விழா இம்முறையும் கைகூடுவதற்குத் துணை புரிந்த நல் உள்ளங்களுக்கும், விமர்சகர்க ளுக்கும் கட்டாயம் கடமைப்பட வேண்டும். ஏன்னென்றால் விழாவின் வெற்றியின் பெருமை அவர்களுக்குத்தான்.

மீண்டும் சந்திப்போம்.

## 46-வது ஆண்டு மலர்

'பொறுத்திருந்து பின்னர் பார்ப்போம்!' எனக் காலம் தாழ்த்தாதீர்கள்.

மல்லிகையின் ஆண்டு மலர்களின் தயாரிப்பும், உள்ளடக்கமும் ஆழமும் நீங்கள் அநுபவரீதியாகத் தெரிந்து வைத்திருக்கும் ஓர் உண்மைதான்.

எனவே, காலம் தாழ்த்தாமல் மலருக்கு எழுதுவதில் தனிக் கவனம் செலுத்துங்கள்! உடன் எழுதுங்கள்!

- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சூட்கேசைப் பாக்க பாக்க எனக்கு அழுகை அழுகையா வருது. அத நெருப்பு வைச்சி கொழுத்திரலாமான்னு கூட நெனச்சேன். அம்மா வெளிநாட்டு வேலைக்கு போறதுக்கு எல்லா சாமாங்களையும் அலதா எடுத்து வைச்சிருக்கா. இன்னும் ஒரு கெழமைல எங்கள எல்லா உட்டுபுட்டு அவ போயிருவா.

இந்த ஒரு கெழமையாவே அம்மாவோட நான் ஒன்னுமே பேசல. பேச முடியல. பேச வாய தொறந்தா அழுகையும் விசும்பலுந்தா வருது. இந்த அம்மா இப்ப ஏன் வெளிநாட்டுக்குப் போவனும்.

எங்கள படிக்க வைக்கிறதுக்கு அம்மா படுற கஷ்டம் தெரியாம இல்ல. எங்க அப்பா நான் ஏழு வயசா இருக்கும் போது கவ்வாத்து மலையில வேல செஞ்சிக்கிட்டிருக்கிறப்ப பாம்பு கடிச்சி செத்துப் போய்ட்டாரு. அதுக்கப்புறம் எங்களுக்கு எல்லாமே எங்க அம்மாதா.

எம்பேரு சரோசா.எனக்கு இப்போ பதிமூணு வயசாவுது. எட்டாங் கிளாஸ் படிக்கிறேன். எனக்குப் பின்னால ஒரு தங்கச்சியுந் தம்பியும் இருக்காங்க. அவுங்களையும் அம்மா நேசரியில சேத்திருக்காங்க. நாங்க நல்லா படிச்சி பெரியாளா வரனும்னு அம்மா அடிக்கடி சொல்லுவாங்க.

# சொல்லாமலே....

**இரா. சடகோபன்**

அம்மா அப்பிடி சொல்றதுல ஒரு காரணமிருக்கு. அம்மா பதினோராங் கிளாஸ்ல நல்லா பாஸ் பண்ணாங்களாம். பன்னண்டாங் கிளாஸ் போக, நெனச்ச போது அவங்கள அவங்க அப்பா கட்டாயப்படுத்தி எங்கப்பாக்கு கலியாணம் பண்ணி கொடுத்திட்டங்களாம். இல்லாட்டி டாக்டர் படிப்பு படிச்சிருப்பாங்களாம்.

எனக்குனா படிக்கிறதுல கொஞ்சங்கொட இஸ்டம் இல்ல. ஆனா, அம்மாவப் பாத்தா பாவமா இருக்கு. இதப் பத்தியெல்லா நெனைக்க ஏன் தங்கச்சிக்கும் தம்பிக்கும் வெவரம் போதாது. நா தான் அவங்கள நேசரியில உட்டுட்டு அப்பொறமாதா உஸ்கோலுக்கு போவே.

"நாங்க இருக்கிறது . ஒரு தரித்திரம் புடிச்ச தோட்டம். ராசாத் தோட்டம்னு பேருதா. ராசாவும் இல்ல மந்திரியும் இல்ல. தொரயுங் கண்டாக்கும் நாசமா போனவனுங்க. எனக்கிட்ட மட்டும் வாலாட்னா ஒட்ட அறுத்துருவன்னு" அம்மா அடிக்கடி கோவமா சொல்லுவாங்க. அவுங்க ஏன் அப்பிடி கோவப்படுறாங்கனு எனக்கு வெளங்கல.

அம்மா அப்படி கோவமா இருக்கிற நேரத்தில சொல்ற மத்த வார்த்தைங்கதா "நாதாரி கழுதங்க.... சாண்டைய குடிக்கி மக தூமிய குடிக்கி மக புள்ள...." அம்மா அப்படி ஆத்திரத் துல வையும் போது காளி மாதிரி இருப்பா. எங்களுக்கு கிட்ட போக பயமா இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனா, அம்மா ரொம்ப நல்லவங்க. ரொம்ப அன்பா இருப்பாங்க. அப்பப்ப எங்களை கட்டிப்புடுச்சி "ஏஞ் செல்லங்க, ஏங் கண்ணுங்க..." அப்டீன்னு சொல்லி நச்சி, நச்சின்னு முத்தங் கொடுப்பாங்க. எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கும் தெரியுமா?

இப்ப அம்மா எதுக்கு வெளிநாட்டு வேலைக்கு போவனும்னு புரியல. எங்கள உட்டுட்டு அவ மட்டும் அங்கபோயி சந்தோசமா இருப்பாவா? அம்மாகிட்ட நாலு வார்த்த நறுக்குன்னு கேக்கலாம்னு பார்க்கிறே. முடியலையே...

************

அந்த சூட்கேஸ், கட்டல் மேல இன்னும் அநாதையாதா இருக்கு. கொழுத்திப்புடலாமா? எம் மனசு கேக்கல. அம்மா ஏன் வெளிநாட்டுக்கு போவனும்.

அம்மா விடியகாலம கோழி கூவுறதுக்கு மொதல்லயே எந்திருச்சிருவாங்க. காலச் சாப்பாடு, பகல் சாப்பாடு செய்வாங்க. பெருசா ஒன்னுமில்ல ரொட்டியு, சம்பலு, சோறுந்தா. பொறகு நாங்க உஸ்கோலுக்கு போற வேலைங்க. அதுல மட்டும் அம்மா ரொம்ப ஆர்வமா இருப்பாங்க. துணிமணி உஸ்கூல் பேக், கொப்பி புத்தகங்கள் ரொம்ப சுத்தமா இருக்கனும்.

அம்மாவுக்கு கொழுந்து மலையில கொழுந்தெடுக்கிற வேலைதா. சூரியன் உச்சிக்கு வரும் போது ஒடம்பெல்லாம் நடுங்குமாம். ஆனா, அந்த கங்காணிப் பயலாலதான் அதிக தொல்லைனு சொல்லுவாங்க. அவெம்பேச்சே கேக்கல்லாட்டி ஏதாவது நொட்டை தேடி பேர் போட மாட்டேன்னு மெரட்டுவானாம். ஒரு நா அப்படி மெரட்டி, கூட்டிக்கிட்டு போய் மார்ல கை வைச்சு அழுத்தினானாம்னு அம்மா அழுதுக்கிட்டிருந்தா. ரெண்டு நாளா வேலைக்கும் போகல. பொறகு எங்களோட மொகங்கள பாத்துப் பாத்து, பெருமூச்சு விட்டுவிட்டு மனச தேத்திக்கிட்டு வேலைக்கு போனா. கொஞ்ச நாளாவே அவ மனசு வேதனையால கஸ்டப்படுறது எனக்கு வெளங்குது.

ஒரு நா அப்படிதா அந்த களவாணிபய தொர பங்களாவுல வேலைக்கு வரச் சொல்லி கூப்பிட்டனுப்பியிருக்கான்னு அம்மா போனா. பொறகு அரைவாசியிலேயே அழுதுக்கிட்டு திரும்பி வந்துட்டாங்க. நா "என்னம்மானு..?" கேட்டேன். அம்மாவுக்கு கோவம் பொத்துக்கிட்டு வந்துருச்சி. கன்னத்திலயும் முதுகுலயும் பெலமா அறைஞ்சாங்க. தங்கச்சிக்கும் தம்பிக்கும் கூட அடி விழுந்துச்சி. அன்னைக்கு முழுவதும் அம்மா அழுதுக்கிட்டிருந்தாங்க. கட்டல்ல சுருண்டு படுத்துட்டாங்க. நாங்களுந்தா.... அதுக்கு பொறகு அம்மா மொகத்தில மிஞ்சியிருந்த கொஞ்ச சந்தோசமும் இல்லாம போயிருச்சி. அடிக்கடி கடுமையா யோசிச்சிக்கிட்டு உக்காந்திருப்பாங்க.

அன்னைக்குப் பொறகுதா அந்த வெளிநாட்டுக்கு ஆள் அனுப்புற புரோக்கர் மனுஷன் வந்தான். அவன எனக்கு கொஞ்சங் கூட புடிக்காது. தாடி மீசை வளர்த்து கருப்பா, முஞ்சில எண்ணை வடிஞ்சு, உதடுகள் பெருசா, கொரங்காட்டம் இருப்பான். அவன்தான் அம்மாவுக்கு பாஸ்போட் கொண்டு வந்து கொடுத்தான்.

தோட்டத்துல எல்லா நாளும் வேலை கொடுக்க மாட்டான். கெழமையில நாலு நாளைக்குத்தா அம்மா வேலைக்கு போவாங்க. மத்த நாளைங்கள நாட்டுப் புறத்துல அம்மா கூலி வேலைங்களுக்குப் போவாங்க. நாட்டுல சிங்களவங்களோட சிறு தேயிலைத் தோட்டங்கள்லயும் அவுங்களோட மரக்கறித் தோட்டங்கள்லயும் அம்மாவுக்கு வேலை கெடைக்கும். அப்பிடி போனாங்கன்னா பகல் சாப்பாட்டுக்கு வர மாட்டாங்க. அங்க கெடைக்கிறத சாப்புட்டு அந்தியானதும்தான் வருவாங்க. தங்கச்சிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிக்கும் நாதான் தேத்தண்ணி ஊத்திக் கொடுக்கணும்.

ஒரு நா அப்படித்தா கேத்தல்ல தண்ணி கொதிச்சதும் சும்மா கையால தூக்குனால கை சுட கீழே போட்டுட்டன். கொதி தண்ணீ கால்ல ஊத்தி இரண்டு காலும் நடக்க முடியாம வெந்து போச்சு. 3 மாசமா ஆஸ்பத்திரியிலே இருந்தன். கிட்ட இருந்து அம்மா கவனிச்சுப் பார்த்தாங்க.

அதுக்கப்புறம் நாட்டுக்கு வேலைக்கு போனா கூடுமானவர வெள்ளனா வந்திருவாங்க. எனக்குன்னா அம்மா எந்தநாளும் வேலைக்கு போகாம வீட்ல இருக்கனும்னு தான் விருப்பம். ஆனா, என்னா செய்யறது. எங்களுக்குத்தா அப்பா இல்லையே. அம்மா வேலை செஞ்சாதா சாப்பிடலாம்.

எனக்கு இருக்கிற பெரிய பெரச்சன என்னன்னா அம்மா வெளிநாட்டுக்கு போனா நாங்க மூணுபேரும் எங்க அத்த வூட்லதா தங்கனும். எனக்கு அத்தவூட்டுக்கு போறது னாலே புடிக்காது. அதுக்கு காரணம் அந்த சண்டாளிமவ பெத்த புள்ள, களவாணிப்பய சின்ராசுதான். அவன எனக்கு மாமானு கூப்பிடவே கொமட்டிக்கிட்டு வருது. நா அங்க எப்ப போனாலும் யாருமில்லாத நேரத்துல எம் பாவாடக்குள்ள கைய போட்டு உள்ளுக்குள்ள தொடையில கிள்ளுவான். நாசமா போன பய. எனக்கு அழுக அழுகயா வரும். யாருக்கிட்டயு சொல்லவும் முடியாது. நா அழுதுக்கிட்டு ஓடியாந்திருவே.

சில நேரம் அம்மா கேப்பாங்க. ஏன்டி அழுவுறேன்னு. நா ஒன்னும் சொல்ல மாட்டேன். எப்படி சொல்றது. இங்கினதான் அவன் கைய வைச்சு கிள்ளுனான்னு. அம்மாவுக்கு கோவம் வந்துச்சின்னா அவங்க என்னா செய்வாங்கன்னு சொல்ல முடியாது. இப்ப அம்மா வெளிநாடு போய்ட்டா நா அவன் கிட்ட மாட்டிப்பேன்னு நெனைக்க பயமா இருக்கு. இப்ப கூட நா அழுறத தவிர என்னா செய்ய முடியும்?

அந்த சூட்கேஸ் கட்டல் மேல இப்பவும் அநாதையாதா கெடக்கு. நெருப்பு வைச்சிரலாமா? எம் மனசு கேக்கல. இந்த அம்மா ஏன் வெளிநாட்டுக்கு போவனும்னு புரியல.

************

அம்மாவுக்கப்புறம் அடுத்ததா எனக்குப் பிடிச்சது சின்னத் தம்பிதான். சின்னத்தம்பிங்கறது அவன் பேரு கெடயாது. அவன் பேரு நட்ராஜ்தான். ஆனா அவுங்க ஊட்ல அப்படி கூப்பிட்டு கூப்பிட்டு தோட்டத்துல எல்லாரு அவன செல்லமா சின்னத் தம்பின்னு தான் கூப்பிடுவாங்க.

அவன் எங்க உஸ்கூல்ல ஒம்பதாங் கிளாஸ் படிக்கிறான். உஸ்கூலு ஒரு கடைக்கு அங்கால இருக்கிறதால நாங்கெல்லா சேந்துதா உஸ்கூலுக்குப் போவம். மத்த நேரத்திலயும் அவனோடதா நா சேந்து வெளயாடுவே. நாங்க எப்பவும் ஜோடியா இருக்கிறத பாத்து எல்லாருங் கேலி பண்ணுவாங்க. கலியாணங் கட்டிக்க போறிங்களான்னு கேப்பாங்க. வெக்கமாத்தான் இருக்கும். ஆனா நாங்க சேந்து வெளையாடறத நிறுத்தறது இல்ல.

எங்க மாமா சின்ராசு மாதிரி சின்னத் தம்பி மொறடன் இல்ல. ஆனா ஏதாவது சுட்டித்தனம் பண்ணி வீட்ல எந்த நேரமும் அடி வாங்குவான். அப்பவெல்லாம் எனக் கிட்டதான் ஓடி வருவான். நானும் அவனும் காடு மேடு, ஆறு, கொளம் எல்லா ஓடித் திரிவோ. என்னவோ தெரியாது அவனோட கைய புடிச்சிக்கிட்டு சுத்தித் திரியறதில உள்ள சந்தோஷம் வேற ஒன்லயும் கெடைக்காது. ஆம்பள பயலோட நா சுத்திக்கிட்டு அலையிறேன்னு அம்மா சில நேரம் ஏசுவாங்க. ஆனா அத தடுக்க மாட்டாங்க.

எங்கம்மாகிட்ட எனக்கு பிடிக்காத ஒரு விசயந்தா நாங்க வெளையாடிக்கிட்டிருக்கிறப்போ எடயில கூப்பிட்டு தேங்கா திரிவித்தர சொல்லுறதும், இல்லாட்டி கீர பிய்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுறதும், சட்டி பானையெல்லாங்கூட கழுவச் சொல்லுவாங்க. கையெல்லாம் கரி அப்பிப் போயிரும். எல்லாப் பிள்ளைகளும் வெளையாடயில நா மட்டும் எப்படி வேலை செய்றது. பிள்ளைகள் கத்திக் கோசம் போட்டு விளையாடுற சத்தம் காதுக்குள்ள கேக்குமே தவிர வேலை செய்றதுக்கு கையும் ஓடாது காலும் ஓடாது. என்னோட துக்கம் அம்மாவுக்கு வெளங்கலையேன்னு கவலைப்படுவேன்.

ஆனா எல்லா நேரமும் அப்புடி இல்ல. நா வேலை செய்யாம பேயரஞ்ச மாதிரி எதையோ நெனச்சிக்கிட்டு உக்காந்திருக்கிறத பார்த்தா அவுங்க மனசு எளகிடும். "சரி... சரி... போ.. வெளையாடிட்டு வா" ன்னு அனுப்பிடுவாங்க. நா எந்திருச்சி ஓடிப்போய் அம்மாவ அணைச்சி வாயில இருந்த எச்சியெல்லாந் தெரட்டி அவுங்க கன்னத்தில 'பசக்'குன்னு ஒரு முத்தம் கொடுத்திட்டு சிட்டாப் பறந்துருவேன்.

இப்ப எங்க அம்மா எங்களை இங்கே தவிக்க விட்டுட்டு வெளிநாட்டுக்கு போகப் போறா. இத எப்படி எங்களால தாங்கிக்க முடியும். அவங்களாலயுந்தா தாங்கிக்க முடியுமா?

அந்த சூட்கேஸ் பெட்டி இன்னமும் கட்டல் மேல அநாதயாதா கெடக்கு. நெருப்பு வச்சிரலாமா? எம் மனசு கேக்கல. அம்மா ஏன் வெளிநாட்டுக்குப் போவனும்.

************

அன்னைக்கு காலையிலிருந்து யாரும் யாரோடயும் பேசல. தம்பியும் தங்கச்சியும் கூட வெளயாடுறதுக்கு போகல. இன்னைக்கு மட்டுந்தா அம்மா எங்களோட இருப்பா. நாளைக்கு காலமை பிளேன் ஏறனும்.

அம்மா குத்துக் கல்லாட்டம் குந்திக்கிட்டு பிளவுசு தெச்சிக்கிட்டிருந்தா. அவங்களோட மூக்குல வேர்த்து வெளிச்சத்தில மின்னிக்கிட்டிருந்திச்சி. ஊசித் துவாரத்துல நூல போட முடியாம கஸ்டப்பட்டாங்க. என்னால தாங்க முடியல. நா ஓடிப் போயி ஊசியையும் நூலையு பறிச்சி நூல ஊசியில போட்டுக் கொடுத்தே. அப்பத்தான் அம்மா என்ன நிமிந்து பார்த்தாங்க. அவங்க இரண்டு கண்லயு நீர் நெரம்பி இருந்திச்சு. என்னால அந்த கண்கள நேரா பாக்க முடியல. ஏ கண்லயும் நீர் வந்துருச்சி. விசும்ப முடியாத அளவுக்கு தொண்ட அடச்சிக்கிச்சி.

அம்மா ரெண்டு கையாலயும் என்ன இறுக்கி அணைச்சிக்கிட்டாங்க. அவங்க கண்கள்ள இருந்து கண்ணீர் வடியறத அவங்க தொடைக்க நெனைக்கல. நானும் அவங்கள இருக்கி அணைச்சிக்கிட்டேன்.

அம்மாவோட அந்த அணைப்பு சூடா இருந்திச்சி. அம்மா பேசாட்டியும் அவங்க மனசில ஓடர எல்லா எண்ணங்களும் எனக்கு வெளங்கின மாறி இருந்திச்சி. அவங்க ஒரு சரியான காரணத்துக்காகத்தான் வெளிநாடு போக தீர்மானிச்சிருக்காங்க. அவங்க எவ்வளவு நல்லவங்கன்னு என்ன விட வேறு யாருக்குத் தெரியும். அம்மா எங்களோட முன்னேற்றத்துக்காக எவ்வளவு கஸ்டம் வந்தாலும் தாங்கிக்குவாங்க. இப்பவும் அவங்க எங்க சந்தோசத்துக்காகத்தான் வெளிநாடு போராங்க.

அப்பா இல்லாத எங்கள வளத்து படிக்க வைக்க அவங்க படற கஸ்டம் எம் மனசுக்கு தெரியாம இல்ல. வெயில், மழ, குளிரு, அட்டக்கடி எல்லாத்தையுந் தாங்கிக்கிட்டு அவங்க ஒழைக்கிறாங்கனா அது நாங்க படிச்சு பெரியவங்களா வரனுங்கிறதுக்குத்தா.

அந்த சூட்கேஸ்ல அம்மா எடுத்து வெச்சிருக்கிறது அவங்க துணிமணிகள மட்டுமில்ல. எங்களோட மனசுங்களையுந்தா. அம்மா எவ்வளவு தூர தேசத்துக்கு போயிருந்தாலும் எவ்வளவு காலத்துக்கு பாக்காம இருந்தாலும் அம்மா மனசுல நாங்களும் எங்க மனசுல அம்மாவும் இருப்பாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதையும் அவனும்

**லறீனா அப்துல் ஹக்**

அந்தக் கவிதையை அவனுக்கு
வாசிக்கத் தெரியவில்லை.
அவனைப் பொறுத்தவரை
'அது'
மெய்யெழுத்தும் உயிரெழுத்தும்
உயிர்மெய்யெழுத்தும் கொண்டு
குறுக்கமாய்... நெடுப்பமாய் – சில
வரிகள் மட்டும்தான்!
உணர்வுகளை இழைத்திழைத்து
உயிர்ப்பைப் பெய்து வைத்த
ஜீவ கவிதையதன்
சிலிர்ப்பை, குதூகலத்தை,
செல்லச் சிணுங்கலினை,
தவிப்பை, கண்ணீரை,
வலியை, பரவசத்தை
இப்படி எதனையுமே
அவனறிய நியாயமில்லை

மீட்டத்தெரியாதவன் விரலிடுக்கில்
வீணையாய்க் கிடந்தது
கவிதை.
அதில் உள்ளார்ந்து பொதிந்திருக்கும்
அழகியல் அனுபவத்தை...
உட்பொருள் தந்துநிற்கும்
எண்ணரும் இன்சுவையை
ரசித்துத் துய்ப்பதற்கும்
இன்பத்தில் தோய்வதற்கும்
வாய்க்குமோ, பாவம்!
அவனோ வெறும் மனிதன்.
அவனுக்கு அக்கவிதை
வெற்றுக் காகிதத்தில்
ஒருசில எழுத்துக்கள், இதில்
ரசமென்ன! ரசனையென்ன!

## வாழ்த்துகின்றோம்!

சென்ற ஆண்டு வெளியிட்ட நூல்களுக்காக இவ்வாண்டு (2010) **ஸ்ரீலங்கா சாஹித்திய மண்டலப்** பரிசுகளைப் பெற்றுக் கொண்ட அத்தனை எழுத்தாளர்களையும் மல்லிகை நெஞ்சு நிறைவுடன் பாராட்டி மகிழ்கின்றது. தொடர்ந்து, எழுத்துத்துறையில் சாதனைகள் படைக்க வேண்டுமென வேண்டிக் கொள்ளுகின்றது.

-ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்

நீண்ட கால இடைவெளிக்குப்பின் பிரசாந்தனின் திருமண வரவேற்பின் போது உங்களை நேரில் சந்தித்துக் கதைத்தது மனது இதமாக இருக்கின்றது.

இவ்வருடம் மே மாதம் நான் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, மீண்டும் தொடர்ந்து 2011ம் ஆண்டு ஜூன் மாதம் முதலாந் திகதி வரை வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் சிவில் மேன்முறையீட்டு வழக்குகளை விசாரணை செய்ய மீள் நியமனம் பெற்றுள்ளேன். ஒரேயொரு வித்தியாசம், மீள் நியமனம் பெற்றபின் 'மேல் நீதிமன்ற நீதிபதி' என்ற பதவிப் பெயருக்குப் பதிலாக 'மேல் நீதிமன்ற ஆணையாளர்' என அழைப்பது முறை. எனவே, நீங்கள் தொடர்ந்து எனது வவுனியா முகவரிக்கே வழமைபோல் மல்லிகை மலர்களை அனுப்பிவையுங்கள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் யாழ்ப்பாணம் சென்று அங்கேயுள்ள மேல் நீதிமன்ற நீதிபதியுடன் சிவில் மேன்முறையீட்டு வழக்குகளை விசாரணை செய்வேன். சிவில் மேன்முறையீட்டு வழக்குகளை இரண்டு நீதிபதிகள் இணைந்து விசாரணை செய்ய வேண்டும் என்பது சட்டத் தேவைப்பாடாகும்.

நீங்கள் கூறியதை நான் மறக்கவில்லை. 1979ம் ஆண்டு ஜூன் மாதம் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்றபின் இன்றுவரை நீதிபதியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாகக் கடமையாற்றி வந்ததனால் பெற்ற அநுபவங்கள் பல. பல விசித்திரமான, உள்ளத்தை உலுக்கும் கிரிமினல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்துள்ளேன். 'மனித மனம் எதை நினைக்கின்றது என்பதைப் பிசாசினால் கூடக் கண்டுபிடிக்க முடியாது' என்று கூறுவார்கள். சாது போல் தோற்றமளிக்கும் ஒருவரின் மனதில் பயங்கரமான எண்ணங்கள் ஒளிந்திருப்பதும், முரட்டு சுபாவம் கொண்டவர் போல் தோற்றமளிப்பவரின் மனதில் இரக்க குணம் குடிகொண்டிருப்பதையும் கிரிமினல் வழக்கு விசாரணையின் போது வெளிவருவதைப் பலமுறை கண்டுள்ளேன். நீதிபதிகளின் பார்வை தனித்துவமானது. இப்பின்னணியில் உங்களின் வேண்டுகோள் வரவேற்கத்தக்கது மாத்திரமன்றி, யதார்த்தமானதுங்கூட.

எனினும் கம்பவாரிதியின் வழிநடாத்தலால் இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம், சமய இலக்கியங்கள், திருக்குறள் போன்றவற்றிலேயே எனக்கு நாட்டம் அதிகம். அதற்கு வவுனியா பொது நூலகம் எனது அறிவுப் பசியைத் தீர்க்கும் இடமாயிற்று.

சட்டநூல்களைத் தினமும் புரட்டிப் பார்ப்பதால் மனதில் தோன்றும் சோர்வை கம்பவாரிதியின் சேர்க்கை தணிக்கவல்லதாயிற்று. மல்லிகையின் வாசனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசமானது. நாம் விதம் விதமான உணவுவகைகளை ருசித்துப் பார்க்க விரும்புவது போன்று, சட்டநூல்கள், தமிழ் இலக்கியம், சமய இலக்கியம் இவைக ளுக்கிடையில் மல்லிகையை வாசிக்கும் போது பெறும் அநுபவம் தனித்துவமானது.

உங்களுடைய திறந்த மனம், எவருக் கும் பயப்படாத தன்மை என்னை வெகுவா கக் கவர்ந்துள்ளன.

'மற்றவர்களின் பொன்மொழிகளைப் பிதற்றுவதை விட உங்களின் பித்தளை மொழிகளை இயற்றுவதே மேல்'

-என நீங்கள் சொல்வதும், தூண்டிலில் நீங்கள் அளிக்கும் பதில்களும் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன.

மனமும் வாக்கும் செயலும் ஒன்றாக இருந்தால் ஒருவித ஆத்மசக்தி விருத்தியா கும். அப்போது வாக்கில் ஒளி உண்டாகும். செயலிலும் ஒளி உண்டாகும். அந்த ஒளியினால் நாம் சந்திக்கும் தடைகளை இலகுவாகத் தாண்டிவிடலாம். இதுபோ ன்ற ஒரு சக்தியே உங்களுக்கு முதுமைப் பருவத்திலும் தடைகளைத் தகர்த்தெறியும் வல்லமையைத் தந்துள்ளது.

உங்களுக்கு எனது அன்பையும் மல்லிகைக்கு எனது வாழ்த்துக்களையும் கூறுகிறேன்.

**வவுனியா.** **ஜெ. விஸ்வநாதன்**
(Comissioner of High Court)

மல்லிகைக்கு எனது உள்ளக் கிடைக் கைகளைக் கொட்டி, நீண்ட கடிதமொன்று எழுதி விடவேண்டுமென்பது எனது நீண்ட நாளைய ஆசை.

முதலில் தூண்டில் பகுதியைத் தான் மல்லிகை கையில் கிடைத்தவுடன் முதன் முதலில் ஆழமாக வாசித்து விடுவது, வழக்கம்.

உண்மையை மனந் திறந்து சொல்லுகி ன்றேன். இத்தனை ஆழமாக, அறிவுபூர்வ மான சங்கதிகளை எங்கெங்கெல்லாமிரு ந்து சேகரித்துத் தருகின்றீர்களோ எனக்குத் தெரியாது. அத்தனை ஆழமான, கருத்துச் செழிப்பு மிக்க, சிந்திக்க வைக்கக் கூடிய தகவல்களையெல்லாம் ஒருங்கு சேரப் படிக்கின்றபோது, மெய்யாகவே நேரில் வந்து உங்களை மெச்சிப் பாராட்ட வேண் டும் போல, மன உணர்வு உந்துகின்றது.

ஆரம்ப கால கட்ட மல்லிகை இதழ்க ளில் இருந்தே நான் மல்லிகை இதழ்களை ஒன்று விடாமல், தொடர்ந்து படித்து வரு கின்றேன். எனக்கொரு நெஞ்சுப் பயமும் ஆரம்ப காலங்களில் இருந்தது என்னமோ உண்மைதான். ஆரம்ப சூரத்தனங்களில் இதுவும் ஒன்றுதான் போலும் என நினைத்து ஆரம்பத்திலிருந்தே அசட்டை யாக இருந்து விட்டேன்.

இருந்தும் மல்லிகையைத் தொடர்ந்து வாசிப்பதில் நான் அசட்டையாக இருந்து விடவில்லை. தொடர்ந்து படித்து வருகி றேன்.

மல்லிகை ஆண்டுமலர்கள் ஒவ்வொன் றுமே மிக மிகப் பெறுமதி வாய்ந்தவை.

இத்தனைக்கும் தனி மனிதனாகத் தனித்து நின்று நீங்கள் மல்லிகை இதழ் களை மாதா மாதம் வெளிக் கொணரும் சாதனை இருக்கின்றதே, மெய்யாகவே மனந்திறந்து பாராட்டத் தக்க பெரும் நிகழ்வுதான் அது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பேனா பிடித்து எழுதும் எழுத்தாளன் மாத்திரமல்ல, நல்ல நாக்கு வன்மையும் சொற் சாதுர்யமும் மிக்க மேடைப் பேச்சாளன் என்பதையும் செய்தித் தகவல்கள் மூலம் நன்கு அறிந்து வைத்துள்ளேன்.

பேச்சு வன்மையும், எழுத்துச் சாதுர்யமும் ஒருவரிடம் ஒருங்கு சேர்ந்து அமைவது மிக மிகச் சிறப்பான ஒரு கொடை யாகும்.

யாருக்குமே தலை வணங்காமல், உங்களது தனி வழியில் கச்சிதமாக நடைபோட்டு வாருங்கள்.

உங்களிடத்தில் எனக்குப் பிடித்த குணமே, மனசில் பட்டதை வெளி வெளியாக எழுத்தில் எழுதிப் பதிய வைக்கும் திறந்த மனப் பண்பேயாகும்.

ஆரம்ப கால கட்டங்களில் இருந்தே வெகு கூர்மையாக உங்களது எண்ணக் கருத்துக்களையும் எழுத்தின் உள்ளடக்கச் சூட்சுமத்தையும் வெகு கவனமாகக் கருத்தூன்றிப் படித்து, மனதில் பதிய வைத்துக் கொண்டு வருகின்றேன்.

இது கடந்த கால் நூற்றாண்டு காலங்களுக்கு முற்பட்டு இருந்து வரும் சங்கதியாகும். சில பல இலக்கிய விவகாரங்களில் உங்களது கருத்துக்களுக்கு மாறுபட்ட நிலை கொண்டவன் தான், நான்! ஆனால், அவை விரோதக் கருத்துக்களல்ல. நேச முரண்பாட்டு அபிப்பிராயங்கள் தான் அவை. சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். உங்களை நேரடியாக ஓரிரு தடவைகள் நேரில் சந்தித்துமிருக்கின்றேன். ஆனால், மனந்திறந்து பேசப் பயம். அப்படியொரு மனப் பதற்றம் ஏற்பட்டு விடும் என்மனசில்,

**நல்லூர்.** **அ.கிருஸ்ணகுமார்.**

## நன்றி கூறுகின்றேன்

எனது வலது கண் சத்திர சிகிச்சையின் போது, வைத்தியசாலையில் முழு நாளும் இருந்து எனது தனித் தனித் தேவைகளை உடனுக்குடன் கவனித்து உதவிய எனது இலக்கிய நண்பன் மேமன் கவி அவர்களுக்கும் மகன் திலீபன் அவர்களுக்கும், வைத்திய நிபுணர் திருமதி **மீனா மித்திரகுமார்** அவர்களுக்கும், உதவிய நண்பர்களுக்கும், நேரில் வந்து விசாரித்த இலக்கிய நண்பர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அத்துடன் இத் தகவலை எப்படியோ கேட்டறிந்ததும் வெளிநாட்டிலி ருந்தும் உள்நாட்டிலிருந்தும் எனது சுக சேமங்களை விசாரித்தறிந்து கொண்ட ஆத்மபூர்வமான நண்பர்களுக்கும் எனது நன்றிகள் உரியவை.

-டொமினிக் ஜீவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூண்டில்

- டொமினிக் ஜீவா

**✍ பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் படைப்பாளிகளின் தரமான ஆக்கங்களைப் பிரசுரிப்பதில் பாகுபாடு காட்டுவதேன்? மல்லிகைக்கும் இதில் பங்கிருப்பதாகக் கருதுகிறேன். சரிதானா?**

**திருகோணமலை.** **செ.ஞானராசா**

☞ மல்லிகையின் மீதான இந்தக் குற்றச்சாட்டை முற்றாகவே மறுதலிக்கின்றேன். மல்லிகைக்கென ஓர் ஆழ்ந்த இலக்கியப் பார்வை உண்டு என்பது உண்மைதான். அதே சமயம் எந்தக் கட்டத்திலும் தனது கருத்துக்களை மல்லிகையில் எழுதும் எழுத்தாளர்கள் கருத்துக்கள் மீது திணிக்க முயன்றதேயில்லை. அத்துடன், ஒவ்வொரு படைப்பாளியும் தான் எழுதுவதே அற்புதமான படைப்பு என்ற எண்ணத்துடனேயே எழுதி அனுப்புக்கின்றனர். அது அவருக்கு அற்புதமான எழுத்தாகத் தென்படலாம். ஆனால், சஞ்சிகை, பத்திரிகை ஆசிரியர்கள் இதைப் போன்ற எத்தனையோ எழுத்துக்களைத் தினசரி பார்வையிடுகின்றனர். அவர்களது பார்வையில் சார்புத் தன்மை இருக்கவே முடியாது. கண்டிப்பாக மல்லிகையிடம் அதன் சாயல் இல்லவேயில்லை. குற்றங் குறை சொல்லித் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வதை விட, தரமானதைப் படைப்பதுதான் வளரும் எழுத்தாளர்களது கடமையாகும்.

**✍ மல்லிகையின் 50–வது ஆண்டு மலர் பற்றி உங்களது சிந்தனை என்ன?**

**கற்பிட்டி.** **கே.பி. ஷர்மிலா**

☞ இன்னமும் நான்கே நான்கு ஆண்டுகள் இடையே உள்ளன. இப்போதிருந்தே அந்த அரை நூற்றாண்டுக் கால மலருக்கான வேலைகளை ஆரம்பித்து விட்டேன். கட்டம் கட்டமாகத் தரமான படைப்புக்களுக்காகத் காத்துக் கொண்டிருப்பதுதான் எனது இப்போதைய பெரும் பணியாகும்.

**✍ சிங்கள, தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்களினது ஒன்று கூடல் மகாநாடு எந்தவகையில் நடந்தேறி முடிந்தது?— இதனால் எதிர்கால இலக்கியப் பெறுபேறுகள் எவ்வாறு அமையலாம்?**

**தெஹிவளை.** **ஆர்.தேவதேவன்**

☞ வரலாற்றில் முதற் தடவையாக இந்த மண்ணில் வாழும் மூவினங்களையும் சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர்கள் ஒருங்கு கூடி, தத்தமது இலக்கியப் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து, ஒரு முழுநாளும் நேரம் போக்கியதே மிகப் பெரிய இலக்கிய நிகழ்வாகும்.

இன்னும் பொறுத்திருந்து பாருங்கள். இரண்டொரு ஆண்டுகளில் இதனது ஆரோக்கியமான இலக்கிய அறுவடையைப் பார்க்கத் தான் போகின்றீர்கள்.

**✍ இலக்கிய மகாநாடுகளைச் சுற்றிச் சுற்றிக் கொழும்பு மாநகரிலேயே நடத்தாமல், பரந்து பட்டு, பல்வேறு பிரதேசங்களில் நடத்தினால் என்ன?**

பதுளை. ஆர். தவநேசன்

☞ மலையக இலக்கியக்காரர்கள் ஒருங்கு கூடித் தமது மலையக எழுத்தாளர் சங்கத்தைப் புனருத்தாரணம் பண்ணியதாகச் செய்திகளில் படித்தேன். இவர்கள் அனைவரும் ஒருங்கு கூடி ஹட்டன் மாநகரில் மாபெரும் இலக்கிய விழா நடாத்த வேண்டுமென்பதே மல்லிகையின் பேரவாவாகும்.

**✍ மல்லிகையின் சுவையான அநுபவம் ஒன்றை அதன் வாசகர்களுடன் பரிமாற முடியுமா?**

சுன்னாகம். க.சுந்தரேசன்

☞ இத்தனை பெரிய யுத்த நெருக்கடிகளுக்கு இடையிலும் 30 ஆண்டு உள்நாட்டு யுத்த மயக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் மல்லிகை என்றொரு சிற்றேடு இத்தனை ஆண்டுக் காலங்களாக- புலம் பெயர்ந்தும் கூட- தொடர்ந்து வெளிவந்து கொண்டேயிருப்பது ஒரு பாரிய அநுபவமல்லவா? வட பிரதேசத்தைச் சார்ந்த நீங்கள் தூண்டிலுக்கு இப்படியான ஒரு கேள்வியை அனுப்பி வைத்தது கூட, ஒரு புதிய அநுபவமல்லவா?

**✍ வெளிவரும் தினசரிகளில் எல்லாம் பார்க்கக் கிடைக்கின்றது, நீங்கள் இப்பொழுதெல்லாம் பல பல இலக்கியக் கூட்டங்களில் கலந்து கொண்டு, கருத்துரை வழங்குவதாக அறியக் கிடைக்கின்றது. இது பற்றி உங்களது உள் மனக் கிடைக்கைகள் என்ன?**

ஜாஎல. எஸ்.நவநீதன்

☞ தினசரிகளில் வரும் செய்திகளைப் பார்க்க மெத்த மகிழ்ச்சியாகத் தான் இருக்கிறது. இதில் தனிமனிதச் சங்கடம் என்னவென்றால், கூட்டத்திற்கு ஒழுங்கு செய்பவர்கள், கூட்டம் முடிந்த பின்னர் எம்மையெல்லாம் 'அம்போ' எனவிட்டு விட்டுப் போய்விடுகின்றனர். கூட்டம் நடப்பதோ ஒரு மூலை. நானிருப்பதோ இன்னொரு தொலைவில். திரும்பி வர ரொம்பச் சிரமப்பட வேண்டியுள்ளது. வயது ஒத்துழைக்க மறுக்கின்றது. தொடர்ந்து எல்லாக் கூட்டங்களிலும் பங்கு பற்ற முடியாது. போக்குவரத்து வசதி செய்யப்படாது போனால், நிச்சயமாகக் கூட்டங்களில் கலந்து கொள்ள இயலாது. இதுதான் எனது இன்றைய நிலை.

**✍ 46-வது ஆண்டு மலருக்கு இன்னார், இன்னார் தான் எழுத வேண்டும் என்ற கட்டாய வரைமுறை ஏதும் உண்டா?**

வவுனியா. எஸ்.சிவநேசன்

☞ எந்த வகையான கட்டுப்பாட்டுத் திட்டமும் மல்லிகையில் எழுதுவதற்கு எந்தக் கால கட்டத்திலுமே இருந்ததேயில்லை. ஆனால், மல்லிகையின் ஆண்டு மலர் என்பது காலம் காலமாகப் பாதுகாத்து வைக்கப்படும் ஓர் இலக்கியச் சொத்து. அதை மட்டும் மனதில் இருத்திக் கொண்டு, எழுதி அனுப்பினாலே, போதும். மல்லிகைக்கென்று யாரையுமே வலுக் கட்டாயப்படுத்தும் நோக்கமெதுவும் என்றுமே மல்லிகையிடம் இல்லவேயில்லை.

**✍ உங்களைப் பலர் விமர்சிக்கின்றனரே,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதற்கு நீங்கள் பதிலேதும் சொல்வதேயில்லையே!**

**திருகோணமலை. எம்.சரவணன்**

☞ பொது வாழ்க்கையில்– அதுவும் இலக்கிய வாழ்க்கைக்குத் தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்தவர்கள் மீது பல்வகைப்பட்ட குற்றச்சாட்டுகள் எழுதுவது இயல்பானதே. அதை நாம் மறுக்கக் கூடாது. அதற்கு மாறாக, அந்தக் குற்றச் சாட்டுக்களில் உண்மை ஏதாவது இருந்தால் திருந்தி நடக்கத் தெண்டிக்க வேண்டும். சிறிதளவு கூட, அதில் உண்மை இயல்லையென்றால் பேசாமலே இருந்து விடலாம். அதுவே நல்லது.

**✍ மல்லிகையின் முதலாவது இதழை, இந்தத் தலைமுறையில் பலர் கண்களால் கண்டிருக்கவே மாட்டார்கள். வருகின்ற 46–வது ஆண்டு மலருடன் அந்த முதலாவது இதழை இணைத்து வெளியிட்டால், சிற்றிலக்கிய ஏடுகளின் வரலாற்றில் அது ஒரு புதிய பதிவாகுமல்லவா?**

**கண்டி. ஏ. சந்தியாகோ**

☞ நல்லதொரு யோசனை. முதலாவது இதழைத் தனியாக இணைத்தோ, அல்லது மலரின் உள்ளடக்கதுடன் சேர்த்தோ ஆண்டு மலரை வெளியிடலாம் என நினைக்கின்றோம். ஆர்வத் துடிப்புள்ள இளந்தலைமுறைப் படைப்பாளிகள் இதற்கு ஓர் ஆரோக்கியமான யோசனை கூறினால், அதை மல்லிகை வரவேற்கவே செய்யும்.

**✍ நீங்கள் ஒருவகைக் கிறுக்குப் பிடித்தவர், ஏனைய படைப்பாளிகள் பற்றி எடுத்தெறிந்து பேசுபவர் என்றொரு கருத்து இலக்கிய உலகில் நிலவருகின்றதே, அது உண்மையா, இல்லையா? தெளிவாக விளங்கப்படுத்துங்கள்.**

**புத்தளம். ஆர். திவ்வியநாதன்**

☞ ஒன்றைத் தெளிவாக நம்புங்கள் 'மண் புழுவிலிருந்து மனிதனாக உயிர்த்து வளர்ந்து வந்த வன், நான்!' என எனது சுய வரலாற்று நூலில் எழுத்தில் பதிய வைத்துள்ளவன், நான். என்னை உருவாக்கியவர்கள்– ஆரம்ப காலத்தில் வழி நடத்தியவர்கள்– மிகப் பெரிய அற்புத மனிதர்கள். இளம் வயசிலிருந்தே நானொரு இடதுசாரி. எந்தக் கால கட்டத்திலுமே அதிலிருந்து பாதை விலகாதவன். என்னுடன் பழகிப் பார்த்தால் தெரியும், நான் எவரையுமே விரோதியாக எண்ணுபவனுமல்ல, பழகுபவனுமல்ல. எனது இன்றைய இந்த வளர்ச்சியை மனசார விரும்பாதவர்கள் கட்டிவிடும் கதைகளில் இதுவுமொன்று. இதுதான் உண்மை!

நான் கடைசிவரைக்கும் நானாக இருக்கவே விரும்புகின்றேன். அது தவறா என்ன?

**✍ மல்லிகையின் மெய்யான நீண்ட கால வாசகன் நான். உண்மையை எம் போன்றவர்களிடம் மனசு திறந்து கதையுங்கள். இத்தனை ஆண்டுக் காலமாகிவிட்டது. மல்லிகையைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றீர்களே, அதற்குக் கடன் கிடன் ஏதாவது உண்டா?**

**எஸ்.எஸ்.சசிதரன்**

☞ ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். சகல வாய்ப்பு வசதிகளையும் வைத்துக் கொண்டு, சிற்றேடொன்றைத் தொடர்ந்து நடத்த முடியவே முடியாது! அதுவும் இந்த இடைப்பட்ட யுத்த நெருக்கடி காலத்திற்குள் சிக்கியிருந்தபடி நடத்தவே முடியாது.

மல்லிகைக்கு ஏற்படும் மாதாந்தப் பொருளாதார நெருக்கடி என்னைச் சற்றுத் தயங்க வைப்பது உண்மைதான். சில கட்டங்களில் தினசரிப் பேப்பர் வாங்கவே வக்கிருக்காது. திகைத்துப் போயிருப்பேன். மாலையில் ஆயிரம் ரூபா நோட்டை மாற்றிச் சில்லறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்குவேன். நான் இந்த உலகில் என்னத்தைச் சம்பாதித்தேனோ தெரியாது. அற்புதமான உதவும் உள்ளங்களை மல்லிகையின் பெறுபேறாகப் பெற்றுக் கொண்டுள்ளேன். அதுவே மிகச் சிறந்த பெறுபேறல்லவா?

**✎ நீங்கள் கிழக்கு மாகாணப் பக்கமே வந்து நீண்ட நெடுங்காலங்களாகிவிட்டன. ஒரு தடவை இந்தப் பக்கம் வந்து போனால், என்ன?**

**கல்முனை. ச.பாக்கியராசா**

☞ எனக்கும் நீண்ட நாட்களாகவே மனசைக் குடைந்து கொண்டிருக்கும் ஆசைதான் அது. சும்மா வந்து ஆட்களைச் சந்தித்து விட்டு வருவதைப் பார்க்கிலும், ஏதாவதொரு இலக்கிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டால் பலரை, ஒரேயிடத்தில், ஒரே நேரத்தில் சந்தித்துப் பழகலாமல்லவா? என்னை உங்களது ஊருக்கு வரவழைக்க ஒரே வழிதான் உண்டு. இலக்கிய நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள என்னை அழைத்தால் வந்து, உங்களையெல்லாம் பார்க்கலாமென்ற எண்ணமும் உண்டு.

**✎ வித்வான் வேந்தனாரின் ஞாபகார்த்தமாகச் சமீபத்தில் மூன்று புத்தகங்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. வேந்தனாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர, அவரைப் பற்றி முற்றாகத் தெரியாது. தெரிந்து கொள்ள ஆசை. கொஞ்சம் அவரைப் பற்றிக் கூற முடியுமா?**

**வெள்ளவத்தை. ஆ.கந்தவேள்**

☞ பண்டிதர்கள் மட்டத்திலே நான் ரொம்பவும் மதிக்கின்ற ஒருவர் வேந்தனார், அவர்கள். அவரைப் பற்றிய எனது அனுபவங்களில் ஒன்று. நான் சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற காலகட்டம். சுமார், அரை நூற்றாண்டுக்கு முன். நான் எனது பிரசித்தி பெற்ற 'ஹொட்டின் ஹோல்' சைக்கிளில் கச்சேரியடிக்குப் போய் விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தேன். ஆஸ்பத்திரி வீதி வாசல் பக்கம் "டேய் தம்பி, கொஞ்சம் நில்லடா!" என்ற குரல் கேட்டது. திரும்பினேன். வீதியோரம் வித்வான் வேந்தனார் நின்று கொண்டிருந்தார். இறங்கி, நடந்து அவர் பக்கம் சென்றேன். "டேய் தம்பி! உனக்குச் சாஹித்ய விருது இப்ப கிடைச்சிருப்பதாகக் கேள்விப்பட்டேன். பத்திரிகையிலும் வாசித்தறிந்தேன். மெத்தச் சந்தோசமடா, எனக்கு! உன்னைப் போல இளந்தலைமுறை தலைநிமிர்ந்து திரிய வேண்டும். உன்னை நேரிலே காண வேண்டுமெனக் கூட மனசுக்குள் நினைச்சிருந்தனான்!"

வீதியோரம் நின்று வாழ்த்திவிட்டு வேந்தனார் போவிட்டார்.

இவரது வாழ்த்துக் கிடைத்ததற்கு ஒரு வாரத்திற்கு முன்னர், நண்பர் தெணியான் எனக்கொரு செய்தி கொண்டு வந்தார்.

கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் தங்களைப் படிப்பித்த பண்டிதர் ஒருவர், 'சாஹித்திய மண்டலச் சிருஷ்டி இலக்கியப் பரிசை தமிழுக்கு முதன் முதலில் பெற்றுக் கொண்ட டொமினிக் ஜீவாவை வரவேற்க யாழ்ப்பாண நகரமே திரண்டிருந்தது!' என அன்றை வீரகேசரியின் ஐந்து கலம் தலைப்புச் செய்தியை ஆசிரிய மாணவர்களுக்கு வாசித்துக் காட்டி "பாருங்கோவன், தமிழ் போற போக்கை! இந்தமுறை சாஹித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொண்டவன் ஒரு **நாசிவனாம்!** இனிமேல் இந்த மண்ணில் தமிழ் நாசமறுந்துதான் போகப் போகின்றது!" என்றாராம்.

வித்துவான் வேந்தனாரின் தனிச் சிறப்பு இங்கே தான் தொக்கி நிற்கின்றது.

– இங்கே தமிழைப் பாதுகாக்க முண்டியடித்து முழங்கிய பண்டிதர் கடைசியில் அவுஸ்திரேலியாவில்தான் தீ மூட்டி எரிக்கப்பட்டதாகக் கேள்வி.

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13 முகவரியில் வசிப்பவரும், மல்லிகை ஆசிரியரும், வெளியீட்டாளருமான டொமினிக் ஜீவா அவர்களுக்காக, கொழும்பு விவேகானந்த மேடு, 103A, இலக்கத்திலுள்ள Lakshmi Printers அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# WAHLS SHOPPING CENTRE

Dealers in Video Cassettes, Audio Cassettes, Cd's, Calculators, Luxury & Fancy Goods



152, Bankshall Street,
Colombo- 11.
Tel: 2446028,2441982
Fax: 323472


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org